
கல்கி
KALKI 27.7.2003 ரூ.6.00
"அப்படியெல்லாம் ஓட மாட்டேன்!"
-ஸ்ரீலேகா

Change your Smile





Dr. Arun N. Singh

DR. ARUN N. SINGH BDS., MPRS (Denmark)
Precision Restorative & Implant Surgery
Member : Scandinavian Society of Cosmetic Dental Surgeons
52/19, 1st Floor, Opp. don Bosco School, Casa Major Road,
Egmore, Chennai - 600 008
Phone : 28218453, 26480831, Cell : 9841272921
E-Mail : smilepower_in@yahoo.com

SMILE POWER™
DENTAL CLINIC & HOSPITAL



கல்கி மீது ஜெயலலிதா வழக்கு!

பக்கம் : 10&11

மரண அடி வாங்கிக்கொண்டு வந்திருக்கும் காதலனோடு காதலி வேகமாகச் செல்கிறாள். எங்கே? மருத்துவமனைக்கு? அல்ல. பதிவுத்திருமண அலுவலகத்துக்கு. சார் பதிவாளரும் அவர்களுக்கு உடனடியாகத் திருமணத்தை நடத்தி வைக்கிறார். (தொடர்ந்து வரும் வில்லன் கோஷ்டி சரியாக தாலி கட்டி முடிந்த அடுத்த நொடி அந்த அறைக்குள் நுழைகிறது). 'ரோஜா' தொலைக்காட்சித் தொடரில் காட்டுவதுபோல் இவ்வளவு எளிதாக காதலர்கள் தம்பதியாகிற வகையில் சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டால் காதல் ஜோடிகள் இயக்குனருக்குக் கோவில் கட்டிக் கும்பிடுவார்கள்!



விழாமலே இருக்க முடியுமா?

இந்தியாவில் முழுவதுமாகத் தயாரான முதல் விமானம் பறக்கும் என்ற பொதிகை செய்தி வியப்பை அளித்தது. இப்போதுதான் அப்படிப்பட்ட முதல் விமானம் உருவானதா?! அந்த விமானத்தின் பெயர் 'சரஸ்'! இப்போதுதான் சார்ஸ் உலகையே நடுக்கிவிட்டு கொஞ்சம் ஓய்ந்திருக்கும்போது, அதை நினைவுபடுத்தும் ஒரு பெயரை வைத்திருக்க வேண்டுமா?

அப்துல் ஹமீது என்றால் திரைப்படப் பாடல் போட்டிதான் நினைவுக்கு வரும். சமீபத்தில் பொதிகையில் ஞாயிற்றுக் கிழமை

களில் அறிவுத் திறன் போட்டி ஒன்றை நடத்துகிறார். குடும்பம் குடும்பமாக கலந்து கொள்ளலாம் என்பதுடன், ஓர் அணியில் மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்கள் இருக்க வேண்டும் என்றும் வைத்திருக்கிறார்கள். பொது அறிவு வளருவது இருக்கட்டும், குடும்ப பந்தம் கொஞ்சம் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. (அல்லது சரியாக பதிலளிக்காவிட்டால் தங்களுக்குள் அதிகம் சண்டை போட்டு கொள்வார்களோ?)

யாராவது தும்மினால்கூட நடிகர்கள் வெளிநாட்டுக்குப் போய் கலைவிழா நடத்துவார்கள்போல. நலிந்த தயாரிப்பாளர்களுக்காக துபாய் மற்றும் லண்டனில் அவர்கள் நடத்திய விழாவை ஒளிபரப்பி, சன் டீ.வி. ரசிகர்களை நலிவடைய வைத்தது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் பெரிதும் போரடிக்கத் தொடங்கிவிட்டன என்பது ஒரு புறமிருக்க, இடையிடையே காட்டப்படும் கலாட்டா செருகல்கள் வேறு எரிச்சலை மேலும் கிளப்புகின்றன. மும்தாஜ், சிம்பு, அப்பாஸ் ஆகியோர் விழாவுக்கு நடுவே மேடைக்குப் பின்னால் சக



நடிகர்களைப் பேட்டி எடுத்தவிதம் கொடுமை. அதுவும் குஷ்புவை அணைத்தபடி அப்பாஸ் 'நிகழ்ச்சி முடிஞ்சதும் என்ன செய்யறதா ப்ளான்?" என்று கேட்க, "என்ன தம்பி, எனக்கு ரெண்டு குழந்தைங்க இருக்கு. அதுங்களைப் பார்த்துக்கணும்" என்றார் குஷ்பூ அப்பாவியாக.

'**வி**ழாமலே இருக்க முடியுமா?', 'கனா கண்டேனடி தோழி', 'கல்யாணந்தான்' இந்த மூன்று பாட்டையும் ஏதோ 'பேக்கேஜிங் ஸ்பெஷலிட்டி'யில் போட்டு கிளப்புகிறார்கள். இரண்டு நிமிஷத்துக்கு ஒரு முறை இந்தப் பாடல்கள் ஏதோ ஏதோ சானலில் காதில் விழாமலே இருக்க முடியுமா?

- ஆதர்ஷ்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.


ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

-ஸ்ரீலேகா

"தமிழ் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்ச மொழி! அதுவும் தமிழில் பாட்டுப் பாட சான்ஸ் கிடைக்கிறபோது என் சந்தோஷத்துக்கு அளவே கிடையாது!" என்று சொல்கிறபோது ஸ்ரீலேகாவின் கண்களில் சந்தோஷ மின்னல்.


"சினிமா சான்ஸ் கிடைச்சால், எல்லோருமே இப்படிச் சொல்வது சகஜம் தானே?" என்று கேட்டால், "நான் பிறந்து வளர்ந்தது டெல்லியில். அப்பாவுக்குப் பூர்வீகம் தஞ்சாவூர், அம்மா சென்னை. டெல்லியில் பள்ளிக்கூடத்தில் படிக்கிறபோது தமிழும் படித்தேன். வீட்டுக்கு வெளியில் இந்தி; வீட்டுக்குள்ளே தமிழ்; தமிழ் மட்டுமே!" என்பது எங்கள் வீட்டுச் சட்டம். அதெல்லாம் விடுங்க. நான் இந்தி, மராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், அஸ்ஸாமி, கொங்கணி என்று மொத்தம் பதினாலு மொழிகளில் பாடியிருக்கிறேன். அந்த அனுபவத்தில் சொல்கிறேன்: தமிழில் பாட எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு" என்கிறார்.

தமிழ்நாட்டையே கலக்கிக் கொண்டிருக்கும் 'கல்யாணம் தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா?' என்ற 'சாமி' படப் பாட்டைப் பாடியவர். இவரது சமீபத்திய இன்னொரு சூப்பர் டூப்பர் ஹிட் பாட்டு: 'லேசா... லேசா...' படத்தின் 'ஏதோ... ஏதோ'



தமிழ் சினிமாவில் பாட வேண்டும் என்கிற ஆர்வத்தோடு, சென்னைக்கு வந்து இறங்கி சுமார் இரண்டரை வருடமாகப் போகிறது. ஒரு டஜன் பாடல்கள் போலப் பாடி விட்டார் ஸ்ரீலேகா.

"ஜோதிகா தோன்றும் இதயம் நல்லெண்ணெய் விளம்பரத்தில் வருகிற 'தினந்தோறும்...' பாட்டு கூட நான் பாடினதுதான்! சென்னைக்கு வந்தவுடன், எனக்குக் கிடைச்ச முதல் வாய்ப்பு அது. புதுக் குரல் தேடிக் கொண்டிருந்த விளம்



உஷார் உளவாளி!

ஈராக் நாட்டின்மீது அமெரிக்கா, தாக்குதல் நடத்தியபோது சதாம் ஹுசேன் அரண்மனையைக் கைப்பற்றிய ராணுவத்தினர், அதனுள்ளே ஏதாவது வெடி குண்டு இருக்கிறதா என்பதை வெளியிலிருந்தபடியே ஆராய அனுப்பிய ரோபோதான் இது.

\- பாரீஸ் பார்த்தசாரதி

பரப்பட இசையமைப்பாளரான கோபி சுந்தருக்கு, நான் பாடின பாட்டுகள், ஜிங்கிள்ஸ் அடங்கின சி.டியைக் கொடுத்தேன். அதைக் கேட்டு விட்டு, எனக்கு வாய்ஸ் டெஸ்ட் எடுத்தார். குரல் ஓ.கே என்றால், ரெக்கார்டிங் செய்வதாய் பிளான். ஆனால், வாய்ஸ் டெஸ்டின்போது, நான் பாடிய (தினந்தோறும் பாட்டு) ரொம்ப நல்லா இருக்குன்னு சொல்லி, அதையே பயன்படுத்திக்கிட்டார்."

சமீபத்தில் இதயம் டாட்ஸ் அப்பளத்துக்காக ஸ்நேகாவை வைச்சு விளம்பரம் எடுத்திருக்கிறார்கள். அந்தப் பாட்டும் ஸ்ரீலேகா பாடியதுதான்!

"சென்னைக்கு வந்தவுடன், நான் பாடின விளம்பர ஜிங்கிள்ஸ், கர்நாடக, இந்துஸ்தானி பாடல்களை வைத்து ஒரு சி.டி தயார் செய்துகொண்டு, தேவா, வித்தியாசாகர், ஹாரிஸ் ஜெயராஜ், பரத்வாஜ், பிரவீன்மணி, ரமேஷ், விநாயகம், தினா மணிவர்மா, இமான் என்று எல்லா இசையமைப்பாளர்களையும் சந்தித்து, என் சி.டியைக் கொடுத்தேன். சிலர் பாடிக் காட்டச் சொன்னாங்க. எனக்கு முதல் வாய்ப்புக் கொடுத்தவர் ஹாரிஸ் ஜெயராஜ்தான்! ஆனா, துரதிரஷ்ட வசமாக, அந்தப் பட ரிலீஸ் தள்ளிப் போய்க் கொண்டிருந்தது. இடையில் 'ஜங்ஷன்' 'பாப்கார்ன்' என்று பட வாய்ப்புகள் கிடைத்தன. செம பாப்





"அப்படியெல்லாம் ஓட மாட்டேன்!"



''காதலர் மீதிருந்த நம்பிக்கையே போயி டுச்சு.''

''உன்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட் டாருன்னு நினைக்கிறியா...?''

''இல்லை... சுண்டல்காரன் கடனை அடைக்க மாட்டாருன்னு நினைக்கிறேன்.''

- ஜி. சாயிலட்சுமி



''என்னப்பா ராப்பிச்சை... பத்திரிகை நீட்டறே?''

''அசோக்நகர் பங்களா கிரகப்பிரவேசம் வைச்சிருக்கேன் தாயே...!''

- பாபநாசம் தேவி

''நான் உங்களுக்கு என்ன கெடுதல் சார் செய்தேன்?''

''ஏம்பா?''

''இடைத்தரகர்களை நம்ப வேண்டாம்னு ஆபீஸ் வாசலில் போர்டு வச்சிட்டீங்களே!''

- உ. ராஜாஜி



புலராக்கியது 'சாமி' பாட்டுதான்'' என்று விக்ரம் ஸ்டைலில் கும்பிடு போட்டார்.

''ஆமாம்! அந்தப் பாட்டு ரெக் கார்டிங் முடிச்சுட்டு வந்து, என் பாட்டியிடம் பாட்டு வரிகளை சொன்னபோது, ''என்ன நீ! எதுக்கு இதுமாதிரி பாட்டெல்லாம் பாடறே?'' என்று கடிந்து கொண் டார். ஆனால் அந்த ஃபாஸ்ட் பீட் டியூன் எனக்கு ரொம்பப் பிடிச்சுது. சென்சாரில் அனுமதிக்க மாட்டாங் கனோன்னு சில வரிகளை மாற்றி எழுதி, இரண்டு, மூணு தடவை ரெக்கார்டிங் பண்ணினார்கள். இது போன்ற சுறுசுறுப்பான பாடல் களை நான் பாடினாலும், மெலடி பாட வேண்டும்னுதான் ரொம்ப ஆசை. என்னால் கஸல், பஜன், கர்நாடிக், ஹிந்துஸ்தானி, வெஸ் டர்ன், கிராமியப் பாட்டு என்று வெரைட்டியாகப் பாட முடி யும்...''

'குறும்பு', 'தென்னவன்', 'அர சாட்சி', 'திருடா... திருடி.' 'ஒற் றன்'னு வரிசையா வாய்ப்புகள் வந்துகிட்டுதான் இருக்கு. ஆனால் எல்லாமே டூயட்! ஸோலோ பாடணும்கிறது என் ஆசை! அதுவும், கண்ணாமூச்சி ஏனடா, கொஞ்சும் மைனாக்களே! சுவாசமே டைப்பில் ஸோலோக்கள் பாட ணும்.''

''கல்யாணம் கட்டிக்கிட்டு ஓடிப் போகப் பிடிக்குமா? ஓடிப் போயி கல்யாணம் கட்டிக்கப் பிடிக் குமா?''

''இதையேதான் எங்க வீட்லயும் கேட்டாங்க! நான் சொன்னேன். கல்யாணம் கட்டிக்கிட்டு ஓடிப் போமாட்டேன்; ஓடிப் போயி கல்யாணந்தான் கட்டிக்க மாட் டேன்!''

''சரி... அடுத்ததா ஏ.ஆர். ரஹ் மான் வாய்ப்புக் கிடைச்சதும், இந்திக்கு ஓடிப் போயிடுவீங்களா?

''மாட்டேன். தமிழை விட்டு ஓட மாட்டேன்.''

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

அட்டை, வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

கோ சம்ரக்ஷணம் ! லோகக சம்ரக்ஷணம் !

பசு பாதுகாப்பு பரம தர்மம்! பெரும் புண்ணியம் !



◆ வயது முதிர்ந்த, பால் வற்றிய, நோயுற்ற பசுக்களைப் பாதுகாக்க, உங்கள் அன்பு காணிக்கையை கனிவுடன் மனமுவந்து தாரீர் ! பசுவைப் பாதுகாத்து பராமரிக்க பசு மடத்திற்கு கோதானம் செய்து புண்ணியம் பெறுவீர்.

◆ அன்பர்கள் தங்களுடைய திருமண நாள், பிறந்த நாள், பண்டிகை நாட்கள் முன்னோர்கள் திதி நாட்கள் என தங்களுக்கு உகந்த நாட்களின் போது கோதானம் செய்து பசுக்களின் பராமரிப்பிற்கு நன்கொடை அளித்து மேலந்த தேவதா ஸ்வரூபியான ஸ்ரீகோமாதாவின் பூஜையால் சகல ஐஸ்வர்யங்களையும் பெறலாம்.

◆ நமது முன்னோர்களுக்கு உணவு அளிக்க விரும்பினால் பசுவிற்கு கொடுத்தால் போதும் அது நம் முன்னோர்களுக்கு சென்று அடையும்.

◆ ஆயிரம் தோஷமும் நீங்கி, முன்னோர்களின் அருளாசி பெற பசுக்களை போற்றி பரந்தாமனின் அருளைப்பெறுவோம்!

◆ முப்பத்து முக்கோடி தேவர்களும், அனைத்து புண்ணிய தீர்த்தங்களும் குடிகொண்டுள்ள பசுவிற்கு பூஜை செய்வதால் இறைவன் நமக்கு வேண்டிய வரங்களைத் தருவார்



பசுமடத்தில் நடைபெறும் கோபூஜையில் அன்பர்கள்...

பசு மடத்தில் உள்ள பசுக்களில் ஒரு பசுவை பராமரிக்க

ஒரு நாளுக்கு............ரூ :	15.00
ஒரு வாரத்திற்கு........ரூ :	105.00
ஒரு மாதத்திற்கு........ரூ :	465.00
ஒரு வருடத்திற்கு.....ரூ :	5400.00

தேவைப்படுகிறது

தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ரூ.500- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5400- அனுப்பும் அன்பர்களுக்கு, பசுவும் கன்றும் சேர்ந்த விக்ரகமும், '' ஆன்மீகம் மாத இதழ் '' ஆறு வருடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

பசுவை பாதுகாக்கும் திருப்பணியில் பங்குகொள்ளும் அன்பர்கள் விரும்பும் நாட்களில் கோபூஜை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். அன்றாடம் நடைபெறும் கோபூஜையில் அன்பர்கள் கலந்து கொள்ளலாம்.



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.


தங்களால் இயன்ற அளவு நன்கொடையை Cheque / D.D/ M.O. மூலமாக Shri Ghosala Seva Trust என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பசு மடம்

பசுக்கள் பாதுகாப்பு இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (P.O), சென்னை - 600 077.

TEL : 2495 9302, Fax : 2461 6466, E-mail:siva siva @ vsnl.net



பசுத்தாய் போற்றுவோம்! பசுவினம் காப்போம் !!

2 புத்தகங்கள்



முக்கூர்
லக்ஷ்மி நரசிம்மாச்சார்யாரின்

குறையொன்றுமில்லை

பாகம்-6



மீண்டும் சுமி



இவர்களுடனும்
இன்னும் புதிய
விஷயங்களுடனும்
'சாதனை' ஸ்பெஷல்!

ரூ.10,000 முதல் பரிசு
பெறும் சிறுகதை

கல்கி மீது ஜெயலலிதா வழக்கு!




பழைய வீராணம்... புதிய ஊழல்!

கல்கி 22.12.2002 இதழில் வெளியான 'பழைய வீராணம்; புதிய ஊழல்!' என்ற தலைப்பிலான கட்டுரையை ஆட்சேபித்து, தமிழக முதல்வர் சார்பாக அரசு தரப்பு வழக்குரைஞர், தலைமை செஷன்ஸ் நீதி மன்றத்தில் புகார் பதிவு செய்துள்ளார்.

அக்கட்டுரையை எழுதிய நிருபர், கல்கி ஆசிரியர், கல்கி பதிப்பாளர் ஆகிய மூவரும் தலைமை செஷன்ஸ் நீதிமன்றத்தில் செப்டம்பர் 8, 2003 அன்று ஆஜராகும்படி, தலைமை செஷன்ஸ் நீதிபதி ஜூன் 24, 2003 அன்று ஆணை பிறப்பித்துள்ளார்.

மேற்படி ஆணை, காவல்துறை குற்றப் பிரிவு ஆய்வாளர் மூலம் அனுப்பப்பட்டு, எமது அலுவலகத்துக்கு 14.7.2003 அன்று வந்து சேர்ந்துள்ளது.

அரசு தரப்பு வழக்குரைஞர் பதிவு செய்துள்ள குற்றச்சாட்டின் சாராம்சம் பின்வருமாறு:

சென்னை நகரம் தீவிரமான தண்ணீர்ப் பஞ்சத்தில் அவதியுறுகிறது. மக்கள் சொல்லொணாத் துயருக்கு ஆளாகிறார்கள். இது போன்ற கவலைக்குரிய சூழலில் எந்த நீராதாரங்களையெல்லாம் கொண்டு மக்கள் துயரைத் துடைக்கலாம் என்று அரசு தீவிரமாக ஆராய்கிறது. எனவே தமிழகத்தின் மிகப் பெரிய ஏரியான வீராணத்திலிருந்து, சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்வதில் எந்தத் தவறும் இல்லை.

கல்கி 22.12.2002 இதழில் வெளியான 'புதிய வீராணம், பழைய ஊழல்' என்ற தலைப்பிலான கட்டுரை முற்றிலும் defamatory ஆனது என்றும், பின்வருமாறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை உள்ளடக்கியது என்றும், நீதிமன்றம் முன் சமர்ப்பிக்கப்படுகிறது.



மெட்ரோ வாட்டரின் காண்ட்ராக்ட் பகுதி I, II குறித்து குறிப்பிடும் கட்டுரை, பகுதி மூன்று பற்றியும் விவரிக்கிறது. சேத்தியாதோப்பிலிருந்து ஓங்கூர் நதிக்கு, இணைப்புக் குழாய்கள் அமைக்கும் திட்டம் குறித்த செய்தி இது. இத் திட்டப் பணியினை மலேஷிய நிறுவனம் ஒன்றுக்கு (புனாகாகா நியாகா ஹோல்டிங்ஸ்) கூட்டு ஒப்பந்த முறையில் அரசு வழங்கியது என்றும், அரசு 275.57 கோடி என்று திட்டமிட்டு நிர்ணயித்தபோதிலும் மலேஷிய நிறுவனம் 292.57 கோடி தொகைக்கு ஒப்பந்தத்தைப் பெற்றது என்றும் கூறுகிறது.

பொதுப்பணித்துறை விதிக்கும் தொகைக்குத்தான் பணி நடைபெற வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் கிடையாது. பணி மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு, தங்கள் சௌகரியப்படி கொடேஷன் கொடுக்க உரிமை உண்டு.

ஆகவே, மெட்ரோ வாட்டர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் பேசி, தொகையைக் குறைக்க முற்படுவார்கள்.


தேவையைப் பொறுத்து விரைவில் முடிவெடுப்பதே சிறந்த நிர்வாகம். ஆகவே அரசு இவ் விஷயத்தில் கடமை தவறவில்லை.

மெட்ரோ வாட்டர் நிர்வாக இயக்குனரின் பணி மாற்றம், செயல் இயக்குனரின் பணிமாற்றம், ஆகியவற்றை இச் சம்பவத்துடன் இணைக்கிறது கட்டுரை. அமைச்சர் துரைராஜிடமிருந்து இலாகா பறிக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகிறது. மலேஷிய நிறுவனம் 'பினாமி'யான ஒருவருக்குச் சொந்தமானது என்றும் கூறுகிறது.

ஒப்பந்தப் பிரிவு IV வழங்கப்பட்டது எந்த சூழ்நிலையில் என்பதையும் கட்டுரையாளர் புரிந்து கொள்ளவில்லை. திட்டமிட்ட தொகை 275.57 கோடி. 225.15 கோடிக்கு டோஸ்டால் நிறுவனம் இப் பணியைச் செய்ய முன்வந்ததால், ஒப்பந்தம் அந் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. பிற்பாடு 377 கோடி செலவாகும் என்று இந்நிறுவனம் பல்டியடித்ததால், ஒப்பந்

ஹாக்கி டாக்கி!

"முப்பத்தைந்து வயசானால் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறணுமா என்ன? வயசுக்கும் விளையாட்டுக்கும் என்ன சம்பந்தமிருக்கு? நான் ஹாக்கியை விரும்பறேன்.



நாட்டுக்காக ஆடறதைப் பெருமையா நினைக்கிறேன். வயசைக் காரணமா காட்டி நான் ரிடையர் ஆக விரும்பலை" என்கிறார் இந்திய ஹாக்கி அணியின் மூத்த வயதுக்காரரான தன்ராஜ் பிள்ளை:

"நானும் 89 ஆம் ஆண்டு விளையாட வந்தேன். அவரும் அதே ஆண்டுதான் விளையாட்டுத் துறைக்கு வந்தார். இன்றைக்கு அவர் நிலை என்ன? என் நிலை என்ன? ஊம்!" என்று வெளிப்படையாகவே கொட்டித் தீர்த்திருக்கிறார். தன்ராஜ் பிள்ளையைப் பொறாமைப்பட வைத்த அவர் யார்...? கிரிக்கெட் கடவுள் சச்சினேதான்! - அப்பு

தத்தை ரத்து செய்தது அரசு. இறுதியில் 335.69 கோடிக்கு சுமான் இந்தியா நிறுவனத்திடம் ஒப்பந்தம் வழங்கப்பட்டது, கூடுதல் செலவு 57 கோடி.

பணிப் பிரிவு III, IV க்குப் பொதுப்பணித் துறை விதித்ததைக் காட்டிலும் கூடுதலான தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது, என்று கல்கி பத்திரிகை முடிவுக்கு வருவது தவறு. குறைந்த தொகைக்கு ஒப்பந்தம் கோரும் நிறுவனத்துக்குத்தான் அதனை வழங்க வேண்டும் என்று அவசியமில்லை; அரசு விதிக்கும் வேறு பல நிபந்தனைகளை நிறைவேற்றும் நிறுவனத்துக்கே ஒப்பந்தம் வழங்க இயலும். ஒப்பந்தம் மேற்கொள்ள விண்ணப்பித்த நிறுவனம் ஒன்று, கடைசி நிமிடத்தில் பின் வாங்கினால் அதற்கு அரசு பழி ஏற்க முடியாது. எதிர்பார்த்த லாபம் கிடைக்காததாலோ, நஷ்டத்துக்கு அஞ்சியோ, குறிப்பிட்ட நேரத்துக்குள் பணியை நிறைவேற்ற இயலாது என்பதாலோ, அந்நிறுவனம் பின் வாங்கியிருக்கலாம்.

குறைந்த பட்சத் தொகைக்கு ஒப்பந்தம் மேற்கொள்ள முன்வந்த நிறுவனம் பின்னர் தொகையை உயர்த்துமானால், அதற்கு அரசு விளக்கம் அளிக்க இயலாது.

மேற்படி கட்டுரை, காலத்தின் தேவையை உணர்த்தத் தவறியதோடு அல்லாமல், வீராணம் நீரை சென்னைக்குக் கொண்டு வரும் முயற்சியை விமர்சிக்கவும் செய்கிறது.

குறைந்த பட்சத் தொகைக்கு விண்ணப்பித்த டோஸ்டால் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் ஏன் வழங்கப்படவில்லை என்று வினா எழுப்பியதன் மூலம், டெண்டர்கள் குறித்த உண்மைக்குப் புறம்பான நிலை இக் கட்டுரையில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே, முதலமைச்சர் மற்றும் தமிழக அரசின் ஆளுமைக்கு இழுக்கு செய்வதே பத்திரிகையின் நோக்கம் என்பது தெளிவாகியுள்ளது.

இக் கட்டுரையைப் படித்துவிட்டு, லோக் சபா உறுப்பினர் திரு சி. சீனிவாசன் உள்படபலர் 'இதில் கண்டுள்ளவை உண்மைதானா' என்று முதல்வரிடம் விசாரித்துள்ளனர். வீராணம் திட்டம் வீணானது என்ற கருத்தை, கட்டுரை தெரிவிப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.


இத்தகைய ரிப்போர்ட்டுகள் அரசின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதற்கென்றே வெளியிடப்படுகின்றன என்று தெளிவாகிறது.

ஓய்வு பெற்ற பொறியாளர் சி.எஸ். குப்புராஜ், டெண்டர்கள் வழங்கப்பட்ட முறையை விமர்சித்துள்ளதாகவும் கட்டுரை குறிப்பிடுகிறது.

தமிழகத்தின் அரசியல் கட்சிகள், அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோரிடையே தனிப்பட்ட முறையிலும், பணி ரீதியாகவும், தன்னிகரற்ற மதிப்பும் நற்பெயரும் பெற்றுள்ளவரும், பொதுவாழ்வில் தூய்மையைக் கடைப்பிடிப்பவருமான தமிழக முதல்வருக்குக் கல்கி களங்கம் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆகவே கட்டுரையை எழுதிய நிருபர், கல்கி ஆசிரியர், பதிப்பாளர் ஆகிய மூவர் பேரிலும் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

அரசு தரப்பு வழக்குரைஞர்
(சென்னை நகரம்),
சிறப்பு அரசு வழக்குரைஞர்



ஆய்வறிக்கை சோறு போடுமா?...

மிக முக்கியமான அறிக்கை ஒன்று மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 'இந்தியா விஷன் 2020' என்ற அறிக்கை. 2020 ஆண்டுக்குள் இருநூறு மில்லியன் பேருக்குப் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டுமானால், அரசின் செயல் திட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்று விவரிக்கும் இவ்வறிக்கையை நாடறியச் செய்வது மிக மிக அவசியம்.

இவ்வறிக்கை மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் ஆகின்றன என்கிறார் 'இந்தியா விஷன் 2020' குழுத் தலைவர் எஸ்.பி.குப்தா. (இவர் திட்டக் கமிஷன் உறுப்பினரும் கூட)

இருநூறு மில்லியன் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டுமானால், சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவுகளுக்கு மிகுந்த முக்கியத்துவமும், மிகப் பெரிய உந்துதலும் அளிக்கப்பட வேண்டும் என்பது அறிக்கையின் பலமான சிபாரிசு. ஜப்பான், தென் கொரியா போன்ற நாடுகளில் சிறு மற்றும் மத்திய ரக தொழிலகங்கள்தான் அதிகபட்சமான வேலை வாய்ப்புகளை வழங்குகின்றன. அமெரிக்காவில் கூட, ஐம்பது சதவிகித பணியாளர்கள் சிறு தொழில் நிறுவனங்களில்தான் பணி செய்கிறார்கள்.




கல்கி



2003 ஜூலை 27
சுபானு ஆடி 11
மலர் : 61
இதழ் : 52

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



"இந்தியாவிலும் சிறு - மத்திய ரக தொழிலகங்களிலான வேலை வாய்ப்பு அதிகரித்து வருகிறது. ஆனால், இத்துறைகளில் பணியாற்றுவதற்குத் தேவையான ஆற்றலையும் பயிற்சியையும் நமது மிகப் பெரிய மக்கள் தொகைக்கு வழங்குவதில் நம் நாடு இன்னமும் பின்தங்கித்தான் இருக்கிறது" என்கிறார் டாக்டர் குப்தா.

"நமது மக்களின் அறிவும் கைத்திறனும்தான் எதிர்காலத்தில் நமது பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும்" என்கிறார்.

தற்போது இருபது - இருபத்தைந்து வயதுக்குட்பட்ட இளைஞர்களுள், சுமார் ஐந்து சதவிகிதத்தினர் மட்டுமே ஏதேனுமொரு தொழிற்பயிற்சி பெற்றவர்களா யிருக்கிறார்கள். இதே வயதுடைய தென் கொரிய இளைஞர்களுள் தொண்ணூற்றி ஆறு சதவிகிதத்தினர் தொழிற்பயிற்சி பெற்றவர்களாக விளங்குகிறார்கள்.


ஆக, நாம் கொரியா அல்லது ஜப்பானின் நிலையை எய்த வேண்டுமானால், நமது இளைஞர்கள் கைத் தொழில் பயிற்சி பெற்றாக வேண்டும்.

ஒரு நாட்டின் பொருளாதார வளம் முன்னேறினால் மட்டுமே அதன் மக்கள் முன்னேறிவிட முடியாது.

ஐ.நா. சபையின் அபிவிருத்தித் திட்டம் **(United Nations Development Programme)** நடத்திய ஆய்வுப்படி இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, அதன் மனித மேம்பாட்டுக்கு உதவவில்லை என்பது நிரூபணமாகியிருக்கிறது.

தனிநபர் வருமானம் அதிகரித்தபோதும் 2001க்குப் பிறகு கல்வித் தரம், சுகாதாரம் போன்றவை போதுமான அளவு உயரவில்லை என்கிறது இந்த ஆய்வு.

மனித மேம்பாடு என்பது வேறு; மனித வளம் என்பது வேறு. நம்மிடம் உள்ள மக்கள் சக்தி என்பது மனித வளம். இந்த மனிதவளத்துள் அடங்கிய இளைஞர்களின் தகுதியை மேம்படுத்துவதற்காக, நமது மத்திய - மாநில அரசுகள் என்ன சிறப்பு முயற்சிகள் எடுத்துள்ளன என்று ஆராய்ந்தால், ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது.



மனித மேம்பாட்டுக் குறியீட்டில் நமது நாடு பல புள்ளிகளை இழந்து பன்னிரண்டு இடங்கள் கீழே சரிந்திருக்கிறது.

இந்நிலையில்தான் தமிழக அரசு, நமது மாநிலத்தின் மக்கள் அபிவிருத்திக் குறியீடு உயர்ந்திருப்பதாக ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. 1981ம் ஆண்டில், மக்கள் அபிவிருத்தித் துறையில் ஏழாவது இடத்தில் இருந்த தமிழகம், இப்போது மூன்றாவது இடத்துக்கு உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கிறது.

எனினும், அறிக்கைகளும், ஆய்வுகளும் அவற்றின் மீதான விவாதங்களும் மட்டும் மக்களுக்குச் சோறு போடாது.

மக்கள் தொகையில், இளைய தலைமுறையினருக்குத் தொழிற்கல்வி அல்லது தொழிற்பயிற்சி தரும் திட்டமும், சிறு - மத்திய ரக தொழிலகங்களை உருவாக்கும் திட்டமும் கைகோத்துச் செயல்பட வேண்டும்.

தமிழகத்தில், அரசுக் கல்லூரிகளில் உயர் கல்விக்கான கட்டணங்கள் சகட்டு மேனிக்கு உயர்த்தப்பட்டிருப்பது எளிய மக்களைப் பெரிதும் பாதிக்கும். கல்வியை எட்டாக்கனியாக்கினால் முன்னேற்றம் காண முடியாது.

திறனற்ற மக்கள் வளம் பெருகிப் பயனில்லை; இத்தகைய மக்களிடம் பணப் புழக்கம் அதிகரிப்பதால் நன்மையைவிட ஆபத்தே அதிகம். நாட்டின் பொருளாதாரத்துக்கே ஆபத்து ஏற்படும். சம்பாதிக்கப்படும் பணம் முழுதும் செலவழிக்கப்படுமேயொழிய, முறையாக முதலீடாகாது. கைவசம் தொழில் இருப்பின், எந்தவொரு மனிதனும் சிறப்பான ஊதியம் பெற முடியும்; தொழிலின் மேன்மையையும் அதன் லாப-நஷ்டங்களையும் உணர்ந்து வருவாயைச் சிறப்பாக முதலீடு செய்யவோ, மறுபயன்பாடு செய்யவோ முற்படுவான்.

நமது மக்கள் தொகையின் கைத்திறன்களை வளர்க்க மத்திய-மாநில அரசுகள் ஒன்றையொன்று முந்திக் கொண்டு இயங்க வேண்டும். அக்கைத்திறனுக்குப் பணிகள் தரும் வகையில் சிறு தொழில்கள் பெருகவும் பல்வேறு வகைகளில் உதவ வேண்டும். ●

ப்ரியமான தோழி



ஒரே பாடல் காட்சியில் பட்டென்று லட்சியத்தை எட்டிப் பிடித்து விடுவான் நாயகன். உறவுகளைத் துறந்துவிட்டு அவனது லட்சியத்துக்குத் தோள் கொடுப்பாள் நாயகி. இந்த எவர்ஹிட் ஃபார்முலாவின் ஞானத்தகப்பன் விக்கிரமன் தான் இந்தப் படத்தையும் இயக்கினாரா என்று நம்பமுடியவில்லை! நல்லவேளையாக லலலா.... லலலா... பின்னணி இசையும், கனமான ஃபேமிலி சென்டிமெண்டுகளும் விக்ரமன் படமென்று உறுதி செய்து விடுகின்றன. ஆனால் இந்தமுறை கதை புதிதாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து, ஆண்-பெண் நட்பையும், அது தொடர்பான சிக்கல்களையும் கருவாக்கி, சிடுக்கில்லாத திரைக் கதையைக் கொண்டு படத்தை உருவாக்கியிருப்பதில், காட்சிகள் கடகடவென்று நகர்கின்றன. மாதவன் - ஸ்ரீதேவி நட்பு, மாதவன் - ஜோதிகா உறவு இரண்டையும், மென்மையும் நாகரிகமுமாய்ச் சித்திரித்திருப்பதன் மூலம், விக்கிரமனின் உலகத்தில் எல்லோருமே நல்லவர்களாகி, அடிக்கடி கண்களைக் கலங்கடித்து விடுகிறார்கள்.

குறிப்பாக ஜோதிகா, "உங்க ஃபிரண்ட்ஷிப்பை நம்பி நூறு ரூபாய் என்ன, நூறு லட்சம்கூட பந்தயம் கட்டலாம்" என்று கணவர் மாதவன், அவரது தோழி ஸ்ரீதேவி ஆகியோர் நட்புக்கு ஐஎஸ்ஓ தரச்சான்று தந்துவிட்டு, "நான் உங்க ஃபிரெண்டா இருந்திருக்கக் கூடாதா" என்று அவர் ஏங்கும்போது, அந்த ஏக்கம் நமக்குள்ளும் எட்டிப் பார்க்கிறது. ஒரு பாடலுக்கேனும், ஒரு ரசிகராவது எழுந்து கேன்டீன் பக்கம் போகாதது, எஸ்.ஏ.ராஜ்குமாரின் இசைச் சாதனை. பாடல் வரிகளைத் துளியும் சிதைத்து விடாமல் அவர் வடித்திருக்கும் எல்லா மெட்டுக்களும் உள்ளத்தைக் கிள்ளுகின்றன. மாதவனைத் தேடி ஜோதிகா கண்டடையும் காட்சியும், பிரிந்து போகும் மாதவனைக் கண்டு பிடிக்க ஸ்ரீதேவி பயன்படுத்தும் உத்தியும், நொந்து நூலாகி, வெந்து பாவாகிப் போன பழம் பெரும் ஐடியாக்களே என்றாலும், மருந்துக்கும் கவர்ச்சியோ, ஆபாசமோ இல்லாத படமென்பதால், 'மெட்டி ஒலி'க்குக் கூட லீவு விட்டுவிட்டு இல்லத்தரசிகள் குடும்பத்தோடு போய் சந்தித்துவிட்டு வரத் தகுதியான தோழி!

- விஷுவல்தாசன்

• அபவ் ஆவரெஜ்

எவரெஸ்டில் உப்பு மூட்டை!

"நான் நாற்பத்தைந்து கிலோ எடை தானிருந்தேன். அண்டர் வெயிட்! கூடவே ரத்தசோகை வேறு. 'சரி, நம்பளை எங்கே செலக்ட் பண்ணாப் போறாங்க?' என்று தோன்றினாலும் கிடைச்ச சான்ஸை நழுவ விடக் கூடாது, ஒரு கை பார்த்து விடணும்' என்பதில் குறியாக இருந்தேன்' என்கிறார் காமாட்சி.

'அழகுப் போட்டியில் வென்றிருக்கிறாரா, அல்லது மல்யுத்தப் போட்டியில் ஏதாவது சாதனை படைத்திருக்கிறாரா?' என்று நீங்கள் ஆர்வத்துடன் துடிதுடித்தால், பதிலுக்கு அடுத்த பாராவிற்கு ஏறவும்... ஸாரி... இறங்கவும். (எல்லாம் காமாட்சியுடன் இருந்ததன் விளைவு!)

நேஷனல் ஜியாகிரபிக் சானல் 'மிஷன் எவரெஸ்ட்' என ஒரு நிகழ்ச்சி நடத்துகிறது. இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கு பெற்றாலும், தெற்கு மண்டலத்திலிருந்து பல நூறு பேரைப் பின்னுக்குத் தள்ளி விட்டு முதல் பெண்ணாக வந்திருக்கிறார் தமிழ்ப் பெண் காமாட்சி. மடித்தால் டக்கென்று ஒடிந்து விடுவார் போல இருக்கும் காமாட்சியால் எப்படி முடிந்தது?

''பள்ளியில் படிக்கும் போதிலிருந்தே கூடைப்பந்து, பூப்பந்து என விளையாடுவேன். மலையேற்ற அனுபவமும் உண்டு. ஆனால் ஒரு வீராங்கனைக்கு உண்டான உறுதியான தேக அமைப்பு எனக்கில்லைதான். ஜாகிங், ரன்னிங்... இதெல்லாம் எப்போதுமே செய்ததில்லை. வலு என்பது உடலில் இருக்க வேண்டியதில்லை; மனத்தில் இருந்தால் சாதித்து விடலாம்'' என்கிறார் காமாட்சி.

காமாட்சியை பெண்டு நிமிர்த்தியிருக்கிறார்கள் என்றாலும், அதைப் பற்றி உற்சாகமாகச் சொல்கிறார். ''இரண்டு கிலோ மீட்டர், நாலு கிலோ மீட்டர் நன்றாக ஓட வைத்தார்கள். நேரத்தைப் பரிசோதித்து யார் ரொம்ப அதி விரைவாக வருகிறார்கள் என்று பார்த்து மீண்டும் மீண்டும் ஓட வைத்தார்கள். மிகக் குறுகிய ஒரு வட்டத்திலிருந்து பாய்ந்து செல்ல வேண்டும். உப்பு மூட்டை கணக்காக ஒருவரை முதுகில் சுமந்து ஓடிச் செல்ல வேண்டும்... மூச்சு வாங்க, பிடி நழுவ ஒரே சிரிப்பு; தனியாக என்றில்லாமல் குரூப்பாக எப்படிச் செயல்படுகிறோம் என்பதையும் கண்காணித்தனர். ஒவ்வொரு ரவுண்ட் முடிந்ததும் முன்னேறிச் சென்றாலும், பழகிய நண்பர்களை விட்டுப் பிரிய நேருகிறதே என வேதனை



* நடுவில் நிற்பவர் காமாட்சி



* வெள்ளை பனியனில் காமாட்சி

யாக இருக்கும். உத்தரகாசியில் கடைசித் தேர்வு நடந்தது. இருபது பேர் இருந்தோம். பயங்கரமாக டிரில் எடுத்துவிட்டார்கள். அதிலிருந்து ஐந்து பேரைத் தேர்வு செய்தார்கள். தென் மாநிலங்களின் பிரதிநிதியாக நான்...'' பெருமை பொங்கச் சொல்கிறார், பத்ராவதி பெண்ணான காமாட்சி.

இமயமலையில் 'பேஸ் காம்ப்' என்ற முகாம் வரைக்கும் சென்று சுமார் பத்து நாட்கள் இருந்துவிட்டு வந்ததையும் அவரால் மறக்க முடியவில்லை. டில்லியிலிருந்து காட்மண்டு வரை விமானம். அங்கிருந்து லூக்லா என்ற இடத்திற்குச் சென்று, அங்கிருந்து கால்நடையாக ஒரு நாளைக்கு ஐந்து மணி நேரம் மலையேற்றம் செய்திருக்கிறார்.

''எங்களுடன் ராணுவ வீரர்களும் வந்தார்கள். நேரு இன்ஸ்டிடியூட் ஆஃப் மவுண்டேனியரிங்கில் நல்ல பயிற்சி கொடுத்தார்கள். ''ஹய்யோ போதும் டார்ச்சர்'' என்று முதலில் நினைத்தாலும், போகப் போக ரொம்ப என்ஜாய் பண்ணினேன். சுமார் ஒரு லட்சத்து எழுபத்தாறாயிரம் அடிகள் ஏறினோம். எனக்கு கொலைப் பசி. ஒரு வெட்டு வெட்டிட்டேன். அப்புறம்தான் தெரிந்தது; அங்கே பிராணவாயு குறைவு என்பதால் மெதுவாகத்தான் சாப்பிடணுமாம். முதன்முறையாக பனிக்கட்டிகளையும் பனிமலையையும் பார்க்கும் த்ரில், அற்புதம்! மேலும் பல குழுக்கள் அங்கு கூட்டமாக ஏறிக் கொண்டிருந்தன. ஊனமுற்றோர் மட்டுமே அடங்கிய ஒரு குழுவைப் பார்த்து பிரமித்துப் போனேன். என்ன ஒரு வில் பவர்...!'' கண்களை விரித்தார் காமாட்சி.

எல் அண்ட் டி இன்ஃபோடெக்கில் பொறுப்பான பதவி வகிக்கும் காமாட்சி, எஃப்.எம். ரேடியோ கேட்டுத்தான் மலையேற்றத்திற்கு மனுப் போட்டிருக்கிறார்.

''பத்ராவதியிலிருக்கும் என் அப்பா எனக்காகப் பத்துக் கடிதங்கள் எழுதி, தினம் ஒரு கடிதம் வீதமாகப் படித்துக் கொள்ளச் சொன்னதை மறக்க முடியாது. என்னுடன் கூட ஏறிய நண்பர்களுடன் ஈ-மெயிலில் அரட்டை அடிக்கிறேன்.''

''இத்தனை நாள் டீ.வியில் என்னைப் பார்த்துப் பார்த்து வி.ஐ.பி. பந்தாவில் இருந்தேன். இப்போது நார்மலாகி விட்டேன்'' வெள்ளையாகச் சிரிக்கிறார் காமாட்சி.

- லதா சேகர்

நாசூக்கு... நவீனம்... நகைச்சுவை!



'சீதா ரவி' எழுதிய 'ஆராதனை' மினி தொடர் அருமை. 'அமெரிக்கா ஓர் அற்புத தேசம். ஆனால் அது எலக்ட்ரிசிட்டி மாதிரி; நாம் எச்சரிகையா பயன்படுத்தணும்,' - நல்ல புத்திமதி. தேச நல்லிணக்கம் சொல்லும் காதல் கதை.

சி. கஸ்தூரி ரத்தினம், தூத்துக்குடி

நடைமுறையில் உள்ளவற்றை நாசூக்காக, சிரிப்புத் துளிகளுடன் அள்ளி வீசி, நவீனமானத் தொடர் தந்து அசத்திவிட்டார்.

- ரங்கமணி கிருஷ்ணஸ்வாமி, சென்னை

மனித உறவுகளை நல்ல ஆலாபனை செய்தது 'ஆராதனை'. பக்தி, காதல், நகைச்சுவை என்று மசாலா மிக்ஸ் போல படிப்பதற்கு சுவாரஸ்யமாயிருந்தது.

''இந்திய பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா அவ குடும்பத்தையே பண்ணிக்கிட்டா மாதிரி'' - இது சத்தியமான வார்த்தை!

- ஆர்.நாகராஜன், சென்னை

ஆன்மிகம், வெளிநாட்டுச் சூழல், குடும்பப் பாங்கு, எல்லாவற்றையும் அளவோடு கலந்ததில் அழகாக வெற்றி பெற்றுவிட்டார். எழுத்து வன்மையில் அவர் முதிர்ச்சியடைந்து வருவது தொடரின் பல இடங்களில் ஜொலிக்கிறது.

- பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர்

ஒரு சாவி தொலைந்து போனது. புருஷன் பெண்டாட்டி இரண்டு பேரும் வேலைக்குப் போகிற வீட்டில், வாசல் கதவுக்கு இரண்டு சாவிகள் அவசியம். இரண்டு சாவிகள் இருந்தன. என்னிடம் ஒன்று; மனைவியிடம் ஒன்று. அதில் ஒரு சாவி தொலைந்து போனது.

தொலைந்து போனது அவளுடைய சாவியா யிருந்திருந்தால், அவளுடைய பொறுப்பின்மையை யும் அஜாக்கிரதையையும் சுட்டிக்காட்டித் திட்டித் தீர்த்திருப்பேன்.

தொலைந்து போனது என் கைவசமிருந்த சாவி. ராத்திரி மெல்ல இவளிடம் விஷயத்தைச் சொன்ன போது, "சரி, அதுக்கென்ன? வேறே டியூப்ளிக்கேட் சாவி செஞ்சிருவோம்'' என்றாள், புன்னகை கொஞ்சமும் தணியாமல்.

காலையில் இரண்டு பேரும் அமிஞ்சிக்கரைக் குப் போனோம். இவள் சொன்ன மாதிரியே, சாவி செய்யும் தொழிலாளிகள் சில பேர் நியாயமான இடைவெளிவிட்டு உட்கார்ந்து, தொழில் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஓய்வாயிருந்த சாவிக் கலைஞர் ஒருவரைச் சமீபித்து, ஒரிஜினல் சாவியைக் கொடுத்துவிட்டு, மாற்றுச் சாவிக்குக் காத்திருந்தோம்.

இரண்டு மூன்று சாவிக் கலைஞர்கள், நிழலுக் காக ஆளுக்கொரு குடையை நட்டு வைத்திருந் தார்கள். நம்ம ஆளிடம் குடை இல்லை. நல்ல வெயில் (அல்லது மோசமான வெயில்).

வெயிலிலிருந்து பாதுகாப்புத்தர ஒரு மரமோ, வேறு அம்சமான இடமோ அருகில் இல்லாத தால். இந்த ஆள் சாவி செய்யும் நேர்த்தியைப் பார்த்தவாறே நின்றிருந்தோம், வெயிலில், இந்தப் பக்கம் நானும், அந்தப் பக்கம் அவளும்.

''அங்க ஏன் போய் நிக்கற? இந்தப் பக்கம் வாயேன்'' என்று அழைப்பு விடுத் தேன்.

"நீங்க இந்தப் பக்கம் வாங்க'' என்றாள்.

மு ஹ ம் ம து



தட்டோட லபக்!

படத்தில் இருப்பவர் ஓர் உணவு விடுதி நடத்துகிறார். இங்கு சென்று சாப்பிடுபவர்கள், சாப்பிட்டுவிட்டு தட்டையும் சாப்பிட்டு விடலாம். ஆச்சரியமா இருக்கா? உணவு பரிமாறும் தட்டு உருளைக் கிழங்குத் தூளில் தயாரிக்கப்பட்ட ஒரு வித 'பிஸ்கெட்' தட்டு. அதனால் தட்டோட அப்படியே சாப்பிட்டு விடலாம்.



மலைக்கு வராவிட்டால், மலை முஹம்மதிடம் போகுந்தானே? போனேன்.

என்னோடு இவளும் வெயிலில் காய்ந்து கொண்டிருந்தது மனசுக்குக் கஷ்டமா

யிருந்தது.

"நான் சாவியத் தொலைச்சது உனக்கு



கொஞ்சம் நெருங்கி...

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

எவ்வளவு சங்கடம் பார், வெட்டியா வெயில்ல வந்து நிக்கற" என்று என் அனு தாபத்துக்குக் குரல் வடிவம் கொடுத்தேன்.

"இதென்னங்க சங்கடம்? நீங்க நல்ல காரியந்தானேங்க பண்ணியிருக்கீங்க" என்று சிரித்தான்.

''நல்ல காரியமா? எது, சாவியத் தொலைச்சதா?"

"சனிக்கிழமை தொலைஞ்சது. இதுவே ஒரு வீக்டேயா இருந்திருந்தா, இப்படி ஜாலியா வந்து நின்னுட்டிருக்க முடியுமா? இன்னிக்கி ஞாயிற்றுக் கிழமையாகப் போனது எவ்வளவு வசதி!"

தன்னுடைய பாஸிட்டிவ் மனோபாவத்தால் என்னைத் திக்குமுக்காட வைத்தான்.

"எதுக்கு இவ்வளவு இடைவெளி விட்டு நிக்கறீங்க? கொஞ்சம் ஒட்டித்தான் நில்லுங்களேன்."

அவளுடைய கட்டளையை ஏற்று ஒட்டினேன், ரோட்டில் எல்லாரும் பார்க்கிற மாதிரி உரசிக் கொண்டு நிற்க சங்கோஜமாயிருந்தாலும்...

சாவி வேலை முடிந்து ஸ்கூட்டரில் போகிறபோது கழுத்தைத் திருப்பிக் கேட்டேன்.

''ஏம்மா, இன்னிக்கி ஸண்டே தானே? இந்த ஒட்டல் உரசல் எல்லாம் வீட்லபோய் வச்சுக்கலாம்ல. என்ன ரோட் சைட் ரொமான்ஸா?" - தமாஷ் செய்தேன்.

''அது டூ இன் ஒன்னுங்க'' என்று சிரித்தாள்.

"அப்படீன்னா?"

''ஒன்னு உங்களோட சேர்ந்து நிக்கறதுலே உள்ள சுகம். இன்னொண்ணு..."

"இன்னொன்னு?"

"பாவம், அந்த சாவி செய்யற ஆள். வேகாத வெயில்ல ஒக்காந்து வேலை செய்யறான். நாம இரண்டு பேரும் வெயில்ல நிக்கிறது தான் நிக்கிறோம், கொஞ்சம் நெருங்கி சூரியனை மறைச்சிக்கிட்டு நின்னோம்னா, அந்த நேரத்துக்காவது அந்த ஆளுக்குக் கொஞ்சம் நிழல் கிடைக்குமே?'' என்றாள். ●

அரசியலா? சே! சே!



அரசியல்வாதிகளின் வாரிசுகள் என்றாலே, அரசியலில் குதித்தே ஆக வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாக இருக்கும்போது கொஞ்சம் மாறுபட்டிருக்கிறார் பிரமோத் மகாஜனின் மகள் பூனம் மகாஜன். பூனம் பைலட்டாக வேலை பார்க்கிறார். கதை, கவிதை என எழுதி மிச்சமிருக்கும் நேரத்தில் கணவர் ஆனந்த் ராவ் நடத்தும் ஐ.டி. பிசினெஸிலும் கை கொடுக்கிறாராம்.

"அப்ப... அரசியல்?"

"அது அப்பாவோட வேலை..." என்கிறார் கூலாக.

- அனு



அண்ணா நகர் சுந்தரம் பவுண்டேஷன் மருத்துவமனை அருகிலிருக்கும் அந்த இரண்டு மாடி வீடு, கடந்த ஒரு வருடமாக டல்லடித்துக் கொண்டிருக்கிறது. விஸிட்டர்களுக்கு காபி போட்டுக் கொடுத்துச் சலித்துப்போன சமையல்காரர் ஃப்ரீயாக இருக்கிறார். வைகோவின் வீடு அது. அவரது மனைவி அமெரிக்காவில் இருக்க, மகன் துரை.வையாபுரி மனைவி, இரண்டு குழந்தைகளுடன் இங்கே இருக்கிறார். ஒரு காலையில் வையாபுரியுடன் நட்பாகப் பேசிக் கொண்டிருந்தபோது...

“நான் பிறந்ததிலிருந்தே அப்பா அரசியலில் மிகவும் பிஸியாகிவிட்டார். காலில் சக்கரம் கட்டிக் கொள்ளாத குறை. எப்போதும் பயணம், பயணம், பயணம். ஆனால் எங்கிருந்தாலும் டெலிபோனில் பேசி விடுவார். அப்பாவை நான் தொந்தரவு செய்வது கிடையாது. எனது பிரச்னைகளைப் பெரும்பாலும் நானே பார்த்துக் கொள்வேன். வீட்டில் அவர் இருந்தால், சுற்றி கூட்டமாகத்தான் இருக்கும். ஏதாவது ஆலோசனை, அல்லது விஷயத்தைச் சொல்ல அவரது அறைக்குச் சென்றால், ஐந்து நிமிடப் பேச்சுக்கு அரை மணி, ஒரு மணி காத்துக் கொண்டிருக்க வேண்டும். அந்த வகையில் இப்போது சிறையில் அப்பாவுடன் பேச நிறையவே நேரம் கிடைக்கிறது. இந்தச் சோதனைக் காலத்தில் இது ஒரு சின்ன சந்தோஷம்.

அப்பாவிடம் சின்ன வயதுக் கொஞ்சல், மிஸ் பண்ணி விட்டீர்கள் போலிருக்கிறது.

"ஓரளவு அதில் உண்மை இருக்கிறது. என்னோடும், என் சகோதரிகளோடும் அப்பா சின்ன வயதில் அதிக நேரம் செலவழிக்க முடியவில்லை. எனவேதான் இப்போது எங்கள் குழந்தைகளுடன் நேரத்தைச் செலவழிக்க விரும்புகிறார். என் மகன் வருண் வைகோ, மகள், வானதி வைகோ ஆகியோரை ஜெயிலுக்கு அடிக்கடி அழைத்துக் கொண்டு போகிறோம். தேனியிலிருந்து என் சகோதரி மகளையும் அழைத்துக் கொண்டு போவோம். அவர்களைப் பார்க்கும்போது அப்பாவுக்கு இரட்டைச் சந்தோஷம். கைதாவதற்கு



கனவுக்கு என்ன பலன்?

எமலோகத்துக்கும் சேர்த்தே டிக்கெட் கொடுத்தனுப்பும் இரயில் விபத்துகள் சர்வ சாதாரணமாகிவிட்டதே என்ற கவலையில், திடீர் சோதனை செய்தார் மத்திய இரயில்வே அமைச்சர் நிதீஷ் குமார்.

சென்ற வாரம் பாட்னா ரயில் நிலையத்தின் பார்சல் அலுவலகத்துக்கு ஒரு திடுக் விஜயம் செய்தபோது ஆழ்ந்த தூக்கத்தில், அதுவும் லுங்கி, பனியன் அணிந்த அந்த அலுவலர் பிடிபட்டார். தூக்கத்தில் என்ன கனவு கண்டாரோ! அதற்கான பலன் உடனே கிடைத்துவிட்டதே!

- மஹேந்திரநாத் ராவ்.

ஆதாரம்: டைம்ஸ் ஆப் இந்தியா




அப்பாவின் பலம், பலவீனம்...

உழைப்புதான் பலம். பலவீனம் என்று நான் நினைப்பது, committed to ideology - கொண்ட கொள்கையை எந்தச் சூழலிலும் விடாப்பிடியாகப் பற்றிக் கொள்வது. இந்தக் காலத்தில் அரசியல்வாதிகள் அப்படியிருந்தால் தாக்குப் பிடிக்க முடியுமா? இது முழுக்க என் கருத்து.

சந்தோஷம், வருத்தம்!

தி.மு.க.வில் இருந்த போது கலைஞருக்கும், தி.மு.க.வுக்கும், நடக்கும் நல்ல விஷயங்









கள் எல்லாம் அப்பாவை சந்தோஷப் படவைக்கும். இன்னும் அப்பா, தமிழர்களின் ஒளி விளக்காக நினைப்பது கலைஞரைத்தான். தனிக்கட்சி துவங்கி

முன், குழந்தைக்கு நடை பழக, முக்காலி வாங்கிக் கொண்டு வந்தார்.

“அதிர்ச்சியடையச் செய்த பலே அரசியல்வாதிகள்...”

- வைகோ மகன் துரை. வையாபுரி பேட்டி...

1996ல் தேர்தலைச் சந்தித்தபோது, ம.தி.மு.க. பரவலாக வெற்றி பெறும் வாய்ப்பு இருந்தது. ஆனால் ரஜினிகாந்த் அவர்களின் அதிரடி அறிக்கைகளின் கூடுதல் பலம் காரணமாக, தி.மு.க. - த.மா.கா. கூட்டணி பக்கம் வெற்றிக் காற்று அடித்தது. அந்தச் சமயத்தில் அப்பா மிக வருத்தமாக இருந்தார். அதற்குக் காரணம், அந்த அளவுக்கு தமிழகம் முழுவதும் சுற்றிச் சுற்றி வந்து ஜெ. ஆட்சிக்கு எதிராக, பலமாகப் பிரசாரம் செய்து வந்தார். ஆனால் தேர்தலில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லையே என்று விரக்தியால் ஏற்பட்ட வருத்தம் அது.

அப்பாவின் கோபம்!

எல்லாவற்றையும் தாமே எடுத்துப் போட்டுக் கொண்டு செய்வார். எந்த வேலையிலும் பர்ஃபெக்ஷன் இருக்கணும் என்று எதிர்பார்ப்பார். மற்றவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்த பின்னும், அந்த வேலையை இவரும் கண்காணித்துக் கொண்டிருப்பார். சின்னச் சின்ன விஷயங்களுக்கு நிறையக் கோபம் வரும். காரில் அவரை வைத்துக் கொண்டு, டிரைவர் பெட்ரோல் போட பங்குக்குச் சென்றால் அப்செட் ஆகிவிடுவார். ஆனால் அவரது கோபம் நீர்க்குமிழி போன்றது. அதுவும் இப்போதெல்லாம் மிக மிகக் குறைந்துவிட்டது.

அரசியல்?

அப்பாவுடன் நாட்டு நடப்பு பற்றிப் பேசுவேன். மக்களாகச் சென்று கலந்து பேசி அவர்களது உணர்வுகளை அப்பாவுக்குச் சொல்வதுண்டு. மற்றபடி நமக்கு அரசியல் ஒத்து வராதுங்க! அரசியல்வாதிகள் தங்களது இலக்கை அடைய எந்த எல்லைக்கு வேண்டுமானாலும் செல்வார்கள். நாக்கைப் புரட்டிப் பேசுவார்கள் அப்பாவிடம் நேரடியாக அரசியல்வாதிகள் சிலர் பேசுவதையும், பின்னர் அவர்களே பொது மேடைகளில், வெளியே பேசுவதையும் கேட்டிருக்கிறேன். 'அடேங்கப்பா... இத்தனை பல்டியா?' என்று வியந்து போவேன். பலர் சொல்றது ஒன்று. செய்யறது ஒன்று. இந்தக் கருத்தெல்லாம் முழுக்க, முழுக்க என் சொந்த கருத்துகள். ஆனால் அப்பா 'மறப்போம். மன்னிப்போம்' பாலிஸி. அரசியல் ஆயிற்றே, கொஞ்சம் அப்படி இப்படி விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போக வேண்டிய நிலை. 'பலே அரசியல்வாதிகள்' என்று சிலரைப் பார்த்து அதிர்ச்சியடைந்திருக்கிறேன்.

வெளிநாட்டு வேலை ஆசை இல்லையா?

இப்போது தனியார் நிறுவன ஏஜென்ஸி நடத்தி வருகிறேன். இதற்கு முன்பு ஒரு கணினி மென் பொருள் நிறுவனத்தில் இருந்தேன். அந்த நிறுவனத்தில் என்னை அமெரிக்கா அனுப்புவதாக இருந்தார்கள், ஆனால் நான் விருப்பப்படவில்லை. அதற்குக் காரணம், பெரும்பாலான நாட்கள் அப்பா வீட்டில் இருப்பதில்லை. நான் வீட்டில் இருப்பதை மனத்தில் கொண்டு அப்பா அரசியல் பணியில் ஆழ்ந்துவிட முடிகிறது. மேலும், வாரம் ஒரு முறையோ, இரண்டு முறையோ வீட்டுக்கு அப்பா வரும்போது, நாங்கள் சந்தித்துக் கொள்ள முடிகிறது!

எழுத்தாளர் அப்பா!

சிறை வாழ்க்கை அவரைச் சிறந்த எழுத்தாளராகவும் மாற்றியிருக்கிறது. தொண்டர்களுக்கு வாரா வாரம் அவர் எழுதும் கடிதங்கள் உற்சாகத்தையும், எழுச்சியையும் உண்டாக்குகின்றன. "பொதுச் செயலாளர் இனி முன்பு போல் அதிகம் டூர் பண்ண வேண்டியதில்லை. கடிதம் எழுதினாலே போதுமே" என்று தொண்டர்கள் சொல்கிறார்கள்.

சந்திப்பு : ப்ரியன்
படங்கள் : ராஜன்



"கதையைக் கேட்டுட்டு தயாரிப்பாளர் என்ன சொன்னார்?"
"முதலுக்கு மோசம்'னு டைட்டில் வச்சா நல்லா பொருத்தமா இருக்கும்னு சொன்னார்!"
- சீர்காழி வி. ரேவதி



பரிகார ஸ்தலமான இராமேஸ்வரத்தில்
ஆடி அமாவாஸை திதியில்
அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அமாவாஸையில் சூரியனும் சந்திரனும் ஒரே நேர்க்கோட்டில் சஞ்சரிப்பதால் அன்றைய தினம் மனிதர்களது புத்தி சஞ்சலம் இல்லாமல் தெளிவாகச் செயல்படுகிறது. நாம் எதை நினைத்து அமாவாஸை தினத்தில், இராமேஸ்வரத்தில் தான தர்மங்கள் செய்கிறோமோ, அந்த எண்ணங்கள் பல மடங்கு உறுதியோடு வெற்றி பெறும். ஆடி அமாவாஸை அன்னதானம் மேலும் சிறப்பான பலன்களை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ஸ்ரீ இராமனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், முனிவர்கள் பலரும் இங்கு வந்து நீராடியதால் இராமேஸ்வரம் க்ஷேத்ரத்திற்கு மென்மேலும் பெருமை உண்டு. இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் என்றென்றும் அழியாத பலனைக் கொடுக்கும்.

இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக வடை, பாயசத்துடன் அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறிய தொகை மற்றும் அரிசி போன்ற உணவுப் பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000, ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் (அ) பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

இராமேஸ்வரத்தில் பிறந்தநாள், திருமணநாள் என நீங்கள் நினைக்கும் நாளில் அன்னதானம் செய்ய எமது அறக்கட்டளை சிறப்பான ஏற்பாடுகள் செய்துள்ளன. ஆகவே, நீங்கள் நினைக்கும் நாளில் அந்தணர்கள், சாதுக்கள், ஏழைகளுக்கும் அன்னதானம் செய்யலாம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது ஒத்துழைப்பை நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை
GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR,
THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA
☎: (044) 24900303, 24900603, 24416122 Mobile : 94441 16300

ஆடி அமாவாஸை நாளில் நேரில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் முன்பதிவு செய்துகொள்ளவும்.

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து



வௌவால்!

இது என்ன வினோத வௌவால்னு பார்க்கறீங்களா? இது பூனைதான். ரஷ்யாவில் நடந்த பூனைகள் கண்காட்சியில்தான் இந்தப் பூனை... வௌவ்வால் மாதிரி போஸ் கொடுக்கிறது.

தட்டப்பாறையின் ஒரு முனையில், மாமரத்து ஏரியைப் பார்த்த மாதிரி உட்கார்ந்திருந்தான் மாசிலான். இன்னும் உடம்பின் மேலிருக்கும் நீர்த்திவலைகள் காயவில்லை. நலம் விசாரிக்கும் குழைவுடன் காற்று அவன் மீது சாய்ந்தது. ஈரம் காயாத முடிக்கற்றைகள் ஒட்டிக் கிடந்தன. கண்களில் சிவப்பேறியிருந்தது. தண்ணீரை அதிகம் குடித்துவிட்டதால் மூக்கிலும், காதிலும் நீர் அளைந்து காரம் பட்டது போல எரிந்தது.

ஏரியின் பாதியை அல்லியும், தாமரையும், ஆம்பலும் ஆக்கிரமித்திருந்தன. அந்தக் கொடிகள் வலைபோல பின்னிக் கிடந்து, நீரில் இறங்குகிறவர்களை உள்ளே இழுத்துவிடும். மாசிலானுக்குத் தாமரை மொக்குகளைப் பார்த்தவுடன், கண்மணியின் நினைப்பு மட்டுமே தோன்றியது. அதிகாலைச் சூரியனின் பொன்னொளி மெழுகிய நீர்ப்பரப்பில்

2



அழகிய பெரியவன்

மினிதொடர்

கண்மணி சிரிப்பது தெரிந்தது. அலைகள் நீர்த்துளி போன்று மடிந்து மடிந்து அலைந்தன. அவனை கரையில் இழுத்து வந்து போட்டவர்கள் திட்டிக் கொண்டிருந்தார்கள்.

"ஏண்டா, புத்திகெட்டவனே. இங்கதான் கொடிங்க கெடக்குமே, சிக்குவோம்னு தெரியாதா? நீயென்னா புது ஆளா சொல்றதுக்கு?"

"செரி உட்றா. ஏதோ நேரம் செரியில்ல."

மாசிலானின் பக்கத்திலேயே தாமரை மொட்டுகள் ஈரத்துணியில் இருந்தன. கல்யாணமான பின்பு முதன் முதலாய் இப்போது பிரிகிறோம் என்பதாலா, இப்படி அலைக் கழிப்பு என்று நினைத்தான். அவளைப் பார்க்கப் போகும்போதெல்லாம் அவன் மனம் எல்லாவற்றையும் மறந்துவிடும். பீடி புன்னியை மூடும் பையனை அனுப்பி

நாணல் மனம்

இவனே ஒரு அன்னாடங்காய்ச்சி. இவங்கூட ஓடிப் போயிருக்கிறா பாரு. நாளைக்கு வயிறு காஞ்சி நிக்கும்போதுதான் பெத்தவங்க அரும தெரியும்



வைக்காமல், அவனே வருவான். அந்தக் காலத்திலேயே கண்ணாம்பு போட்டு அப்பன் கட்டி வைத்த மெத்தைவீட்டில் நடையில் தான் அவள் உட்காருவது. காரை பெயர்ந்தும், செங்கல் தெரிந்தும் சொத்தை யாக இருக்கும் சுவர்கள். வெட்டிக்கழித்த பொடி இலைகளின் குப்பையில் உட்கார்ந் திருப்பாள் கண்மணி. அவளது தம்பி இலைகளின் நரம்பை சின்னக் கத்தியால் சீவிக் கொண்டிருப்பான். கத்திரிகள் வெட்டும் சப்தம் இடைவிடாமல் கேட்கும். அவள் வாயைப் பிடுங்கிவிட்டு அவள் பேசுவதைக் கேட்டு நிற்பது அவனுக்கு விருப்பம்.

"தகடுக்குச் செரியா புடுச்சி வெட்டு."

"நீ புதுசா ஒண்ணும் எல வெட்டக் கத்துத்தர வேணா!"

"பீடி கொறஞ்சா உங்கப்பன் தருவானா?"

"ம்... பீடி மண்டிக்கார ஓங்கப்பன் தருவான்."

அவள் பேசும்போது அவஸ்தைப்படும் முகம் சிரிப்பைக் கிளப்பும். பன்றிகள் மேயும் தன் குடிசைக்கு இவள் வருவாளா? புறம் போக்கு நிலத்தில் தனிமையில் இருக்கிறது நம் வீடு. அவள் வந்து தங்கும் இடம் அதுவா? மாசிலானுக்கு அடிக்கடி உறுத்தும் எண்ணங்கள்.

காலை பத்து மணிக்கெல்லாம் இலை வெட்டை முடித்துக் கொண்டு, லேபிள் ஒட்டிய பீடிகளோடு மண்டிக்குக் கிளம்பு வாள் கண்மணி. வெறுங்கையுடனோ, பீடிக் கூடையுடனோ அவளுடன் போவான் மாசிலான். ஊரைத் தாண்டியதும் வருகின்ற நீண்ட ஆள் நடமாட்டமற்ற வழியில்தான் அவர்களின் கிண்டலும் கேலியும் தொடங்கும். ஆலமரங்களும், பூமரங்களும் தான் மௌனமாய்க் கேட்டு நிற்பவை. இளம் பகலின் வெயிலில் தனித்த பாதை யில் நடப்பார்கள். சில நேரங்களில் அவன் சீக்கிரம் போய்விட்டால், ஏதாவது ஒரு மரத்தடியில் காத்திருப்பான். மெல்லிய வெயிலின் இடையில் நுழைந்து, உடல் அதிராமல் அவள் வருவதைப் பார்த்துக் கொண்டிருப்பான். மெல்ல முதிரும் வெயில் போல வளர்ந்தது அந்தக் காதல்.

பச்சை பீடியைப் புகைத்தது போல் ஊரெல்லாம் இருமிக் கொண்டிருந்தது அவர்கள் காதல். மாசிலானுக்கு இலை வெட்டுவதை நிறுத்தச் சொல்லி அடித்தான் அவளின் அப்பன். சொந்தக்காரர்களின் கண்காணிப்பும் அதிகரித்து விட்டது.

இலைவெட்டிய கூலியைக் கொடுத்து விட்டுப்போக புன்னி மூடும் பையன் வந்து போனான். அழுது அழுது முகமெல்லாம் வீங்கியிருந்தது கண்மணிக்கு. ஒரு வாரத்துக்கு எங்கும் போகாமல் வீட்டுக்குள்ளேயே வளைய வந்து கொண்டிருந்தாள். அப்பன் இயல்பானதும், பீடி லேபிளை ஒட்டும் வேலையை மட்டும் தொடங்கினாள் கண்

இதுதான் அவார்டுக்கான ஆங்கிளா?



'ஈர நிலம்' என்று தலைப்பு வைத்ததாலோ என்னவோ சுடச் சுட ஒரே மூச்சில் படம் பிடித்தும், இன்னும் வெளியாகவில்லை. அதனால் என்னவென்று வெகுண்டு எழுந்த பாரதிராஜா, தமக்குப் பிடித்தமான காதல் களத்தில் 'கண்களால் கைது செய்' படத்தை ஆரம்பித்து விட்டார். கடந்த ஆண்டு 'கடல் பூக்களு'க்கான திரைக்கதை தேசிய விருது பெற்றவர் 'கண்களால் கைது செய்' படத் துக்கும் தேசிய விருது உறுதி

மணி. லேபிள் ஒட்டிய பீடிகளை எடுத்துக் கொண்டு மண்டிக்குக் கிளம்பியபோது, கூடையினுள் கொஞ்சம் துணிகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். மண்டியில் கணக்குத் தீர்ந்ததும், கூடையை வீட்டில் தந்துவிடச் சொல்லி ஊர்க்காரர் ஒருவரிடம் கொடுத்துவிட்டு, மாசிலானுடன் வண்டி ஏறினாள் கண்மணி.

ஒருவாரம் கழித்து வேலூர் பக்கமிருந்து இரண்டு பேரையும் கூட்டிக் கொண்டு வந்தார்கள். பஞ்சாயத்து நடந்தது. கண்மணி பெற்றவர்களுடன் போக விரும்பவில்லை. இருவரும் பஞ்சாயத்திலேயே மாலை மாற்றிக் கொண்டார்கள். அவள் காலில் விழுந்த போது முகத்தைத் திருப்பிக் கொண்டான் அப்பன்.

"இவனே ஒரு அன்னாடங்காய்ச்சி. இவங்கூட ஓடிப் போயிருக்கிறா பாரு. நாளைக்கு வயிறு காஞ்சி நிக்கும்போதுதான் பெத்தவங்க அரும தெரியும்."


மாசிலானுக்குச் சுரீர் என்றது. கண்மணியைப் பார்த்தான். பதற்றமின்றி அவன் கையைப் பிடித்திருந்தாள். கழுத்தில் மாலையுடன். அவளைப் பார்க்கப் பூரித்தது. நம்மையே நம்பி வருகிறாள், குறையின்றிப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியது அவன் மனம். அவன் அப்பாவும் அம்மாவும் அவனை ஒன்றும் சொல்லவில்லை. அந்த ஊரிலேயே தனியாக இருக்கும் அவன் அண்ணனும் பேசாமலிருந்து விட்டான். வீட்டுக்குப் போனதும் ஆரத்தியெடுத்தாள் அம்மா.

கல்யாணமாகிவிட்ட இந்தச் சில மாதங்களுக்கு அவளுக்கு எந்தச் சிரமமுமில்லைதான். இனிமேலும் இப்படியே இருக்க வேண்டுமே என்று அடித்துக் கொண்டது மனது.

வீட்டுக்குப் போவதற்கு எல்லாரும் மலையிறங்கினார்கள். காட்டில் செய்த சாப்பாட்டையும், தாமரை மொட்டுகளையும் எடுத்துக் கொண்டான் மாசிலான். கண்மணி தாமரை மொட்டுகளை வாங்கி, கன்னத்தில் அழுத்திக் கொண்டு லயித்தாள். அதன் மணம் இதமான நெடியாக பரவியது. மறுநாள் வேலைக்கென பீடி இலைகளை நனைக்காமல் எடுத்துக் கொண்டான் மாசிலான்.

காலையிலே வெயில் ஏறத் தொடங்கியிருந்தபோது, காய்ந்த பீடி இலைக் கட்டுகளைத் தண்ணீரிலே நனைத்து வைக்க, வாசலில் உட்கார்ந்திருந்தான் மாசிலான். இலைகளை நனைக்க வேண்டாம் என்று பொன்னுசாமி வந்து சொன்னான் அவனிடம். கூலி உயர்வு கேட்டு பீடித் தொழிலாளர்களின் காலவரையறையற்ற போராட்டம் தொடங்கிவிட்டதாகச் சொன்னான் பொன்னுசாமி.

(தொடரும்)


• வசீகரன்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இந்தப் படத்தில் புதுமுகங்கள். வசீகரன், ப்ரியாமணி, பிரபல இலங்கை நடிகரான சனத்குண திலக, காஞ்சனா, பாண்டுகா, சாந்தி குமார் என பல சிங்கள நடிகர்களை அறிமுகப்படுத்துகிறாராம்.

- ஸ்ரீ



என்கிறார். காரணம், காதலை இந்தக் கோணத்தில், இந்திய சினிமாவிலோ, உலக சினிமாவிலோ இதுவரை சொல்லவில்லையாம்.

• ப்ரியா மணி

புக் பேங்க்



பன்மொழிச் சிறுகதைகள் - 2 பாகங்கள் - தமிழாக்கம் : சௌரி

மொழி, இனம், மாநிலம் அனைத்தையும் கடந்தவை கற்பனைகளும் கதைகளும், அந்தந்த இனத்துக்கு, மொழிக்கு, அதன் வளமைக்கு, பெருமைக்கு என கற்பனைகள் பலப்பல உண்டு. அத்தகைய இந்திய மொழிகளின் வண்ணங்களைக் கூறும் வாழ்க்கைகளைப் பிரதிபலிக்கும், வானவில் சிறுகதைகளின் தொகுப்பு.

விலை ரூ.95/-

மண்ணுக்கு ஒரு முத்தம் - மதுரா

'போ'ரென்றால் புலிக்குணம், பொங்கு மின்பக் காதலென்றால் பூமணம்... சூரிய மானமென்றால் உலகுக்கே ஒரே இனம்' என்று சரித்திரமாய் வாழ்ந்த கட்டபொம்முவின் சிம்மக் குரல் அடங்கிய பின், சீமைத்துரைகளை நடுங்க வைக்கச் சீறி எழுந்த ஊமைத்துரையின் வரலாறு. பாளையத்துப்புலி வெள்ளையரை விரட்ட முற்பட்ட வீர சுதந்திரப் போராட்டம்.

திருவரசு புத்தக நிலையம், 13, தீன தயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017

விலை ரூ.50/-

உயிரின் பிரவாகம் - கவிஞர் ராணி

எதுகையாவது மோனையாவது, கருக்கமாவது விளக்கமாவது, வார்த்தைகள் கொட்டிக் கிடக்க வஞ்சனை எதற்கு? என்று வாரி வழங்குகிற பிரவாகம். பெண்ணடிமையும், ஆணாதிக்கமும் பெண்ணினத்தின் அறியாமையின் விளைவே என்று ஆணி அடித்துச் சொல்லும் உணர்ச்சிப் பிழம்பான கவிதைகளின் தொகுப்பு.

விஜயா பதிப்பகம், 20, ராஜ வீதி, கோவை - 1. விலை ரூ.45/-

கேரக்டரோ கேரக்டர் - கடுகு

கதைக்காக கேரக்டர்களை உருவாக்குவது எழுத்தின் மரபு என்றால், கேரக்டர்களையே கதைகளாக்கி விடுகிற திறன் அரிதுதான். 'மறதியா, சிந்தனையா என்று புரியாத பாவம்' என்று தன்னையே விமர்சித்துக் கொள்ளும் ஹாஸ்ய உணர்ச்சி புத்தகம் முழுதுமே ஊறிக் கிடக்கிறது.

அமரர் கல்கி விதைத்து, எஸ்.ஏ.பி. வளர்த்து, சாவியால் தழைத்து வளர்ந்த, அரை நூற்றாண்டாய் அலுக்காமல், சலிக்காமல் ஹாஸ்யரசம் வார்க்கும் 'கடுகி'ன் கட்டுரைக் கதைகளின் தொகுப்பு.

நந்தினி பதிப்பகம், அடையாறு, சென்னை - 20. விலை ரூ.40/-

ஒரு சாண் மனுஷன் (சிறுவர் நாட்டுப் புறக் கதைகள்) - கம்பீரன்

முன்னிரவு நேரங்களில் நிலா முற்றங்களில் உணவுத் தட்டுக்களோடு சுற்றி குழந்தைகள் ஆவென்று வாய் பார்க்க, பயமும், கேளிக்கையும், வீரமும், மந்திர தந்திரங்களும் நிறைந்த கதைகளை, தாத்தாவும் பாட்டியும் சொல்லக் கேட்கிற சொர்க்கம் இப்போது எத்தனை குழந்தைகளுக்கு வாய்த்திருக்கிறது?

நாட்டுப் புறங்கள் நமது அடையாளங்கள். அதில் பாட்டுக் கதைகளும், பேச்சுக் கதைகளும் பாரம்பரியங்களைச் சொல்பவை. வேக யுகத்துக்கு நாம் கொடுத்துவிட்ட விலைகள் அவை. குழந்தைகள் அவற்றை மீட்க இந்நூல் உதவும்.

செம்புலம், அச்சுதன் நகர், ஈக் காடுதாங்கல், சென்னை - 600 097. விலை ரூ.40/-

- விஷ்வக்



• பொடா பாயும்!

● நெல்லை ஆ. சண்முக சுந்தரம், திருச்சி - 2 ❒

? அரசு ஊழியர்களின் சலுகையைக் குறைத்ததன் மூலம் அரசுப் பணியில் இல்லாத பல கோடி மக்களின் வோட்டு ஜெ.வுக்குத் திரும்புமா?

! "நல்லா வேணும்பா இவங்களுக்கு" என்று சிலர் தொடக்கத்தில் நினைக்கலாம். ஆனால் அரசுப் பணியில் இல்லாத பல கோடி மக்களும் இன்றைய அரசியல் நடைமுறையில், அரசு ஊழியர்களை நம்பித்தான் காலம் தள்ள வேண்டியிருக்கிறது. எனவே, அரசு ஊழியர்களின் அதிருப்தி நாளடைவில் அவர்களையும் பாதிக்கும். அப்போது கருத்து மாறும். 'ஜெ'வுக்கு பாதகமாகவே அமையும்.



• மனம் விரும்பும்!

பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் எவ்வாறு உள்ளன..?



• தமிழ் திரும்பும்

நீங்கள் கேட்டவை-தராசு

● எஸ். இந்திரா, திருச்சி - 6

? தற்போதைய நிலையில் புத்திசாலித் தனமாக இருப்பது நல்லதா? கெட்டதா?

! புத்திசாலித்தனத்தைப் பிரகடனப் படுத்திக் கொள்ளாமல் புத்திசாலித்தனமாக இருப்பதே நல்லது - எப்போதும்.

● க. திருசங்கு, குருந்தம்பட்டு ★


? நடிகைகளுக்கு கருப்பாயி, சிகப்பி, முனியம்மாள், ராக்காத்தாள் என்று ஏன் பெயர் சூட்டுவதில்லை?

! அந்த தெய்வங்களின் கோபத்துக்கு ஆளாக வேண்டாம் என்பதால் இருக்கலாம்!

● இரா. சக்கரபாணி, மதுரை - 7

? இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் மார்க்ஸிஸ்ட் கட்சியும் தனித்தனியே செயல்பட்டாலும் அவற்றை ஒன்றாக இடதுசாரிகள் என்று அழைப்பதுபோல், தி.மு.க.வும், மதி.மு.க.வும் திராவிட இயக் கங்கள் என்ற பெயரில் இனி செயல்படும் என்று கருணாநிதி கூறியுள்ளாரே?

! இரு கட்சியினரும் ஒரே மேடையை ஆக்கிரமிக்கும்போது தி.மு.க.வினர் சகோதர பாசத்துடன் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டால் பொடா பாய்வதற்கு வாய்ப்பு உண்டு. எச் சரிக்கை தேவை. சிறைச் சாலைகளில் ரொம்ப இட நெருக்கடி!



★ நிஜம் தெரியும்!

● ஆர்.ஜி. கல்யாணி, திசையன்விளை

? காங்கிரஸ் ஆட்சி அமைக்க மெஜாரிட்டி இல்லாத பட்சத்தில் ஆதரவு தருவதாக ஜோதிபாசு அறிவித் துள்ளாரே..?

! ஆதரவு வெளியே இருந்தா? ஆட்சி யில் பங்கேற்று ஆதரவா என்பது தெளி வாகவில்லை என்றாலும் இப்போதைக்கு வரவேற்க வேண்டிய நல்ல முடிவு.

● ரேவதிப்ரியன், ஈரோடு - 1

? ஏ.ஆர். ரகுமானின் 'பாய்ஸ்' பட பாடல்களைக் கேட்டீர்களா? ... எப்படி?

! ஆங்கில 'பாப்' ஆல்பம் கேட்ட திருப்தி.

● பொன்விழி, அன்னூர்

? சூப்பர் ஸ்டார் ரஜினி நடிப்பாரா? அல்லது டைரக்‌ஷனில் ஈடுபடுவாரா...?

! 'அல்லது அரசியலுக்கு வருவாரா...?' என்று கேட்க மறந்துட்டீங்களே...!

● கே. துரைசாமி, மங்களப்பட்டி

? நீரின்றி அமையாது உலகு என்று கூறியிருக்கிறார்களே? நெருப்பு இன்றி மட்டும் உலகம் இயங்குமா...?

! பஞ்ச பூதங்களில் அதுக்குத்தானய்யா பஞ்சம் வரும். அதனால் அப்படிச் சொன் னாங்க!

● லெ.நா. சிவகுமார், சென்னை - 33

? திருமண வீடியோக்களில் காட்சி அளிப்பவர்கள் பெரும்பாலும் 'உம்' என்றோ, முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டோ காட்சியளிக்கிறார்களே...?

! மொய் எழுதின முகம் இயல்பாகவே அப்படித்தான் இருக்கும்!

● எம். இராஜேந்திரன், லால்குடி

? 'தமிழ் சினிமாப் பாடல்களில் ஆங் கிலத்தைக் கலந்த பாவம் என்னைத்தான் சேரும்' என்கிறாரே கவிஞர் வாலி...?

! அப்படி அந்தப் புண்ணியவான் ஆரம் பிச்சு வைச்சார்; இப்பல்லாம் ஆங்கிலத்தில் தான் தமிழைக் கலக்கறாங்க! போகட்டும், நல்ல தமிழுக்குத் திரும்ப வாலியே மீண்டும் வழிகாட்டலாமே!

● டி.வி. பாலகிருஷ்ணன், காந்தி நகர் (குஜராத்)

? நிதிஷ் குமார் பதவியேற்று இது



★ அரசியல் அழைக்கும்!



• திசை திரும்பும்!



• வேடம் கலையும்!

வரை 46 ரயில் விபத்துகள் நிகழ்ந்துள்ளன. சதம் அடித்துவிட்டுத்தான் அவர் வெளியேறுவாரா? லால்பகதூர் சாஸ்திரி ஒரு அரியலூர் விபத்துக்கே ராஜினாமா செய்தாரே...?

! ராஜினாமா நாடகம் ஸமதா கட்சிக் கூட்டத்தில் ஆரம்பித்து, பிரதமரின் நிராகரிப்புக் காட்சியில் மையப்பட்டு, மறுபடி கட்சிக் கூட்டத்தில் தலை தூக்கியிருக்கிறதே...! இதற்காக நூறு விபத்துக்கள் வேண்டாம். இனியேனும் விபத்துகள் இன்றி ரயில்கள் ஓடட்டும்.

● டி.சுப்ரமணியன், மேலையூர்

? அ.தி.மு.க. ஆட்சியில் வேலை இழந்த அரசு ஊழியர்கள், வரும் ஆட்சியில் வேலையில் அமர்த்தப்படுவார்கள் என்று கருணாநிதி கூறுகிறாரே...?

! அட்வான்ஸ் தேர்தல் வாக்குறுதி!

● நகை தி.மகராசன், கடமலைக்குண்டு

? நாரதர் வேலை, நக்கீரர் வேலை - எது தங்களுக்குப் பிடித்தது...?

! தராசு வேலை!

● நெய்வேலி க. தியாகராசன், கொரநாட்டுக்கருப்பூர்

? பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம்... தற்போது எவ்வாறு உள்ளன...?

! நீதிமன்றங்களில் அல்லாடிக் கொண்டிருக்கின்றன.

● ராஜன் மைந்தன், பரமக்குடி

? ஒரே நாளில் ஒரு லட்சம் அரசு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பிய அம்மாவின் 'தாயுள்ளம்' பற்றி...?

! அது தாயுள்ளம் அல்ல ; 'toy' உள்ளம்!

● ப. இராம் முருகன், சென்னை - 81

? என்னைவிட திறமை குறைந்தவர்களின் எழுத்தைப் படிக்கும்போது, என்னுடைய முயற்சி தடைப்பட்டு, என்னுடைய திறமை குன்றிப் போகுமோ என்கிற பயத்தினால் படிக்காமல் இருக்கிறேன் என்கிறாரே ஜெயகாந்தன்...?

! மிகச் சிறந்த நாவல்களிலும் சில குறைகள் நிச்சயம் இருக்கும். சாதா நாவல்களிலும் இலக்கியத் தரம் மிக்க பகுதிகள் ஒன்றிரண்டாவது இல்லாமல் போகாது. ஜெயகாந்தன் போன்ற சிந்தனையாளர்களுக்கு எதை ஏற்பது, எதைத் தவிர்ப்பது என்று தெரியாதா என்ன..!

❒ ரூ.100 பரிசு பெறுபவர் :
ஆ. சண்முகசுந்தரம்,
14, சிந்தாமணி பஜார்,
திருச்சி - 620 002.

● ரூ.50 பரிசு பெறுபவர் :
க. திருசங்கு,
குருந்தம்பட்டு - 630 305.
சிவகங்கை மாவட்டம்

“நான் தவறு செய்திருப்பின், தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்!” என்று ஒரு பக்தர் குருஜியிடம் கேட்டார்.

குருஜி : ஏன் நீங்கள் மன்னிக்கப்பட வேண்டும்? உங்களிடம் ஒரு நெருடல், அல்லது உறுத்தல், ஏற்பட்டுள்ளது. அதிலிருந்து விடுபட வேண்டும் என்ற காரணத்திற்காக மன்னிப்பு வேண்டும் என்று கேட்கிறீர்கள், இல்லையா? அந்த நெருடல் அப்படியே இருக்கட்டும். அது உங்களை மீண்டும் தவறிழைக்க விடாது. மன்னிப்பு நெருடலை நீக்கி விடும். பின்னர் மீண்டும் அதே தவறைச் செய்வீர்கள்!

“ஒரு தவறைத் தவறு என்று எப்படித் தெரிந்து கொள்ளுவது?”

குருஜி : தவறு என்பது நெருடலைத் தரும். நெருடலைத் தராதது தவறாக இருக்க முடியாது. அந்த நெருடல் மெய்யுணர்வைத் தொந்தரவு செய்யும்; செய்த தவறை மீண்டும் செய்யாதபடி தடுத்து விடும். எனவே, நெருடலோடு இருங்கள். குற்ற உணர்வோடு அல்ல. இது ஒரு மிக நுண்ணிய நிலை.

“குற்ற உணர்வுக்கும் நெருடலுக்கும் உள்ள வேறுபாடு என்ன?”

குருஜி : ஒரு குறிப்பிட்ட செயலால் வருவது குற்ற உணர்வு. ஒரு குறிப்பிட்ட முடிவு அல்லது விளைவால் வருவது நெருடல். செய்த செயலைக் குற்றமென உணரலாம். அச்செயலால் ஏற்பட்ட விளைவைக் குற்றமெனக் கொள்ளலாகாது. நடந்தது எதுவாக இருப்பினும், அது உங்களால் ஏற்பட்டதாக இருந்தாலும் சரி, அல்லது வேறொருவரால் ஏற்பட்டதாக இருந்தாலும் சரி. அது உங்களிடம் ஒரு நெருடலை ஏற்படுத்தும்.

“குற்ற உணர்வை எப்படிக் கடந்து செல்வது?” என்று ஒருவர் கேட்க, மற்றொருவர் வேடிக்கையாக, “தலைவரின்மீது பழி சுமத்துங்கள்!” என்று சொன்னார். கேட்ட எல்லோரும் சிரித்தனர்.

குருஜி : விவேகத்தின் மூலமாக, மனத்தின் இயல்பு, மெய்யுணர்வின் இயல்பு ஆகியவைகளைத் தெரிந்து கொள்ளுவதால், குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியின் விரிவான தோற்றத்தால், குற்ற உணர்வைக் கடந்து செல்லலாம்.

“நெருடலை உணராமலே, தவறுகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியாதா?”



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

நெருடலை

குருஜி : கற்றுக் கொள்ளல் என்பது அறிவாற்றல் சார்ந்தது. ஆனால் நெருடலை உணர்வது என்பது உணர்ச்சி நிலையைச் சார்ந்தது. உணர்ச்சிகளினால் ஏற்படும் விளைவு, அறிவாற்றலினால் ஏற்படும் விளைவுகளைவிடப் பலமானது. எனவே, மீண்டும் ஒரு முறை தவறு நிகழ, நெருடல் விடுவதில்லை.

"குற்ற உணர்வு என்பது அறிவாற்றல் சார்ந்தது. அறிவாற்றல் நம் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால் நெருடல் உணர்ச்சி நிலையைச் சார்ந்தது. உணர்ச்சி நம் கட்டுப்பாட்டில் இல்லை. உணர்ச்சிக்கு மதிப்பளித்து அறிவாற்றலை விட்டுவிடலாமா?"

குருஜி : உணர்ச்சிகளால் மட்டுமே நீங்கள் செயல்பட முடியாது. உணர்ச்சிகளின் தடுப்புக் கருவியாக (பிரேக்) அறிவாற்றல் உள்ளது. என்ன நடந்ததோ அது உங்கள் சக்திக்கு அப்பாற்பட்டது என்ற விழிப்புணர்வை நெருடல் தோற்றுவிக்கும். அந்த விழிப்புணர்வுதான் சரணாகதிக்கு உங்களை அழைத்துச் செல்லும். சரணாகதி உங்களைக் குற்ற உணர்விலிருந்து விடுவிக்கும்.

நெருடலில் இருந்து விழிப்புணர்வு.
விழிப்புணர்வில் இருந்து சரணாகதி.
சரணாகதியிலிருந்து விடுதலை.

விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு பெண், திடீரென மயக்கம் அடைந்தார். அவருடைய இரத்தக் குழாய் (அயோர்டா) விரிவடைந்திருந்தது. சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டு உடனே அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென்று மருத்துவர்கள் கூறினார்கள். அந்தப் பெண் குருஜியைத் தரிசித்து விட்டு மருத்துவமனைக்குச் சென்றார். மீண்டும் சோதனை செய்தபோது -

இரத்தக் குழாய் இயல்பான நிலையில் இருந்தது. மருத்துவர்களால் இந்த அற்புதத்தை நம்ப முடியவில்லை!


தில்லியைச் சேர்ந்த திரு சர்தானா என்பவரால் நடக்கக் கூட முடியவில்லை. இருதய மாற்றுச் சிகிச்சையும், பரிபூரண ஓய்வும் அவருக்குத் தேவைப்பட்டது. வாழும் கலையின் (ஆர்ட் அஃப் லிவிங்) அடிப்படைப் பயிற்சியையும், மேம்பட்ட (அட்வான்ஸ்ட்) பயிற்சியையும் எப்படியோ சமாளித்து அவர் செய்து முடித்தார். அதன்பிறகு அவரது இருதயம் இயல்பாக இருந்ததைப் பார்த்தபோது, மருத்துவர்களுக்குப் பெரும் ஆச்சரியம்.

குஜராத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன் பிறவியிலேயே செவிட்டு ஊமை. அந்தச் சிறுவன் முதன்முறையாக சுதர்சன க்ரியா செய்து முடித்த பின் பேச ஆரம்பித்தான். காதும் கேட்க ஆரம்பித்தது.

உணருங்கள்

என்ன வெண்மையோ! ஆஹா...


அபூர்வமாக சில வெள்ளைக் காகங்கள் இருப்பதுபோல், இந்த வெள்ளை நிற மயில் அமெரிக்காவில் உள்ளது.



எங்க ஊரு சங்கதி

நெல்லையிலிருக்கும் பத்தமடை எனும் அழகிய கிராமம்தான் எனது பிறந்த ஊர். பத்தமடை என்றதுமே உங்கள் எல்லாருக்கும் நினைவுக்கு வருவது ஸ்ரீ சிவானந்த குருவும் பத்தமடைப் பாயும்தான். ஸ்ரீ சிவானந்தர் அகில உலகப்புகழ் பெற்றவர். அருமையான தமிழில் எளிய உபதேசங்களைக் கூறி நம்மை மெய் மறக்கச் செய்வார். அவருக்கு அழகான சிலை வைத்து பூஜை, பஜனை எல்லாம் நடந்து வருகிறது. அவர் பெயரில் ஒரு மருத்துவமனையும் இருக்கிறது. நன்கு இயங்கி வருகிறது.

பல வருடங்களுக்குமுன் பிறந்த ஊருக்கு வந்திருந்தார் ஸ்ரீ சிவானந்தர். உயர்நிலைப் பள்ளியில் உரையாற்றினார். மொத்தம் முப்பது நிமிடங்கள் தான் அந்த ஊரில் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார் என்றாலும் அதிகப்படியாக பதினைந்து நிமிடங்கள் ஆகிவிட்டன. உடனே அவர் "முற்றும் துறந்தவன் என்று என்னைப் பற்றி எல்லாரும் சொல்கிறார்கள். அது எத்தனை பெரிய தப்பு, இதோ பாருங்கள். முப்பது நிமிடம் மட்டுமே இந்த ஊரில் இருக்க வேண்டும் என்று திட்டம் போட்டாலும் மேலும் பதினைந்து நிமிடங்கள் இருக்க வைத்துவிட்டதே? இதுதான் பிறந்த மண்ணின் மகிமை போலும்!" என்றார். ஒரே சிரிப்பலைதான்.



- சாரதா நாராயண்

இது தங்கவேலு ஸ்டைல்!

தலையில் சும்மாடு எதுவும் வைக்காமல், இருபத்தைந்து லிட்டர் நீர் நிறைந்த பானையைத் தலையில் சுமந்து, எல்லாவிதமான பாடல்களுக்கும் தாளம் பிசகாமல் நடனம் ஆடுகிறார் எம். தங்கவேல்.

ஈரோடு மாவட்டம் ஏரப்பம்பாளையம் என்ற கிராமத்து வாசியான இவர், விவசாயக்



* எம்.தங்கவேல்





* ஸ்ரீ சிவானந்தா

முற்றும் துறந்தவர்!

குடும்பத்தைச் சேர்ந்தவர். அவல் பூந்துறை அரிமா சங்கப் பொருளாளராக சமூக சேவையும் செய்து வருகிறார்.

பதினைந்து ஆண்டுகளாக பானை டான்ஸ் ஆடி வரும் இவர், எண்ணற்ற கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அசத்தி வருகிறார்.

நாட்டுப்புறம், சினிமா, பக்தி, பாப் என்று ஸ்டைலை திடீர் திடீரென்று மாற்றி ஆடும் தங்கவேலுவின் வித்தியாசமான முயற்சி பாராட்டுக்குரியது.

- எம்.ஈஸ்வரமூர்த்தி, அவல் பூந்துறை

போட்டோ புரட்சி!

நம்பினால் நம்புங்கள். மதுரையில் ஐம்பது பைசாவுக்கு ஒரு பாஸ்போர்ட் சைஸ் கலர்ப்படம் எடுத்துத் தருகிறார்கள். இருபத்தைந்து ரூபாய் கொடுத்தால் ஐம்பது படங்கள் உடனே கிடைக்கும். இது எப்படிச் சாத்தியம்? ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்தானே?

ராஜம் ஸ்டுடியோ ஆரம்பித்து நாற்பத்தேழு ஆண்டுகளாகிவிட்டதாம். அதனால் நாற்பத்தேழு ரூபாய்க்கு நாற்பத்தேழு படங்கள் எடுத்துத் தருகிறோம் என்று அவர்கள் அறிவித்துக் கூட்டத்தைச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தார்கள். வேறு சில போட்டோ ஸ்டுடியோக்காரர்கள் ராஜம் ஸ்டுடியோவுக்கே போய், பிலுபிலுவென்று பிடித்துச் சண்டை (வாக்கு வாதம்தான்) போட்டதாகவும், பிறகு "ஒரு ரூபாய்க்குப் படமெடுத்துக் கொடுத்து எங்கள் தொழிலைக் கெடுத்துவிட்டதால், வீம்புக்கு நாங்களும் ஐம்பது காசுக்குப் படமெடுக்கிறோம் பார்" என்ற முனைப்போடு தீபம் கலர் லேப்பில் ஆரம்பித்து, இப்போது நிறைய ஸ்டுடியோக்களில் படமெடுத்துத் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். மதுரையில் மொத்தம் நூற்று ஐம்பது போட்டோ ஸ்டுடியோக்கள் இருக்கின்றன. இதில் ஏழெட்டு ஸ்டுடியோக்கள், குறிப்பாக லேப் உள்ளவர்கள் மட்டுமே இப்படிப் புரட்சி செய்கிறார்கள்.

- இரா. கல்யாண சுந்தரம்

குருவே சரணம்!

வியாழக் கிழமை வந்துவிட்டால் போதும். அதிகாலை இரண்டு மணியிலிருந்து மதியம் பதினொரு மணி வரை நகர்வதற்குக் கூட இடம் கிடைக்காமல், அந்தத் திருக் கோயிலை வலம் வர ஆரம்பித்து விடுகிறார்கள் பக்தர்கள். நூற்றியெட்டு சுற்றுகள். எண்ணிக்கை மறந்து விடாமல் இருக்க கொண்டைக் கடலை அல்லது மிட்டாய் வைத்து நமஸ்கரிக்கிறார்கள்!



* விழுது இறக்கும் கட்டளை!

சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூரிலிருந்து தெற்கே எட்டு கி.மீ. தொலைவில் உள்ள பட்டமங்கலம் தக்ஷிணாமூர்த்திக் கோயிலில்தான் இந்தக் காட்சி. சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களில், முப்பத்து மூன்றாவது திருவிளையாடல் நடந்த ஸ்தலமான பட்டமங்கலத்தில் இறைவன் சோமசுந்தரக் கடவுளாகக் காட்சி தருகிறார். இராமேஸ்வரத்தில் வழிபாட்டில் உள்ள இருபத்தியேழு நட்சத்திரங்களுக்கான லிங்கங்களில் திருவோணம் நட்சத்திரத்திற்குரிய லிங்கம் தான் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள்.

சிவபெருமானிடம் கார்த்திகைப் பெண்கள் ஆறு பேரும் அட்டமாசித்திகளை உபதேசிக்க வேண்டினர். அவ்வாறு சிவ பெருமான் உபதேசம் செய்த போது அதில் கவனம் செலுத்தத் தவறிய பெண்களை "நீங்கள் பட்டமங்கை என்னும் தலத்தில் உள்ள ஆலமரத்தடியில் கற்பாறையாகக் கிடக்கக் கடவீர்கள்" என்றும் சபித்துவிட்டார். மனம் கலங்கி, முறையிட்ட அந்த கார்த்திகைப் பெண்களுக்கு மீண்டும் சாப விமோசனம் தருவதற்காக, சிவபெருமான் குருவாகக் காட்சியளித்து, சாப விமோசனம் கொடுத்த இடம் பட்டமங்கலம். இது திருவிளையாடல் புராணம் கூறும் கதை.



* மஞ்சள் கயிறு பிரார்த்தனை...



* பட்டமங்கலம் திருக்கோயில்.

உயர்ந்து அடர்ந்து படர்ந்த பழைமையான ஆலமரத்தடியில் ஞான ஸ்வரூபியாக, தக்ஷிணாமூர்த்தி அருள்பாலிக்கிறார். கன்னிப் பெண்கள் தக்ஷிணாமூர்த்தி கோவிலுக்குப் பின்புறம் உள்ள ஆலமரத்தில் மஞ்சள் கயிறைக் கட்டிவிட்டு, பதினொரு வியாழக்கிழமைகள் தொடர்ச்சியாக நூற்றியெட்டு



குருப்பெயர்ச்சி: ஜூலை 23



• ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி

சுற்றுக்கள் சுற்றிவர, திருமணத் தடை நீங்கி விடுவதாக நம்பிக்கை.

புத்திர பாக்கியம் இல்லாத தம்பதியர் திங்கட்கிழமை அல்லது அமாவாசை தினத்தில் இங்குள்ள ஆலமரத்தின் விழுது ஒன்றில் மூங்கிலைக் கட்டி, விழுது பூமியில் இறங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர, அந்தத் தம்பதியருக்குப் புத்திர பாக்கியம் கிடைக்கிறதாம். இந்த விழுது இறக்கும் கட்டளைக்குத் தனியே கட்டணம் செலுத்தி, கோவிலில் முன் அனுமதி பெற வேண்டும்.

ஒவ்வொரு வியாழக் கிழமையும் குரு ஓரை நேரத்தில் மதியம் ஒரு மணியிலிருந்து இரண்டு மணி வரை நடைபெறும் அபிஷேக வழிபாடு சிறப்பு வாய்ந்தது. இது தவிர, ஆடி அமாவாசையும், தை அமாவாசையும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

பத்து ஏக்கர் பரப்பளவில் உள்ள இத்திருக்கோயிலில் ஆண்டு தோறும் உத்திராயண காலத்திலும், தட்சிணாயன காலத்திலும் சில தினங்கள் சூரியக் கதிர்கள் திருக்கோயிலின் கருவறையில் சோமசுந்தரேஸ்வரர் திருவுரு மீதும், தக்ஷிணாமூர்த்தி திருவுரு மீதும் விழுகின்றன.

கட்டுரை, படங்கள்: கி. சிங்காரவடிவேல்



சிவகாமியின் சபதம்

பதினேழாம் அத்தியாயம்

உறங்கா இரவு

அரண்மனைப் பூங்காவனத்திலிருந்து திரும்பி புவன மகாதேவியின் அரண்மனைக்கு வந்த மங்கையர்க்கரசி, அன்று மாலையெல்லாம் தரையிலே நடக்கவில்லை. ஆனந்த வெள்ளத்திலே மிதந்து கொண்டிருந்தாள். அவள் சற்றும் எதிர்பாராத காரியம் நடந்து விட்டது. அத்தகைய பாக்கியம் தனக்குக் கிட்டும் என்பதாக அவள் கனவிலும் எண்ணவில்லை. அவளுடைய தந்தை போர்க்களத்திற்குப் போன பிறகு அவளுடைய வாழ்க்கையே சூனியமாகப் போயிருந்தது. அந்தச் சூனியத்தை நிரப்பி அவளுடைய வாழ்க்கையை இன்பமயமாக்கக்கூடியதான சம்பவம் ஒன்றே ஒன்றுதான். அந்த அற்புதம் அன்றைக்கு நடந்துவிட்டது. அவளுடைய உள்ளத்தையும் உயிரையுமே கவர்ந்திருந்த காதலன், எளிதில் யாரும் பிரவேசிக்க முடியாத அந்தப் பல்லவ அரண்மனைக்குள்ளே அவளைத் தேடி வந்து சந்தித்தான். சந்தித்ததோடல்லாமல் அவளிடம் தனது இடையறாக் காதலையும் சிறிதும் சந்தேகத்துக்கு இடமின்றி வெளியிட்டான்.

அவளுடைய வாழ்க்கையை ஆனந்தமயமாக்கக் கூடிய பேறு வேறு என்ன இருக்கிறது? அவளுடைய கால்கள் தரையிலே படியாமல், நடக்கும்போதே நடனமாடிக் கொண்டிருந்ததில் வியப்பு என்ன இருக்கிறது?

இந்த அற்புத சம்பவத்தைப் பற்றி யாரிடமாவது சொல்ல வேண்டுமென்று அவளுடைய உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால், யாரிடம் சொல்வது? சொல்வதானால், தன்னைப் புதல்வியெனக் கொண்டு அன்பு செலுத்தி வரும் புவன மகாதேவியிடந்தான் சொல்ல வேண்டும்.

ஆனால், அன்று மாலை, புவனமகா தேவியின் முகபாவமும் சுபாவமும் ஓரளவு மாறியிருந்தன. தன் அந்தரங்கத்தை வெளியிட்டுப் பேசக்கூடிய நிலைமையில் அவர் இல்லையென்பதை மங்கையர்க்கரசி கண்டாள். சிவபூஜையின்போது கூடத் தேவியின் திருமுகத்தில் வழக்கமான சாந்தமும் புன்னகையும் பொலியவில்லை. மங்கையர்க்கரசியிடம் அவர் இரண்டொரு தடவை அகாரணமாகச் சிடுசிடுப்பாகப் பேசினார். மற்ற நாளாயிருந்தால் தேவி அவ்விதம் சிடுசிடுப்பாகப் பேசியது மங்கையர்க்கரசியின் உள்ளத்தை வெகுவாக வருத்தப்படுத்தியிருக்கும். ஆனால் இன்று மங்கையர்க்கரசி அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. தன் மனத்தில் பொங்கி வந்த குதூகலத்தைத் தேவியிடம் பகிர்ந்து கொள்ள முடியவில்லையே என்று மட்டுந்தான் அவள் கவலைப்பட்டாள்.

இரட்டி ஒன்றரை ஜாம நேரம் ஆனபோது, மங்கையர்க்கரசி வழக்கம் போல புவனமகாதேவியின் படுக்கையறைக்குப் பக்கத்தில், தனக்கென்று அளிக்கப்பட்டிருந்த அறையில் படுத்துக் கொண்டாள். ஆனால், உறக்கம் மட்டும் வரவேயில்லை; கண்ணிமைகள் மூடிக் கொள்ளவே மறுத்து விட்டன. துயரத்தினாலும் கவலையினாலும் தூக்கம் கெடுவதைக் காட்டிலும், எதிர்பாராத சந்தோஷத்தினாலும் உள்ளக் கிளர்ச்சியாலும் உறக்கம் அதிகமாகக் கெடும் என்பதை அன்று மங்கையர்க்கரசி கண்டாள். சற்று நேரத்துக்கெல்லாம் தூங்கும் முயற்சியையே விட்டு விட்டுத் தன் வருங்கால வாழ்க்கையைப் பற்றிய மனோராஜ்யங்களில் ஈடுபட்டாள்.

இவ்விதம் இரவின் இரண்டாம் ஜாமம் முடிந்து மூன்றாவது ஜாமம் ஆரம்பமாயிற்று.

அந்த நடுநிசி வேளையில், நிசப்தம் குடி கொண்டிருந்த அந்த அரண்மனையில் திடீரென்று கேட்ட ஒரு சப்தம் மங்கையர்க்கரசியைத் தூக்கி வாரிப் போட்டது. அது வெகு சாதாரண இலேசான சப்தந்தான். வேறொன்றுமில்லை; ஏதோ ஒரு கதவு திறக்கப்படும் சப்தம். ஆயினும், அந்த வேளையில் அத்தகைய சப்தம் மங்கையர்க்கரசிக்கு ஏதோ ஒருவிதக் காரணமில்லாத பயத்தை உண்டாக்கியது.

அவள் படுத்திருந்த அறைக்கு வெளியே தாழ்வாரத்தில் மெல்லிய காலடிகளின் சப்தம் அவள் கவனத்தைக் கவர்ந்தது. அந்த நேரத்தில் புவனமகாதேவியின் அறைக் கருகே அவ்விதம் நடமாடத் துணிந்தது யாராயிருக்கும்? இன்னதென்று தெளிவாய்த் தெரியாத திகில் கொண்ட உள்ளத்துடன் மங்கையர்க்கரசி தன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். காலடிச் சப்தம் மேலும் மேலும் நெருங்கித் தன் அறைக்குச் சமீபத்தில் வருவதாகத் தோன்றியது. அப்படி வருவது யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் அவளைப் பீடித்தது. சப்தம் செய்யாமல் படுக்கையிலிருந்து எழுந்து, அவளுடைய அறையிலிருந்து வெளித் தாழ்வாரத்தை நோக்கிய பலகணியின் அருகே சென்று வெளியிலிருந்து தன்னைப் பார்க்க முடியாதபடி மறைவாக நின்றாள். மறுகணமே அவளுடைய ஆவல் நிறைவேறியது. தாழ்வாரத்தில் இருவர் வந்து கொண்டிருந்தார்கள். முன்னால் கையில் தீபம் ஏந்திய தாதிப் பெண்ணும் அவளுக்குப் பின்னால் வானமாதேவியும் வந்து கொண்டிருந்தார்கள். ஆம்! அது வானமாதேவிதான். ஆனால், அவருடைய முகம் ஏன் அப்படிப் பேயடித்த முகத்தைப் போல் வெளுத்து விகாரமடைந்து போயிருக்கிறது! வந்த இருவரும் மங்கையர்க்கரசியின் அறையைத் தாண்டி அப்பால் போனதும், சற்றுத் தூரத்தில் அதே தாழ்வாரத்தின் மறுபுறத்தில் திறந்திருந்த ஒரு கதவு, மங்கையர்க்கரசியின் கண்ணையும் கவனத்தையும் கவர்ந்தது. அவள் இந்த அரண்மனைக்கு வந்த நாளாக மேற்படி கதவு திறக்கப்பட்டதைப் பார்த்ததில்லை. வானமாதேவியின் மாளிகையிலிருந்து இந்த மாளிகைக்கு வருவதற்கான சுரங்க வழியின் கதவு அது என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள்.

அமரர் கல்கி



அந்தச் சுரங்க வழி மூலமாகத்தான் வானமாதேவி இப்போது வந்திருக்க வேண்டும்! இந்த நடுநிசியில் அவ்வளவு இரகசியமாகச் சுரங்க வழியின் மூலம் அவர் எதற்காக வந்திருக்கிறார்?

இந்தக் கேள்விக்கு மறுமொழி அவளுக்கு மறுகணமே கிடைத்தது. வந்தவர்கள் இருவரும் புவனமகாதேவியின் படுக்கையறை வாசற் கதவண்டை நின்றார்கள். கையில் விளக்குடன் வந்த தாதிப் பெண் கதவை இலேசாகத் தட்டினாள். உள்ளேயிருந்து "யார்?" என்ற குரல் கேட்டது.





"நான்தான் அம்மா!" என்றார் வானமாதேவி. "இதோ வந்துவிட்டேன்!" என்னும் குரல் கேட்ட மறுகணமே கதவும் திறந்தது. தாதிப் பெண்ணை வெளியிலே நிறுத்தி விட்டு வானமாதேவி உள்ளே சென்றார்.

வானமாதேவியின் பயப்பிராந்தி கொண்ட வெளிறிய முகத்தைப் பார்த்த மங்கையர்க்கரசியின் மனத்தில் சொல்ல முடியாத கவலையோடு பயமும் குடிகொண்டது. பூரண சந்திரனையொத்த பிரகாசமான பல்லவ சக்கரவர்த்

தினியின் வதனம் நாலு நாளைக்குள் அப்படி மாறிப் போயிருக்கும் காரணம் என்ன? அவருக்கு அத்தகைய கவலையை யும் பயத்தையும் உண்டாக்கும் விபரீதம் என்ன? சக்கரவர்த்தி போர்க்களத்துக்குப் போன பிறகு கூட வானமாதேவி எவ்வளவோ தைரியமாகவும் உற்சாகமாகவும் இருந்தாரே? அதைப் பற்றித் தான் ஆச்சரியப்பட்டதும் உண்டல்லவா! அப்படிப் பட்டவரை இவ்விதம் மாற்றும்படியாக எத்தகைய அபாயம் எதிர்நோக்கி வந்து கொண்டிருக்கிறது? அந்த அபாயம் அவரோடு மட்டும் போகுமா? அல்லது அந்த அரண்மனையில் உள்ள மற்றவர்களையும் பீடிக்குமா?

கள்ளங்கவர் கபடமற்ற பெண்ணாகிய மங்கையர்க்கரசிக்கு மேற்படி விஷயத்தைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஒற்றுக் கேட்பது ஒரு பிசகான காரியமாகவே தோன்றவில்லை. எனவே, புவனமகாதேவியின் அறைக்கும் தன்னுடைய அறைக்கும் மத்தியிலிருந்த கதவண்டை சென்று நின்று மாமிக்கும் மருமகளுக்கும் நடந்த சம்பாஷணையை ஒற்றுக் கேட்கத் தொடங்கினாள்.

அந்த சம்பாஷணையின் ஆரம்பமே அவளுடைய மனத்தில் என்றுமில்லாத பீதியை உண்டாக்கி உடம்பெல்லாம் நடுங்கும்படி செய்தது. போகப் போக, அவள் காதில் விழுந்த விவரங்கள் சொல்ல முடியாத வியப்பையும் எல்லையில்லாத பீதியையும் மாறி மாறி அளித்தன. சில சமயம் அவள் உடம்பின் இரத்தம் கொதிப்பது போலவும்; சில சமயம் அவளுடைய இருதயத் துடிப்பு நின்று போவது போலவும் உணர்ச்சிகளை உண்டாக்கின. அப்படியெல்லாம் அந்தப் பேதைப் பெண்ணைக் கலங்கச் செய்து வேதனைக்குள்ளாக்கிய சம்பாஷணையின் விவரம் இதுதான்:

"அம்மா! ஒருவேளை தூங்கிப் போய் விட்டீர்களா?"

"மகளே! நீ சொல்லியனுப்பியிருக்கும் போது எப்படித் தூங்குவேன்? உன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். ஆனால், இது என்ன மர்மம்? எதற்காக இப்படி நடு ராத்திரியில் வந்தாய்? உன் முகம் ஏன் இப்படி வெளுத்துப் போயிருக்கிறது? ஐயோ பாவம்! பல நாளாக நீ தூங்கவில்லை போல் இருக்கிறதே?"

"ஆம், அம்மா! நெடுமாறன் என் அரண்மனைக்கு என்றைக்கு வந்தானோ அன்றைக்கே என்னை விட்டுத் தூக்கமும் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டது. தாயே! பக்கத்து அறைகளில் யாராவது இருக்கிறார்களா? நாம் பேசுவது யாருடைய காதிலாவது விழக்கூடுமா?"

"இது என்ன பயம், மகளே? யார் காதில் விழுந்தால் என்ன? யாருக்காக நீ பயப்படுகிறாய்? பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினி - சத்துருமல்லரின் மருமகள், மாமல்லரின் பட்டமகிஷி - யாருக்காக இப்படிப் பயப்பட வேண்டும்?"

"யாருக்காக நான் பயப்படுகிறேன் என்றா கேட்கிறீர்கள், அம்மா! நமது அரண்மனையில் உள்ள ஒவ்வொரு பணியாளிடமும் ஒவ்வொரு பணிப் பெண்ணிடமும் பயப்படுகிறேன்."

"அப்படியானால் உன் பின்னோடு அழைத்து வந்தாயே அவள்?"

"செவிடும் ஊமையுமாக இருப்பவளைப் பார்த்து அழைத்து வந்தேன்!"

"மகளே! இது என்ன பேச்சு? உன்னுடைய பணிப்பெண்களிடமே நீ பயப்படும் படியான அவசியம் என்ன நேர்ந்தது? வீர பாண்டிய குலத்திலே பிறந்து வீர பல்லவர் வம்சத்தில் வாழ்க்கைப்பட்டவள் இத்தகைய பயத்துக்கு ஆளாகலாமா? இது என்ன அவமானம்?"

"அம்மா! இதிலுள்ள மான அவமானமெல்லாம் பாண்டிய குலத்துக்குத்தான்; பல்லவ குலத்துக்கு ஒன்றுமில்லை. என் அரண்மனைப் பணிப்பெண் ஒருத்தி சமணர்களுடைய வேவுக்காரியாகி நெடுமாறனுக்கும் சமணர்களுக்கும் நடுவே தூது போய் வருகிறாள் என்று அறிந்தேன். அவள் வந்து சொன்ன செய்தியின் பேரில் நேற்றிரவு நடுநிசியில் நெடுமாறன் சமண சித்தர்களின் அந்தரங்க மந்திரக் கூட்டத்துக்குப் போய் விட்டு வந்தான்."

"ஆம், மகளே, இது என்ன விந்தை! காஞ்சி நகரில் இன்னும் சமணர்கள் தங்கள் காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்களா?"

"ஆம், தாயே! நெடுமாறனைத் தொடர்ந்து, அந்தச் சமண சித்தர்களும் வந்திருக்கிறார்கள். நெடுமாறன் அவர்களைப் பார்க்கப் போனபோது அங்கே நடந்த

காரியங்களைக் கேட்டால் இன்னும் தாங்கள் பயங்கரமடைவீர்கள்!"

"என்ன நடந்தது, மகளே?"

"நெடுமாறனுடைய மனத்தைக் கெடுப்பதற்காக என்னவெல்லாமோ அவர்கள் மந்திர தந்திரங்களைக் கையாளுகிறார்களாம். பாவம்! நெடுமாறனுடைய புத்தி அடியோடு பேதலித்துப் போயிருக்கிறது!"

"ஆனால் சமணர்களுடைய நோக்கந்தான் என்ன?"

"யாரோ ஒரு பையனை மந்திர சக்தியால் மயக்கி, வருங்காலத்தில் வரப்போவதை அகக்கண்ணால் கண்டு சொல்லச் சொன்னார்களாம். வாதாபி யுத்தத்தில் வெற்றியடைந்தவுடனே தங்களுடைய புதல்வர், நெடுமாறன் மீது பொறாமை கொண்டு அவனைக் கத்தியால் வெட்டிக் கொல்வதாக அவன் கண்டு சொன்னானாம்!"

"ஐயோ! இது என்ன கொடுமை! அப்புறம்...?"

"ஆனால், அந்த விதியையும் சமண சித்தர்களின் சக்தியால் மாற்றலாம் என்று அவர்கள் சொன்னார்களாம். அவர்களின் விருப்பத்தின்படி நடந்தால் நெடுமாறனை தக்ஷிண தேசத்தின் ஏக சக்ராதிபதியாக இந்தக் காஞ்சியிலேயே பட்டாபிஷேகம் செய்து வைப்பதாகச் சொன்னார்களாம்!"

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது, மகளே?"

"நமது ஒற்றர் தலைவன் சத்ருக்னன் எல்லாவற்றையும் ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தானாம்."

"ஆகா! மகேந்திர பல்லவர் மீது பழி தீர்த்துக் கொள்ளச் சமணர்கள் நல்ல சந்தர்ப்பத்தைத்தான் தேடிக் கொண்டிருக்கிறார்கள்!"

"அம்மா! ஆனால், அவர்கள் உண்மையில் சமணர்களும் அல்லவாம்! வாதாபியின் ஒற்றர்கள் சமணர்களைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு இந்தத் தந்திர மந்திரமெல்லாம் செய்கிறார்களாம்!"

"அப்படியானால் அவர்களை உடனே சிறைப்பிடிப்பதற்கு என்ன?"

"சிறைப் பிடித்தால் அதனால் அபாயம் வரலாமென்று சத்ருக்னன் பயப்படுகிறான். பாண்டிய சைனியத்தை உடனே காஞ்சியைக் கைப்பற்றும்படி நெடுமாறன் சொல்லலாமென்றும், காரியம் மிஞ்சி விபரீதமாகி விடும் என்றும் அஞ்சுகிறான்."

"வேறு என்ன யோசனைதான் சத்ருக்னன் சொல்கிறான்?"

"அவனுக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை, தாயே! உடனே சக்கரவர்த்திக்குச் செய்தி அனுப்ப வேண்டும் என்றான். ஆனால், என் நாதர் போருக்குப் புறப்படும் போது, அவருக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கிறேன். அதை நிறைவேற்றியே தீருவேன். தங்களிடம் அனுமதி பெற்றுப் போகத்தான் வந்தேன்."

"அப்படியா? மாமல்லனுக்கு நீ என்ன வாக்குறுதி கொடுத்தாய்?"

"நெடுமாறனால் ஏதாவது கெடுதல் நேருவதாயிருந்தால் என் கையால் அவனுக்கு விஷத்தைக் கொடுப்பேன்; இல்லாவிட்டால் அவனைக் கத்தியால் குத்திக் கொல்வேன் என்று வாக்குறுதி கொடுத்தேன்."

"ஆ! இது என்ன பாபம்? உன் தலையில் இவ்வளவு பெரிய பாரத்தை வைத்துவிட்டு என் மகன் எப்படிப் புறப்பட்டுப் போனான்?"

"அம்மா! என்னிடம் அவர் பரிபூரண நம்பிக்கை வைத்துச் சென்றார். அந்த நம்பிக்கையை உண்மையாக்குவேன்."

"குழந்தாய்! நாளை மாலை வரையில் எனக்கு அவகாசம் கொடு. முடிவாக என் யோசனையைச் சொல்கிறேன்."

"அம்மா! அடுத்த அறையில் யார் இருக்கிறது? ஏதோ சப்தம் கேட்பது போல் தோன்றியது."

"இந்த அரண்மனையைப் பற்றி நீ சந்தேகிக்க வேண்டாம். இங்கு யாரும் அப்படிப்பட்டவர்கள் இல்லை."

"அப்படியா நினைக்கிறீர்கள்? இன்று சாயங்காலம் நடந்ததைக் கேட்டால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்."

"சாயங்காலம் என்ன நடந்தது?"

"நெடுமாறன் பூந்தோட்டத்தில் உலாவி விட்டு வருவதாகச் சொல்லிப் போனான். வெகுநேரம் அவன் திரும்பி வராமலிருக்கவே எனக்கு ஏதோ சந்தேகமாயிருந்தது. அவனைத் தேடிக் கொண்டு நான் சென்றேன். பூங்காவனத்தில் செடிகள் அடர்ந்திருந்த ஓரிடத்தில் நெடுமாறனும் ஒரு பெண்ணும் நின்று அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண்



யார் தெரியுமா?"

"யார்?"

"தாங்கள் சுவீகாரப் புதல்வியாகக் கொண்டு அன்புடன் ஆதரித்து வளர்க்கிறீர்களே, அந்தச் சோழ நாட்டுப் பெண் தான்!"

"என்ன? மங்கையர்க்கரசியா?"

"ஆம்; தாயே! மங்கையர்க்கரசியேதான்!"

"ஆனால், என் கண்ணாலேயே பார்த்தேன், அம்மா!"

"கண்ணாலே என்ன பார்த்தாய்? இருவரும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தாய். அவ்வளவுதானே? இவள் பூஜைக்கு மலர் எடுக்கப் போயிருந்தாள். தற்செயலாக நெடுமாறன் அங்கு வந்திருப்பான்; ஏதாவது கேட்டிருப்பான். இவளும் யாரோ பாண்டிய நாட்டு வாலிபனைப் பற்றி விசாரிக்க வேணுமென்று சொல்லிக் கொண்டிருந்தாள்..."

"அவர்களுடைய நடவடிக்கைகள் மிக்க சந்தேகாஸ்பதமாய் இருந்தன, அம்மா!"


"இப்போதுள்ள உன்னுடைய மனோநிலையில் யாரைப் பற்றியும் சந்தேகம் தோன்றலாம்."

"போய் வருகிறேன், அம்மா! தங்களிடம் சொன்ன பிறகு என் இதயத்தை அழுத்திக் கொண்டிருந்த பாரம் கொஞ்சம் குறைந்திருப்பது போல் தோன்றுகிறது!"

"போய் வா, குழந்தாய்! மீனாக்ஷி அம்மன் அருளால் உன்னுடைய இருதயத்தின் பாரம் முழுவதும் நீங்கட்டும்."

இதன் பிறகு கதவு திறந்து மூடும் சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து காலடிச் சப்தமும் மறுபடியும் கதவு திறந்து மூடும் சப்தமும் கேட்டன. பிறகு, அந்த அரண்மனையில் ஆழ்ந்த நிசப்தம் குடிகொண்டது.

மேற்படி சம்பாஷணை முழுவதையும் கேட்டுக் கொண்டு சித்திரப் பதுமை போல் கதவண்டை நின்ற மங்கையர்க்கரசி, அன்றிரவு முழுவதும் ஒரு கண நேரங்கூடக் கண்ணை மூடவில்லை. இதற்கு முன் விளங்காத பல மர்மங்கள் மேற்படி சம்பாஷணையின் மூலம் அவளுக்குத் தெரிய வந்தன. பாண்டிய குமாரன்தான் தன்னுடைய காதலன் என்ற செய்தி அவளுக்கு எல்லையற்ற உவகையையும் வியப்பையும் அளித்தது. தான் அவனைப் பற்றி அடிக்கடி கண்ட கனவின் பொருள் ஒருவாறு விளங்கிற்று. அவனுக்கு அந்த அரண்மனையில் நேர்வதற்கு இருந்த பேரபாயம் அவளுக்குச் சொல்ல முடியாத திகிலையும் கவலையையும் அளித்தது. அந்தப் பேரபாயத்திலிருந்து அவனைத் தப்புவிக்கும் பொறுப்



"மகளே! நீ யாரைப் பற்றி என்ன சொன்னாலும் நம்புகிறேன். ஆனால், மங்கையர்க்கரசியை மட்டும் ஒருநாளும் சந்தேகிக்க மாட்டேன்."

அருள்வாக்கு



உண்மையான பக்தன் ஒருவன், பரமேசுவரனுக்குப் பூஜை செய்ய விரும்புகிறான். உடனேயே அவனுக்கு ஒரு பெரிய சந்தேகம் வந்து விடுகிறது. ஈசுவரனிடமே கேட்கிறான்: ''ஈசுவரா! நான் உனக்கு உபசாரம் செய்வதாக நினைத்துப் பூஜை செய்தாலும், உண்மையில் அபசாரம் அல்லவா செய்வதாகத் தோன்றுகிறது? திரிலோகமும் வியாபித்த உன் திருவடியை நான் ஓர் உத்தரணி தீர்த்தத்தால் அலம்ப முடியுமா? விசுவாகரமான உன் சரீரத்துக்கு இந்தச் சிறிய வஸ்திரத்தைக் கட்டி மூட முடியுமா? உனக்கு நமஸ்காரம் பண்ணினால், என் காலை எந்தப் பக்கம் நீட்டினாலும் அங்கேயும்தான் நீ இருக்கிறாய். ஆனபடியால் உனக்கு நேரே காலை நீட்டிய தோஷம் அல்லவா எனக்கு ஏற்படுகிறது? சரி, பூஜையே வேண்டாம் என்று பிரார்த்தனை செய்யப் பார்த்தால், எல்லாம் அறிந்த சர்வக்ஞனான உன்னிடம் பிரார்த்திப்பதும் அபசாரமாக அல்லவா ஆகிறது? பிரார்த்தனை என்றால் உனக்குத் தெரியாததை நான் கேட்பதாகத்தானே ஆகும்? நீ சர்வக்ஞன் என்பதற்கு என் பிரார்த்தனையே குறைவு உண்டாக்குகிறது. இருந்தாலும் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிற அளவுக்கு நான் குறை உள்ளவனாக இருக்கத்தானே செய்கிறேன்? அதனால் அந்தக் குறை நீங்குவதற்காக உன்னிடம் பிரார்த்திக்கிறேன். அதுசரி, எல்லாமான நீயேதான் நானாகவும் ஆகியிருக்கிறாய் என்று தெரியாமல், என்னைக் குறைவுபடுத்திக் கொண்டிருக்கிறேனே, இந்தக் குறையை நீக்கு என்றே பிரார்த்திக்கிறேன். நீ அகண்ட ஆனந்த ஸ்வரூபம்; உன்னைத் தவிர வேறில்லை என்று வேதம் சொல்கிறது. இருந்தாலும் பூரண ஆனந்தமான உனக்கு வேறாக இப்படிக் கோணலும் மாணலுமாகக் குறையோடு நான் ஒருத்தன் இருப்பது போல் தோன்றுகிறதே? இல்லாவிட்டால் அழுது கொண்டு இப்படி நான் ஒருத்தன் பிரார்த்தனை பண்ண வர வேண்டியதே இல்லையே. இப்படி நான் உனக்குத் தனியாக இருப்பதாகத் தோன்றுவதைப் போக்கடி. போக்கினால் நீதான் எல்லாமும், நீதான் நானும், அதாவது உன்னிடம் நான் இதைக் கொடு, அதைக் கொடு என்று வெளி வஸ்துக்களைக் கேட்கவில்லை. என்னையே எனக்குக் கொடு என்றே பிரார்த்திக்கிறேன்!'' - இப்படிச் சொல்கிறார் அந்த பக்தர். இந்த ரீதியிலேயே 'சிவ மானஸ பூஜா' என்ற ஸ்தோத்திரத்தில் பிரார்த்தித்திருக்கிறார் ஸ்ரீஸதா சிவ பிரம்மேந்திராள்.

மஹ்யம் தேஹிச பகவன்
மதீயமேவ ஸ்வரூபம் ஆனந்தம்

"என் ஆனந்த ஸ்வரூபத்தையே எனக்குக் கொடு" என்கிறார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

பும் பாக்கியமும் தனக்குரியவை என்பதையும் உணர்ந்தான். இம் மாதிரி எண்ணங்கள் அவனுக்கு இரவு முழுதும் ஒரு கணமும் தூக்கமில்லாமல் செய்து விட்டன.

மறுநாள் மாலை, குறிப்பிட்ட சமயத்துக்குச் சற்று முன்னாலேயே பூங்காவனத்துக்குச் சென்று காத்திருந்தாள். நெடுமாறன் தென்பட்டதும் விரைந்து வந்து அணுகி, ஒரே பரபரப்புடன், "பிரபு! தங்களுக்கு இந்த அரண்மனையில் பேரபாயம் சூழ்ந்திருக்கிறது. உடனே இங்கிருந்து போய் விடுங்கள்!" என்று அலறினாள்.

நெடுமாறன் சிறிது வியப்புடன் "என்ன சொல்கிறாய்? எனக்கா பேரபாயம் வரப் போகிறது? இந்த ஏழைக்கு யாரால் என்ன அபாயம் நேரக்கூடும்?" என்றான்.

"சுவாமி! என்னை இனியும் ஏமாற்ற நினைக்க வேண்டாம். தாங்கள்தான் பாண்டிய குமாரர் என்பதை அறிந்து கொண்டேன். உண்மையிலேயே தங்களுக்கு இங்கே பேரபாயம் வருவதற்கு இருக்கிறது. உடனே போய் விடுங்கள், இந்த அரண்மனையை விட்டு!" என்றாள் மங்கையர்க்கரசி.

(தொடரும்)

ஜோடி சேரும் ஜூலை!

ஜூலை மாதம் 13ம் தேதி வந்தால், ஜெர்மனியின் பெர்லின் நகருக்கு 'காதல் களை' கட்டி விடுகிறது. டயர் கார்டன் அவென்யூவில் ஆயிரக்கணக்கான காதலர்கள் விதவிதமான ஆடைகளில் ஆட்டம் பாட்டம் என அசத்துகிறார்கள்.

- அபி



செல்ல வட்டம்!

சோனியா மிகவும் ரிஸர்வ்ட் டைப் பெண்மணி தான் என்றாலும் அவருக்கும் நெருங்கிய நண்பர்கள் உண்டு. முக்கியமான கட்சி மற்றும் இதர விஷயங்களில், அவர்களது ஆலோசனை களைக் கேட்டு இறுதி முடிவு எடுக்கிறார் என்று சொல்லப்படுகிறது. சோனியாவின் 'சார்ம்ட் சர்க்கிள்' என்று சொல்லப்படும் இந்த செல்ல வட்டாரத்தில் உள்ள ஏழு பேர்...



* ரூபிகா செளலா

ஷீலா தீக்ஷித்: முப்பத்து நாலு வருட அரசியல் அனுபவம் கொண்ட ஷீலா தீக்ஷித், நேரு குடும்பத்துக்கு நெருக்கமானவர் என்றாலும், ராஜீவ்காந்தியால் லோக் சபா தேர்தலில் (1984) டிக்கெட் தரப் பட்டு, முழு நேர அரசியல்வாதி ஆனவர். பொறுமைசாலி, எதிலும் அவசரப்பட்டு முடிவுகளை எடுக் காமல், சாதக பாதகங்களை ஆராய்ந்து முடிவுகள் எடுப்பவர் என்ற பெயர் இவருக்கு உண்டு. சோனியா காந்திக்கு, நாடெங்கும் பதினாறு மாநிலங் களில் காங்கிரஸ் ஆட்சி நடந்தாலும், தலைநகர் டெல்லியை ஆளும் காங்கிரஸ் காரர் என்று ஷீலா தீக்ஷித் பற்றிப் பெருமைப்படுகிறார். மெட்ரோ ரயில், 'க்ரீன்' டெல்லி திட்டம், மாநகரப் பேருந்து களை டீசலுக்குப் பதிலாக இயற்கை வாயுவில் ஓடச் செய்வது, சுற்றுச்சூழல் பாதுகாவலர் என பாராட்டப்படுவது, திறமையான நிர்வாகம் என்று பல காரணங்களுக்காகவும், சோனியா இவர் மீது மதிப்பு வைத்திருக்கிறார். மூத்த பெண்மணி என்பதால், தாய்க்குரிய மரியாதை கொடுக்கிறார்.



* குலாம் நபி ஆஸாத்

குலாம் நபி ஆஸாத்: முதல்முறை யாக 1970களில் தேர்தலில் போட்டி யிட்டு டெபாசிட் இழந்தாலும், கட்சித் தலைமைக்கு நெருக்கமாக இருத்தல் அரசியலில் மிக முக்கியம் என்று புரிந்து கொண்டவர். அதை ராஜதந்திரத் துடன் நடைமுறைப் படுத்தி வருபவர். இந்திராகாந்தி, ராஜீவ், சஞ்சய், நரசிம்மராவ், சோனியா என்று எவரது கை எப்போது ஓங்கியிருந்தாலும், தமக் குரிய உள் வட்டமும் அதில் இடம்

வெல்ல வட்டம்!

பெறும் சூத்திரத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டு, வெற்றிகரமாகச் செயல்பட்டு வருபவர் குலாம் நபி ஆசாத்.



• ராஜீவ் தேசாய்

• சுனிதா கோலி

• ஷீலா தீக்ஷித்

• அம்பிகா சோனி

• அகமது பட்டேல்

ஆகவேதான் இந்திரா காலம் முதல், மந்திரி சபையில் இடம் இவருக்கு ரிசர்வ் செய்யப் பட்டு வந்தது. ஒத்த கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து, ஜெயித்தால் கூட்டணி ஆட்சி நடத்தத் தயாராகிவிட்ட காங்கிரஸ் கட்சி, எந்தெந்த மாநிலத்தில் எந்தெந்த கட்சி களுடன் கூட்டணி அமைக்கலாம், என்று அலசி, ஆராய்ந்து, ஆலோசனை சொல்லும் முக்கியப் பொறுப்பை அண்மையில் குலாம் நபி ஆசாத் கையில் ஒப்படைத் திருக்கிறார் சோனியா.

அம்பிகா சோனி: சோனியாவின் அதிகாரக் கோட்டையின் சாவி. அம்பிகாசோனியின் கையில் இருப்பதாக டெல்லி அதிகார வட்டாரத்தில் ஒரு விமர்சனம் உண்டு. காரணம் கட்சிக்கும் அப்பாற்பட்டு, சோனியா காந்தியின் அலுவலகம் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அனைத்தையும் அம்பிகாசோனிதான் கவனித்துக் கொள்கிறார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எந்தப் பிரமுகரும் சோனியா அம்மனைத் தரிசிக்க வேண்டுமென்றால், இந்த அம்பிகாசோனி என்கிற பூசாரியின் வரம் வேண்டும். எனவே, எந்த காங்கிரஸ் தலைவரும், இவருடன் சுமுகமாக இருப்பதையே விரும்புகிறார்கள். இதுவரை ஒருமுறை கூடத் தேர்தலில் போட்டியிட்டது கிடையாது; மக்களைச் சந்தித்தது கிடையாது' என்றும் இவர் மீது ஒரு விமர்சனம் உண்டு!"

அதனால் என்ன! இந்தக் கட்சிக்கும், எனக்கும் முப்பதாண்டு சம்பந்தம் உண்டு. கட்சியில் இருப்பவர்கள் தேர்தலில் நிற்பது ஒரு வழி என்றால், என் வழி தனி வழி' என்கிறார் அம்பிகாசோனி. சோனியா

கட்சிக்குள் எந்த மாற்றங்களைக் கொண்டு வந்தாலும், அது அம்பிகாசோனியை எந்த விதத்திலும் பாதிக்காது என்பது மட்டுமல்ல, அவரது சிபாரிசும் இருக்கும் என்கிறார்கள்.

அகமது பட்டேல்: ராஜீவ் காந்தியின் குஜராத் விஜயத்தின்போது, சுவையான குஜராத்தி ஐட்டங்கள் சிலவற்றை ராகுலை ருசிக்க வைத்து, அவரது நாவின் மூலம், இதயத்தில் இடம் பிடித்தவர் அகமது பட்டேல். கட்சித் தலைமை மீதான இவரது விசுவாசம் ஆழமானது. அது ராஜீவ், நரசிம்மராவ், சீதாராம் கேசரி, சோனியா என்று யாராக இருந்தாலும் சரி! எந்தச் சர்ச்சைகளிலும் சிக்கிக் கொள்ளாதவர் இவரைப் போன்ற முஸ்லிம் தலைவர்கள் இருந்தால், கட்சியின் இமேஜ் பலப்படும் என்பது கட்சித் தலைமையின் கணக்கு.

கனிதா கோலி: இவர் ஒரு இன்டீரியர் டெகரேஷன் வல்லுனர். ஸ்ரீபெரும்புதூரில் கட்டப்பட்டு வரும் ராஜீவ் காந்தி நினைவிடத்தை வடிவமைத்து, உருவாக்கும் பொறுப்பு இவருக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது. பத்து வருடங்களுக்கு முன் எலிசபெத் மகாராணி இந்தியாவுக்கு வந்தபோது, அவர் தங்குவதற்காக டெல்லியில் ஹைதராபாத் ஹவுஸைப் புதுப்பித்து, அலங்கரித்தவர் இவர். எண்பத்தைந்துகளில் ராஜீவ் காந்தியின் அலுவலகத்தின் இன்டீரியர் டிஸைனிங் செய்து, பாராட்டுப் பெற்றவர் கனிதாகோலி.

ரூபிகா செளலா: சோனியாவுக்கும் இவருக்கும் முப்பது வருட நட்பு. இருவரும் ஒன்றாக தேசிய நவீன ஓவிய கலைக் கூடத்தில் 'பழைய ஓவியங்களைப் பாதுகாப்பது எப்படி' என்று கற்றுத் தரும் கோர்ஸ் படித்தவர்கள். அரசியல் சூழ்நிலை எத்தனை பரபரப்பாய் இருந்தாலும் ரூபிகா செளலாவும், சோனியாவும் அரசியல் அல்லாத விஷயங்களைக் குறித்து, சந்தித்துப் பேசுவது வாடிக்கை.

ராஜீவ் தேசாய்: காங்கிரஸ் கட்சியின் முக்கியத்துவம் வாய்ந்த மீடியா ஆலோசனைக் குழுவின் முக்கிய உறுப்பினர் இவர். தினமும் இந்தக் குழு கூடி, அன்றாட அரசியல் நடவடிக்கைகளுக்கு, காங்கிரஸ் சார்பான கருத்துக்கள் என்ன என்று அலசி, ஆராய்ந்து, பாயிண்ட்கள் தயார் செய்து, சோனியா காந்தியுடன் பேசி முடிவு செய்து, அறிக்கைகளாக வெளிவர உதவுவார். ராஜீவ் காந்தி, பொருளாதாரம் சம்பந்தமான விஷயங்களில் ராஜீவ் தேசாயை கலந்தாலோசிப்பார். அரசியலுக்கு வர வேண்டும்; எம்.பி, மந்திரி ஆக வேண்டும் என்ற ஆசையெல்லாம் இவருக்கு இல்லை.

தொகுப்பு: **சி.எம்**

தகவல் உதவி: சன்டே டைம்ஸ்

பார்த்து மாத்துங்கப்பா!

ஜி.எம். காய்கறி, ஜி.எம். பழவகை, ஜி.எம். தானியம் என்றாலே ஐரோப்பிய நாடுகளில் அலறியடித்துக் கொண்டு ஓடுகிறார்கள். யாரிந்த ஜி.எம்? ஆளோ, ஆட்சியாளரோ அல்ல...

'ஜி.எம்' என்றால் 'ஜெனடிக்கலி மாடிஃபைட்' என்று அர்த்தம். சீனாவில் நடந்து வரும் பயோஃபார்மிங் புரட்சியின் விளைவாக கறி, காய், தானியங்கள் எல்லாமே டன்டன்னாக ஏற்றுமதியாகின்றன.



இதில் என்ன விசேஷம் என்றால், பாகற்காயில் பத்து சதவிகித கசப்புதான் இருக்கும். முட்டைக்கோஸை வேக வைத்தால், ஊருக்கே தெரியும்... அந்த வாடை இருக்காது.

இலந்தப்பழம் தக்காளி சைஸில் இருக்கும். எல்லாமே தாவர மரபணு மாற்றத்தினால் விளைந்த சாதனைதான் என்றாலும், ஐரோப்பிய நாடுகளில் வாங்கத் தயங்குகிறார்கள்.

"மாம்பழம்னா இலேசா புளிக்கணும். விளாம்பழம்னா துவர்க்கணும். அப்பதானே ருசிக்கும்? இப்படி அடிப்படையான கூறுகளை மாற்றியமைச்சுட்டா, இயற்கையே மாறிப் போயிடும்" என்று போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

ஜி.எம். தக்காளி, கோயம்பேடு வந்தா கிலோ என்ன விலை விற்குமோ?

- **வினி**



வன அழகி!

வாஷிங்டன் டி.ஸி.யில் உள்ள ஸ்மித்ஸோனியன் நேஷனல் உயிரியல் பூங்காவில் உள்ள விலங்குகளுக்கு, பிறந்த நாள், கல்யாண நாள், அழகுப் போட்டி என அடிக்கடி நடத்தி அசத்துகிறார்கள். மரக்கிளைக்கு நடுவே எட்டிப் பார்த்து போஸ் கொடுக்கும் இந்த மூன்று வயது பாண்டா குட்டி, இந்த வருஷத்து வன அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. சினிமாவில் நடிக்க கால்ஷீட் கிடைக்குமா?

- அபி

ஒரு பெரிய கரண்டி நிறைய, ஆந்திரா ஸ்பெஷல் ஊறுகாயை அப்படியே சுடு சாதத்தில் பிசைந்து சாப்பிடும் பழக்கம் கொண்டவர் சுந்தர்ராஜன்.

இப்போது அவருக்கு வயது அறுபது. ரிடையர் ஆகிவிட்டார். கட்டிலில் அமர்ந்திருக்கும் அவர், சமையலறையை நோக்கி, ''தர்மூ'' என்று குரல் கொடுக்க, ''என்ன... பசிக்குதா? இதோ...'' என்று நகர்கிறார் அவர் மனைவி.

அடுத்த ஐந்தாவது நிமிடம் ஒரு தம்ளர் நிறைய காம்ப்ளான் கரைத்துக் கொண்டு வந்தவர், கணவரின் மேல் சட்டையை நீக்குகிறார்.



சுந்தர்ராஜனின் இடது வயிற்றின் ஓரமாக இருக்கும் ஒரு டியூப்பின் மேல் மூடியை அகற்றி, புனல் வழியாகக் காம்ப்ளானை கவனமாக ஊற்றுகிறார். தம்ளர் காலியானதும் 'கார்க்'ஐ மூடி, சட்டையை மாட்டி விடுகிறார் தர்மூ!

சுந்தர்ராஜன், 'ஃபீடிங் கேஸ்ட்ரோடமி' என்ற நவீன அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர். இனி அவரால் ஆயுசுக்கும், தட்டை வழித்து, சப்புக் கொட்டிக்கொண்டு சாப்பிடவே முடியாது. எல்லாமே ட்யூப் வழி ஆகாரம்தான்.

சுந்தர்ராஜன் போலவே உணவுக் குழாய் பிரச்னை கொண்ட நபர்களைச் சந்திக்க இருக்கிறோம். அதற்கு முன் உணவுக் குழாயைப் பற்றிப் பொதுவான விவரங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

3

ஜீரணத் தொழிற்சாலைக்குள் நுழைந்து பார்க்க அனுமதி சீட்டு வாங்கியிருந்தாலும், 'உணவுக் குழாய்' என்னும் மெயின் கேட்டிலிருக்கும் இரண்டு செக்யூரிட்டிகளிடமும் உத்தரவு வாங்கிக் கொண்டு நுழையுங்க.

'கிரைக்கோ, பெரிஞ்சியஸ்' என்ற கரடுமுரடான

டாக்டர் எஸ். அஷோக்



நீங்கள் நெருப்புக் கோழியா?

பெயர் கொண்ட இந்த இரட்டையர்களில் உணவுக் குழாயின் மேல்பகுதி வாட்ச்மேன்தான் ஸீனியர். இவர், நாம் விழுங்கும் உணவு, மூச்சுக் குழாய்க்குள் சென்றுவிடாமல் தடுக்கிறார். இன்னொருவர், ஜூனியர். இவர் குழாயின் அடிப்பகுதி அடைப்பாளர். வயிற்றில் சுரக்கும் அமிலம், எக்காரணம் கொண்டும் உணவுக் குழாய்க்குள் நுழைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது இவரது வேலை.

உணவுக் குழாயின் முக்கியத் தொண்டு, வாயில் போடப்பட்ட உணவை, உமிழ் நீருடன் சேர்த்து, இரைப்பைக்குள் கொண்டு சேர்ப்பதுதான். 'அட! இவ்வளவு சுலபமான வேலையா?' என்று தோன்றுகிறதா? உங்கள் எண்ணத்தை உடனே மாற்றிக் கொள்ளுங்கள். அதிகமாக நோய் வாய்ப்பட்டு அல்லல் படுவதும் உணவுக் குழாய்தான். 'ஏ.ஸி. நீல்சன்' போன்ற கருத்துக் கணிப்புக் குழு எதுவும் ஆராய்ச்சி செய்யாமலேயே, உணவுக் குழாயில் ஏற்படும் நோய்களில் மிக அதிக மதிப் பெண்கள் பெற்று முதலிடத்தைப் பெறுவது, உணவுக் குழாய்ப் புண்தான்.

தீக்காயங்கள், அமிலம் குடித்து தற்கொலை முயற்சியில் ஈடுபடுவது, டீ, காபி போன்றவற்றைச் சூடாகக் குடிப்பதால் ஏற்படும் ரணம், வயிற்றுப் புண்ணின் காரணமாகத் தொண்டையில் ஏற்படும் புண் போன்றவற்றால் உணவுக் குழாய் பெரிதும் பாதிக்கப்படுகிறது. சில சமயம், வயிற்றில் சுரக்கும் அமிலம், அடிக்கடி மேலே எழுந்து, உணவுக் குழாயில் படுவதாலும், அப்பகுதியில் அரிப்பும், புண்ணும் உண்டாகி, அவஸ்தை தருகிறது.

சமீபத்தில் செந்தில் என்ற இளைஞர் ஏகப்பட்ட புகார்களுடன் வந்தார்.

"பசியே இல்லை."

"நெஞ்சிலே எரிச்சல் தாங்கலை ஸார்."

"ஏப்பம் ஏப்பமா வருது."

"சாப்பிடும்போது தொண்டையிலே என்னவோ தடுக்குது."

"விழுங்கவே முடியலை."

அவருக்கு ஆரம்பகட்ட பரிசோதனைகளைச் செய்யச் சொல்லிவிட்டு, அடுத்த நோயாளியை அழைத்தேன்.

அவர், ராஜன் என்கிற நாற்பது வயதுக்காரர். செந்தில் சொன்ன எல்லா பிரச்னைகளும் இவரிடமும் இருந்தன.

"ஒரே இருமல். குரலே மாறிப் போச்சு. நெஞ்சு எலும்புலே வலிக்குது" என்ற இரண்டு கம்ப்ளைண்ட்ஸ் துக்கடா!

பரிசோதனைகளின் முடிவில் செந்தில், ராஜன் இருவருக்குமே உணவுக்குழாய்ப் புற்றுநோய் முற்றியிருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.

எனவே... இப்படிப்பட்ட புகார்கள், சில நாட்களாகத்தான் உள்ளன என்றாலும்கூட, (short history) உணவுக் குழாயில் புற்று நோய் உள்ளதா என்று பார்த்து விடுவது நலம்.

அதிலும், ரத்தம் கலந்த வாந்தி வந்தால்... உடனே... உடனே... மிக அவசரம்!

உணவுக் குழாய்ப் புற்று நோயை உண்டாக்கத் துணை புரியும் விஷயங்கள் நிறைய உள்ளன. அதில் முதலிடத்தை புகையிலையும் மதுப் பழக்கமும் தட்டிச் செல்கின்றன. சில சமயம் இரத்த சோகை நோய், மிகவும் முற்றிப் போய், உணவுக் குழாய் சுருங்கி, உணவை விழுங்க முடியாமல் போகலாம். இதுதவிர, தாதுப் பொருட்கள், உயிர்ச் சத்துகளின் குறைபாடு, பல், வாய், பகுதிகளை அசுத்தமாக வைத்திருத்தல், நெருப்புக் கோழி போல சூடாகச் சாப்பிடுதல் (சும்மா ஒரு உவமைக்குச் சொன்னது; நெருப்புக் கோழி நெருப்பைச் சாப்பிடுவதில்லை) போன்றவையும் புற்று நோய் உண்டாக, டீம் வர்க் செய்கின்றன.

உணவுக் குழாயில் வளரும் புற்று நோய்

எப்படியிருக்கும்?

உணவுக் குழாயின் உட்புறமாக, முடிச்சுகள் போல இறுகியோ, குழாயைச் சுற்றி வளையம் போலவோ, புண்ணாகவோ படர்ந்திருக்கும்.

இப்புற்று நோய், சுயமாகவே வீரியம் கொண்டு வெகுவிரைவில் பரவிவிடும். சில சமயம், நிணநீர், இரத்தம் மூலமாகவும் பரவி, மூச்சுக் குழாய், நுரையீரல், கல்லீரல், எலும்புகள் என மெள்ளப் படர்ந்து, சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்கும்.

உணவுக் குழாய்ப் புற்றுநோய்க்கு எவ்விதமான சிகிச்சை தரப்படும்?

முதல் கட்டம் வழக்கமான பரிசோதனைகள் நடக்கும். பிறகு என்டாஸ்கோப்பி மூலம் புற்றுக் கட்டிகளின் தன்மை கண்டு பிடிக்கப்படும். பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து, சதை எடுக்கப்பட்டு, திசுத் தன்மையின் வீரியம் கண்டுபிடிக்கப்படும்.

பேரியம் கொடுத்து, உணவுக் குழாயை எக்ஸ்ரே எடுத்து, சிகிச்சை அளிக்கப்படும். சில சமயம் பேரியம் கலந்த உணவைக் கொடுத்து, நோயாளி விழுங்கும்போதே, ஒரு மானிட்டர் வைத்து, உணவுக் குழாயின் அசைவு அலைகளையும், அடைபட்ட முறையையும், இடத்தையும் ஸ்க்ரீனிலேயே கண்காணித்து, சிகிச்சை தொடங்கப்படும்.



''கோவிச்சுக்கிட்டுப் பிறந்த வீட்டுக்குப்போன உங்க மனைவி திரும்பி வந்தப்ப நீங்க அவங்களைச் சேர்த்துக்கலையாமே! ஏன்?''

''கொழுப்பைச் சேர்த்துக்க வேண்டாம்னு டாக்டர் எனக்கு அட்வைஸ் பண்ணியிருக்கார்!''

- ம. தங்கரவி

செந்தில், ராஜன் என்ற இருவருக்குமே உணவுக் குழாய்ப் புற்று நோய் பீடித்திருந்தது என்று சொன்னேன் அல்லவா? அதில் செந்தில், கொஞ்சம் ஆறுதல் கேஸ்! அவருக்கு உணவுக் குழாயும், இரைப்பையும் சேரும் இடத்தில் கேன்ஸர் உருவாகியிருந்தது. புற்று நோய் பாதிக்கப்பட்ட இடத்தை வெட்டி நீக்கிவிட்டு, இரைப்பையையே அன்னக்குழாய் வடிவத்தில் உருவாக்கி, நேரடியாக இணைப்புத் தந்து விட்டோம். 'ஈஸோ ஃபேகோ கேஸ்ட்ரக்டமி' எனப்படும் இந்த நவீன முறை மிகவும் பிரபலம்.

ராஜன் கேஸ் கொஞ்சம் மோசமானது. நோயாளி பலவீனமாக இருந்தார். கேன்ஸரும் மிக அதிகமாகப் பரவிவிட்டது. ஆபரேஷன் எல்லாம் தாங்கமாட்டார் என்ற நிலை.

எனவே, என்டாஸ்கோப் வழியாக லேஸர் பாய்ச்சி, புற்று நோய்க் கட்டியை ஆவியாக்கிவிட்டோம். பின்னர், உணவுப் பாதையின் துவாரத்தைத் துளைத்து, 'Stent' என்ற செயற்கைக் குழாயைப் பொருத்தி விட்டோம். இதற்கு 'ஸ்டென்டிங் ட்ரீட்மெண்ட்' என்று பெயர்.

கீமோ தெரபி போன்ற நவீன சிகிச்சைகளும் ஏராளமாக உள்ளன. கதிரியக்கம் மற்றும் மருந்துகள் மூலம் புற்று நோயை அழிக்கும் இந்தச் சிகிச்சைகளுக்கு நிறையச் செலவாகும்.

உடல் ஆரோக்கியத்துக்கும், பாங்க் பேலன்ஸுக்கும் வேட்டு வைக்கும் செயலில் ஈடுபடாமல், உணவுக் குழாயைப் பத்திரமாகப் பாதுகாப்பதே நல்லது.

• வைட்டமின் பி சத்து நிறைந்த உணவைப் போதிய அளவு உட்கொள்ளுங்கள். இரத்த சோகை நோய் வராது.

• மிகமிகக் குளிர்ந்த உணவு, மிக மிகச் சூடான உணவு இரண்டுமே ஆபத்துதான்.

• புகையிலை, மது கூடவே கூடாது.

• உணவை மிருதுவாகக் குழைத்து, மென்று சாப்பிடுங்கள். கெட்டியாக உலர்ந்ததை விட, நீர்ப்பதமிக்க உணவு அதிகமிருக்கட்டும்.

அடுத்த வாரம் இரைப்பை விஸிட். காத்திருங்க.

வாசகர்களுக்கு அல்வா!



✉ ஓராயிரம் பட்டாம்பூச்சிகள் ஒரே நேரத்தில் சிறகடித்து எழுந்தது போன்ற இதமான உணர்வைத் தந்தது 'நட்பு' சிறுகதையின் கடைசி வரி
வடமாலவன்.
கள்.
அருகந்தம்பூண்டி.

✉ டாக்டர் எஸ். அஷோக் எழுதியுள்ள 'வணக்கத்துக்குரிய வயிறே' மருத்துவத் தொடர் ஆரம்பத்திலேயே களை கட்டிவிட்டது. நகைச்சுவை இழையோடும் நயமான தொடர்...!
கே.என். பாலகிருஷ்ணன்.
சென்னை - 78,

✉ இந்த வாரம் கல்கியில், போற்றி கார்ட்டூனைப் போற்றி. ஆயிரம் ரூபாய் பரிசளிக்க ஆசை. ஆனால்: பையில் இருந்தது, ஆறு ரூபாய் மட்டுமே! கல்கியை வாங்கிப் பார்த்துக் கொண்டே வீடு வந்து சேர்ந்தேன்.
அ. சின்னசாமி.
சேலம் - 3,

✉ பெருந்தலைவர் காமராஜருக்காக மிக அக்கறையோடு அஞ்சலி செலுத்தியிருப்பது கல்கிதானே தவிர காங்கிரஸ்காரர்கள் அல்ல, என்பதற்கு கட்டுரையும் படங்களுமே சரியான சாட்சி. சபாஷ்!
புலவர் எஸ்.கே. மூர்த்தி.
கும்பகோணம்,

✉ 'எமதர்மன்' கார்ட்டூன் ரசிக்க வைத்தாலும் இலேசான சோகத்தை ஏற்படுத்தியது.
டி.ஏ.சி. பிரகாஷ்.
திருச்செங்கோடு,

✉ பூசல் புகைச்சலிலிருந்து காங்கிரஸ்காரர்களைக் கொஞ்சம் ரிலாக்ஸ் செய்ய நினைச்ச உங்களுக்கு ரொம்ப நிறைஞ்ச மனசு! 'கோஷ்டிச் சிரிப்பு'ன்னு ஒரு குசும்புத் தலைப்பைக் குறுக்குவெட்டா போட்டு, உங்க தெனாவெட்டைக் காட்டிப்புட்டீங்களே... ஐயா!
ஆர்.ஜி. விநாயகா.
இசையன்விளை,

✉ 'நீதி தேவனுக்கும் அல்வா!' என்ற கட்டுரையில் 2003ம் வருடம், ஜூலை மாதம் 28ந் தேதி அதே பரோடா நகரம், அதே ஹனுமார் கோயில், போலீஸ் லாபியிலிருந்து இருபத்தியொரு பேர் இறங்கினார்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 28.07.2003 ஆம் தேதி இனிமேல்தானே வரும். முன்னால் நடந்ததைப் பின்தேதியிட்டு எழுதி சஞ்சயன், வாசகர்களுக்கு அல்வா கொடுக்கிறாரா?
மதுரை-7, இரா. சக்கரபாணி.

(2003ம் வருடம் ஜூன் 28ந் தேதி என்று திருத்தி வாசிக்கவும்.)
- ஆர்

✉ நவீன உலகில், பெற்றோரின் அரவணைப்பின்றி, தீவுகளாய் இயங்கும் குழந்தைகளின் மனநிலையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியது 'சக்தி' சிறுகதை. (அப்பாவின் அவசர கதியை சாப்ளின் படத்துக்கு ஒப்பிட்டது நல்ல கற்பனை...!)
கடம்பத்தூர்,
என். அண்ணாதுரை.

வட்டமேஜை



கொள்ளை விலை!

உலகின் மிக விலை உயர்ந்த விளையாட்டுப் பொம்மை இதுதான். நூறு மில்லியன் ஜப்பான் யென். அதாவது 8,45,000 அமெரிக்க டாலர். (நம்ம ஊர் அரசியல்வாதிகள் தமது வாரிசு செல்லங்களுக்கு வாங்கிக் கொடுக்கலாம்).



“அண்ணே லைட்டா ஒரு டீ போடுங்க” என்று கூறிவிட்டு பெஞ்சில் அமர்ந்தான் முத்துவேல்.

“என்ன முத்து, சீக்கிரமா வந்துட்டே?” என்று கேட்டார் கடைக்காரர்.

“பழமெல்லாம் வித்துப் போச்சு, வந்துட்டேன்” என்றான்.

“வியாபாரம் ஜோருன்னு சொல்லு.”

“அப்படி இல்லே. பண்டிகை வருதில்லே? இரண்டு நாள் கழிச்சு திரும்பவும் டல்லாயிடும்” என்றபடி பக்கத்தில் இருந்த செய்தித்தாளை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.

முத்துவேலுக்கு இருபத்தாறு வயதாகிறது. கறுப்பு நிறம், உயரமாய் இருந்தான். திடகாத்திரமான உடல். தலைமுடியை போலீஸ் கட்டிங் செய்திருந்தான். மீசையையும் சிரத்தையுடன் நறுக்கி இருந்தான். இதே கடையின் மாடியில் உள்ள சின்ன அறைகளில் ஒன்றுதான் அவனுடையது. எல்லாமே பிரம்மச்சாரிகளின் கூடு. முத்துவேலும் ஒரு பிரம்மச்சாரி.



உயிர்வலைகள்!

ஆரணி யுவராஜ்

அவனது சொந்த ஊர் வேலூருக்குப் பக்கத்தில் ஒரு கிராமம். விவசாயக் கூலியாக இருந்த அவனது அப்பா, இவனது பத்தாவது வயதில் மாடு முட்டி செத்துப் போனார்.

முத்துவேலுவின் அம்மா ஒரு சீக்காளி. புருஷன் அகாலமாகச் செத்ததும் கலங்கிப் போய்விட்டாள். ஆயினும், நாற்று நடுவதற்கும், களை பிடுங்குவதற்குமாகச் சென்று வயிற்றுப்பாட்டைக் கவனித்தான்.

அதுவும் நீண்ட நாளைக்கு நடக்கவில்லை. நோய் அதிகமாகி பாயில் சுருண்டு விட்டாள். என்ன செய்வது என்று புரியாமல் தவித்தபோதுதான் வேலூரிலிருந்து கணேசன் வந்தார். முத்துவேலுக்கு அவர் மாமாமுறை. வேலூரில் மார்க்கெட் அருகே மளிகைக் கடை வைத்திருந்தார். பெரிய கடைதான். ஓரளவுக்கு வசதியாக இருந்தார்.

“இனிமே உன்னால வேலையெல்லாம் செய்ய முடியாது. வீட்டோட ஓய்வெடு. பையனை நான் ஊருக்குக் கூட்டிட்டுப் போய் கடையில வைச்சுக்கறேன். வீட்டுலேயே சாப்பிட்டு, தங்கிக்கட்டும். மாசத்துல ரெண்டு மூணு முறை இங்கே அனுப்பி வைக்கறேன். உனக்கும் செலவுக்கு இவ்வளவுன்னு கொடுத்துடறேன்” என்றார்.

அப்போது முத்துவேல் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். மாமா கேட்டதும் மறுக்காமல் தலையாட்டி அவரோடு கிளம்பிவிட்டான்.

ஆரம்பத்தில் இவனுக்கு வேலை அதிகமில்லை. பொட்டலம் கட்டிக் கொடுக்கும் வேலைகளை ஆட்கள் செய்வார்கள். இவன் சோப்பு, ஊதுவத்தி போன்ற தயார் நிலையில் இருக்கும் பொருட்களை எடுத்துக் கொடுப்பான். அப்புறம் பருப்பு, மாவு வகையை கால் கிலோ, அரை கிலோவாக பிளாஸ்டிக் கவரில் போட்டு பேக் செய்வான். இரவு

மாமாவோடு வீடு திரும்புவான்.

கணேசனுக்கு ஒரு பெண்ணும் ஒரு பையனும். பெண்ணைக் கட்டிக் கொடுத்து விட்டார். பையன், சென்னைக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். மனைவி நீலவேணிக்கு இரட்டை நாடி சரீரம். விசேஷங்களுக்கு அலங்காரத்தேர் போல் செல்வாள். மிச்ச நேரத்தில் வி.சி.ஆரில் படம் பார்த்துக் கொண்டிருப்பாள்.

முத்துவேலுக்கு அந்த வேலை பிடித்துப் போனது. மாதத்தில் இரண்டு முறை ஊருக்குச் சென்று அம்மாவைப் பார்ப்பான். கணேசன் கொடுக்கும் பணத்தைக் கொடுப்பான்.

"நீ நல்லா சாப்பிடறியாடா முத்து?" என்று கேட்பாள்.

"சாப்பிடறேம்மா" என்பான்.

"ரொம்ப வேலை கொடுக்கறாங்களா?"

"இல்லேம்மா."

"அத்தை எப்படி? எதுக்காவது திட்டறாங்களா?"

"இல்லேம்மா. திட்டற மாதிரி நான் நடக்கறதில்லை."

அம்மா அவன் தலையை வருடுவாள். "நான் நல்லா இருந்தா, உனக்கு இந்தக் கஷ்டமே இல்லை" என்பாள்.

இரண்டு வருடங்கள் கழித்து ஒருநாள் கணேசன் மதியம் சாப்பிடச் சென்றவர் உடனே திரும்பிக் கடைக்கு வந்தார். "முத்து, கடையை மூடிட்டு வா. ஊருக்குப் போகலாம்" என்றார்.

"ஏன் மாமா?" என்று கேட்டான்.

"வாடா சொல்றேன்" என்றார்.

அத்தையும் கூடவே வந்தார். அங்கே போனபிறகுதான் அவனது அம்மா செத்துப் போனது தெரிந்தது. அவனுக்கு அப்படியொன்றும் பெரிதாக அழுகை வரவில்லை. வரவில்லை என்பதைவிட தெரியவில்லை என்றும் சொல்லலாம். அம்மா பக்கத்திலேயே அமர்ந்திருந்தான். இறுதிச் சடங்கில் தீ மூட்டினான்.

மேலும் இரண்டு வருடங்கள் ஓடிப் போயின. இப்போது முத்துவேல் கடையில் நிறைய வேலைகளைச் செய்தான். கல்லாவில்கூட அவனே பெரும்பாலும் இருந்தான். அப்படி இருந்த ஒருநாள் மார்க்கெட்டில் இரண்டு ரௌடிகளுக்கிடையே சண்டையாகி, கலவரமானது. எல்லோரும் கடையை மூடிவிட்டார்கள்.

முத்துவேலும் கடையைப் பூட்டிக் கொண்டு வீட்டுக்கு வந்தான். அத்தை ஒரு கல்யாணத்திற்காக ஊருக்குப் போயிருந்தாள். வீட்டு வாசலில் கணேசனின் டி.வி.எஸ் இருந்தது.

'மாமா வீட்டுலதான் இருக்காரா?' என்று நினைத்தவாறு கதவை நெருங்கியபோது, உள்ளே வளையல் சிணுங்கும் சத்தம் கேட்டது. புருவத்தைச் சுருக்கியவாறு கதவில் கை வைக்க, அது திறந்து கொண்டது. படுக்கையறையின் கதவு மூடியிருந்தது. ஒரு குறுகுறுப்பான மனத்துடன் கதவை நெருங்கும்போது, ஹாலில் இருந்த தொலைபேசி அலறி அழைத்தது. முத்துவேல் என்ன செய்வது என்று புரியாமல் நின்றுவிட, கதவு திறந்தது. வெளியே வந்த கணேசன் அவனைப் பார்த்து அதிர்ந்து விட்டார். அவருக்குப் பின்னால் வேலைக்காரி.

> "போன மாசந்தானே மாமனார் ஃப்ரிட்ஜ் வாங்கிக் குடுத்தார். இந்த மாசம் எதுக்கு மனைவியை பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைக்கறே...?"
>
> "கரண்ட் சார்ஜ் வாங்கி வரத்தான்...!"
>
> - ஜக்கி

அவசரமாக அறைக்கதவை மூடினார்.

"எ...என்னடா?" என்று கேட்டார்.

"மார்க்கெட்ல கலாட்டா. கடையை மூ...மூடிட்டேன்" என்றான்.

தொலைபேசி பிடிவாதமாக அழைக்க, சென்று எடுத்தார். "ஆங்! என்ன சுப்பு? கலாட்டாவா? தெரியும். பை...பையன் கடையை மூடிட்டு இ...இப்பதான் வந்தான். ச...சரி வெச்சுடறேன்" என்று கூறி வைத்தார். வியர்த்த முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

வேலைக்காரி ஆடைகளை அணிந்து கொண்டு வெளியே வந்தாள். முகம் முழுவதும் பயம்.

"நீ வீட்டுக்குப் போ" என்று கணேசன் கூற, சென்று விட்டாள்.

நீண்ட நேரம் அங்கே அமைதி நிலவியது.

"மு...முத்து இதை யார்கிட்டேயும் சொல்லாதேடா" என்றார்.

"சரி மாமா" என்றான்.

"சத்தியம்னு சொல்லு."

"சத்தியம்" என்றான்.

ஆனால் இரண்டாம் நாளே அவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

இரவு அவனைக் கடையை மூடிக் கொண்டு வருமாறு கூறிவிட்டு முன்னால் சென்று விட்டார் மாமா. இவன் கடையை மூடிக் கொண்டு வீட்டை அடைந்தான். வாசற்படியில் கால் வைத்தான்.


"திருட்டு நாயே, அங்கியே நில்லுடா" என்று கணேசன் அதட்டினார்.

முத்துவேல் புரியாமல் நின்றான்.

"எத்தனை நாளாடா இது நடக்குது?" என்று கேட்டு, சரமாரியாக அடித்தார்.

சப்தம் கேட்டு அக்கம் பக்கத்திலிருந்து ஆட்கள் கூடினார்கள்.

"உறவுக்காரப் பையனாச்சேன்னு பரிதாபப்பட்டு வேலைக்குச் சேர்த்து வீட்டோடு வைச்சுக்கிட்டேன். அவன் வேலையைக் காட்டிட்டான். அடிக்கடி பணம் காணாமல் போகுதேன்னு சந்தேகப்பட்டு அவன் பெட்டியைக் குடைஞ்சேன். பாருங்க எவ்வளவு பணம்?" என்று எடுத்துக் காட்டினார். அத்தனையும் ஐம்பது மற்றும் நூறு ரூபாய்கள்.



"மா...மா, நான் பணத்தைத் திருடலை" என்றான் அதிர்ச்சியுடன்.

"அப்புறம் எப்படிடா இவ்வளவு பணம் உன் பெட்டியில் வந்தது? அத்தை கண் முன்னாடிதான் எடுத்தேன். வேணும்னா அவளையே கேளு" என்றார் கோபமாக.

"இந்தா, நீ திருடின பணத்தை நீயே வைச்சுக்க. பெட்டியைத் தூக்கிட்டு கிளம்பு. உன்னை இந்த ஊரிலேயே பார்க்கக் கூடாது" என்று சீறினார்.

முத்துவேலுவுக்கு நன்றாகப் புரிந்தது. எங்கே அவர் வேலைக்காரியுடன் இருந்ததைச் சொல்லி விடுவானோ என்று பயந்து முந்திக்கொண்டு, அவன் மீது திருட்டுப் பழியைச் சுமத்தி விட்டார். அவன் கலங்கிய கண்களுடன் வண்டியேறினான்.

ஹோட்டல் சர்வர், டீ மாஸ்டர் என்று பல வேலைகளுக்குத் தாவி, பின்னர் மார்க்கெட்டில் பழம், காய்கறிகளை வாங்கி, தள்ளு வண்டியில் வீதி வீதியாக விற்பது வரை வளர்ந்திருக்கிறான். இந்த டீக் கடைக்காரர், மார்க்கெட்டில் உள்ள சிலர், இவர்கள்தான் அவனது உறவுகள்.

"நீ கவலையை வுடு முத்து, உனக்கு நல்ல பொண்ணாப் பார்த்து நான் கட்டி வெக்கிறேன்" என்று சொல்லி இருக்கிறாள் வள்ளியக்கா.

அவனுக்குள் ஒரு சபதம் இருக்கிறது. 'இன்னும் கொஞ்சம் நல்ல நிலைக்கு வந்ததும் வேலூருக்குப் போகணும். மாமா வீட்டு வாசலில் நின்னுக்கிட்டு அவரைக் கூப்பிடணும். அக்கம் பக்கத்தையும் வர வைச்சு, அவரோட வண்டவாளத்தைத் தண்டவாளத்துல ஏத்தணும். அந்த ஆள் என் மேல திருட்டுப் பட்டம் கட்டின பிறகு, நான் மட்டும் எதுக்குக் கொடுத்த சத்தியத்தைக் காப்பாத்தணும்? மாட்டேன்' என்று அடிக்கடி நினைத்துக் கொள்வான்.

டீயைக் குடித்தபடி செய்தித்தாளின் நான்காம் பக்கம் வந்தவனின் முகம் பரபரப்பானது. வலது ஓரம் கட்டம் கட்டி ஒரு விளம்பரம் வந்திருந்தது.

'அன்புள்ள முத்துவேலுக்கு, கணேசனின் மகன் ரமேஷின் வேண்டுகோள். இதை நீ படித்தால் எங்கிருந்தாலும் உடனே ஊருக்கு வரவும். அப்பா படுத்த படுக்கையாக இருக்கிறார். உன் பெயரை அடிக்கடிச் சொல்கிறார். அதனால் உடனே வரவும்' இப்படிக்கு ரமேஷ்.

அந்த வரிகளுக்குக் கீழே மளிகைக் கடையின் பெயரும், வேலூர் என்ற பெயரும் இருந்தது.

'சந்தேகமே இல்லை. இது எனக்காகக் கொடுக்கப்பட்ட விளம்பரம்தான். என்ன ஆச்சு மாமாவுக்கு?' என்று நினைத்தபடியே உடனே கிளம்பினான்.

அவன் ஊருக்குச் சென்று இறங்கிய போது இரவாகி விட்டது. தயக்கத்துடன் மாமா வீட்டை அடைந்தவனை, அத்தை தான் முதலில் அடையாளம் தெரிந்து கொண்டாள். கொஞ்சம் இளைத்து, நரைத்திருந்தாள்.

"முத்து, வாடா. உன்னைத்தான் எதிர் பார்த்துட்டு இருந்தோம்" என்றாள்.

சப்தம் கேட்டு அறைக்குள் இருந்து வந்தான் ரமேஷ். ஆளே மாறியிருந்தான்.

முதல் தேறுமா மும்தாஜ்?

சினிமா ஆசையில் சென்னைக்கு ரயிலேறும் மூன்று மாணவிகள், சமூக விரோத கும்பலிடம் சிக்கிக் கொள்ள, அவர்களை மீட்கும் அதிரடி போலீஸ் அதிகாரியாக மும்தாஜ் நடிக்கிறார். படம் 'தத்தித் தாவுது மனசு.' கவர்ச்சி நடனத்தால் சாதிக்க இயலாது என்று ஆக்ஷனை மட்டுமே நம்பிச் சொந்தப்படம் எடுக்கிறார். போட்ட பணம் வருமா?



• 'தத்தித்தாவுது மனசு' படத்தில் ஊர்வசி பட்டேல், சிந்தூரி, சோனா.

- ஸ்ரீ

கல்யாணமாகி, ஐந்து வயதில் ஒரு பையன் இருந்தான்.

''மாமாவுக்கு என்ன ஆச்சு?'' என்று கேட்டான் முத்துவேல்.

"பக்கவாதம். ஏற்கெனவே ஷுகர், பி.பி எல்லாம் இருக்கு. எவ்வளவோ வைத்தியம் பார்த்தோம். இனிமே பிரயோஜனமில்லே. வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடுங்கன்னு சொல்லிட்டார். கூட்டிட்டு வந்துட்டோம். அடிக்கடி முத்து முத்துன்னு சொன்னார். நான்தான் யோசனை பண்ணி, அந்த விளம்பரத்தைக் கொடுத்தேன்'' என்றான் ரமேஷ்.

முத்துவேல், கணேசன் இருந்த அறைக்குள் நுழைந்து கட்டிலை நெருங்கினான்.

கணேசன் ஆளே அடையாளம் தெரியாதபடி உருக்குலைந்து காணப்பட்டார்.

''அப்பா, முத்துவேல் வந்திருக்கான்'' என்று ரமேஷ் அவரது காதருகே சொன்னான்.

"நீ கூப்பிடு முத்து" என்றாள் அத்தை.

"மா...மா, மா...மா..." என்று அழைத்தான்.

கணேசனின் இமைகள் மெல்லத் திறந்தன. சில நொடிகள் அவனையே பார்த்தார். கையைத் தூக்கி அருகே அழைத்தார். முத்துவேல் தயங்காமல் சென்று அந்தக் கையைப் பற்றினான்.

என்னமோ கேட்டார். வாய் மட்டும்தான் அசைந்தது. வார்த்தைகள் வரவில்லை. ஆனால் அவனுக்கு அது புரிந்தது. ''நல்லா இருக்கேன் மாமா'' என்றான்.

அவரது கண்கள் கலங்கின. அந்தக் கலங்கிய கண்களாலேயே மன்னிப்புக் கேட்டார்.

பிறகு நீண்ட நேரம் அவர் பக்கத்திலேயே இருந்தான். தடவிக் கொடுத்தான். விடியற்காலையில் அத்தையின் அழுகைச் சத்தம் கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். எல்லோரும் கணேசனின் கட்டிலைச் சுற்றி நின்றிருந்தார்கள்.

மாமாவின் இறுதிச் சடங்குகள் முடிந்த மூன்றாம் நாள் ஊருக்குப் போய் விட்டு காரியத்துக்கு வருவதாக அத்தையிடம் சொன்னான்.

"இங்கேயே இருந்துடேன்டா. இவனும் ஆபீஸ் வேலைக்குப் போறதால கடையை வேலையாளேதான் பார்த்துக்கறான். நீ இருந்து கவனிச்சிக்க" என்றாள் அத்தை.

"வேணாம் அத்தை" என்றான்.

"ஏன்டா? பழசை மறந்துடுடா."

"சே! சே! அதுக்கில்லை. எனக்கு அந்த வேலை ரொம்பப் பிடிச்சுப் போச்சு."

"சரி, உன் இஷ்டம். ஆனா அடிக்கடி வந்து போ" என்றாள்.

"சரி. நான் கிளம்பறேன்" என்றான்.

"ஒரு நிமிஷம்டா" என்று தயங்கியவள் "உன்னைப் பார்த்த பிறகுதான் அவர் உயிர் பிரிஞ்சது. அது வரைக்கும் அலை பாய்ஞ்சது. உன்கிட்டே கண்ணாலேயே என்னமோ கேட்ட மாதிரி இருந்தது. உன்னை வீட்டை விட்டுத் துரத்திய பிறகு கொஞ்ச நாளா ஆளே சரியில்லை. யாரையும் தலை நிமிர்ந்து பார்க்கலை. ஏதோ தப்பு செஞ்சவர் மாதிரி இருந்தார். நிஜத்தைச் சொல்லு, நீ பணத்தை எடுத்தியா?" என்று கேட்டாள்.

முத்துவேல் அவளை சில நொடிகள் அமைதியாகப் பார்த்தான். "ஆமா அத்தை, ஏதோ தெரியாமல் திருடிட்டேன்" என்றான்.

அத்தை அதை நம்பவில்லை என்பதை அவளது கலங்கிய கண்களே உணர்த்தின. ○


IT'S HARRY POTTER AGAIN!
ANNOUNCING A SHORT STORY CONTEST!
GET YOUR CHILD THE AUGUST ISSUE FOR DETAILS!
GOKULAM
The magazine for children
August 2003
LIBERATION FROM A CURSE
PRIZE WINNING MYTHOLOGY STORY
Poster
Wimbledon Champions
THE STORY OF KOOTHU
Get your copy today for Rs.6/- only!
For subscriptions mail to :
GOKULAM,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.
E-mail : subscription@kalkiweekly.com


ஹை டெக் ஜாக்கி!

லாரி, பேருந்து போன்றவற்றில் பஞ்சரான டயரைப் பத்தே நிமிடத்தில் மாற்றி விடலாம். இதற்கென ஹைடெக் ஜாக்கி வழிமுறையைக் கண்டுள்ளார் த. சிவபிரகாஷ். திருச்சி - திண்டுக்கல் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஜெ.ஜெ. பொறியியல் கல்லூரியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் முடித்துள்ளார்.


நவீன ஜாக்கியின் முன் மாதிரி வடிவத்தில், இரண்டு சக்கரங்கள் பரிசோதனைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஹைடிராலிக் சிலிண்டர்கள் இரண்டு தயாரிக்கப்பட்டு உரிய அளவீடுகளின் அடிப்படையில் சக்கரங்களின் இரு பக்கங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன. டெஸ்ட்டுக்காக முன் பகுதியில் இணைக்கப்பட்டுள்ள ஹைடிராலிக் பம்பிலிருந்து, டைரக்ஷன் கண்ட்ரோல் வால்வுக்கு, குழாய் மூலம் எண்ணெய் அனுப்பப்படுகிறது. எந்தச் சக்கரம் கழற்றி மாற்றப்பட வேண்டுமோ, அங்கு பொருத்தி இருக்கும் சிலிண்டருக்கு டைரக்ஷன் கண்ட்ரோல் வால்வு மூலமாக ஆயிலை அழுத்தத்துடன் செலுத்தும்போது, குறிப்பிட்ட அச் சக்கரம் தரையிலிருந்து மேலெழுந்து நிற்கிறது.

"இந்தச் செயல்முறை மூலமாக, ஸ்டெப்னி மாட்ட பத்து நிமிடத்துக்கும் குறைவாகவே ஆகும். ஸ்விட்ச் கண்ட்ரோலில் இதனை இயக்கும்போது இன்னும் விரைவாகச் செயல்படும்" என்கிறார் சிவபிரகாஷ்.

கூடுதல் தொழில் நுட்பத்தில் கனரக வாகனங்களில், குறிப்பாக லாரிகளில் 'ஃப்ரீ அவுட்புட் சாஃப்ட்டில்' இருந்து பவர் எடுத்து, ஒரு ஹெவி பிரஷர் ஹைடிராலிக் பம்புடன் இணைத்து, அந்த பம்ப் மூலம் ஆயிலை, எந்த டயர் பஞ்சராகி உள்ளதோ அதற்கு ஆக்டிவேட்டர் மற்றும் டைரக்ஷன் கண்ட்ரோல் வால்வு மூலம் செலுத்தி, அந்தக் குறிப்பிட்ட டயரை தரை மட்டத்திலிருந்து ஓர் அடி உயரத்துக்கு உயர்த்த முடியும். பின்னர் அந்த டயரை 'டார்க் ஸ்பானர்' என அழைக்கப்படும் அதிவேக மற்றும் அதிக அழுத்தம் கொண்ட ஸ்பானரைப் பயன்படுத்தி, ஒரு சக்கரத்தை மூன்று அல்லது நான்கு நிமிடங்களில் கழற்ற முடியும். வாகனத்தின் கீழ்ப் பகுதியில் உள்ள ரிப்பேர், பஞ்சர் ஒட்டுவது உள்ளிட்ட பல்வேறு பணிகளை விரைவாகவும் செய்யலாம். இந்த ஹைடிராலிக் சிலிண்டரை கனரக வாகனங்களில் பொருத்திவிட்டால், சுமைகளைக் கீழிறக்காமல் பஞ்சரான டயரை சுலபத்தில் மாற்றி விடலாம்.



• சிவபிரகாஷ்



• உயர்த்தப்பட்ட டயர்

"என்னிடம் இது சம்பந்தமாக நிறைய ஐடியாஸ் உள்ளன. அவற்றைச் செயல்படுத்த ஆட்டோமொபைல் நிறுவனங்கள் ஏதாவது முன் வந்தால் மகிழ்ச்சி அடைவேன்" என்கிறார் சிவபிரகாஷ்.

கட்டுரை, படங்கள்: ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



போத்தியப்பனுக்கு இது போதாத காலம்தான். வறட்சியின் கோரப் பார்வையில் சிக்கித் திணறிக் கொண்டிருந்தார். பையில் சில்லரைப் பற்றாக்குறை. முழுசாகத் தொண்ணூறு நாள் கடந்தும், மும்பையில் இருக்கிற அவருடைய ஒரே மகன் பால்சாமி, பணம் அனுப்பாமல் நாட்களைக் கடத்தி கொண்டிருந்ததுதான் காரணம்.

''பய ஒரு கடுதாசி கூடப் போடாம யாருக்கு வந்த விதியோன்னு இருந்துட்டான். வயத்துல ஈரத் துணியைக் கட்ட வச்சுட்டானே. இந்த அறுபது வயசுக்குப் பிறகு உடம்பு வளைய மறுக்குதே'' தமக்குள் புலம்பி முடித்து, பல் துலக்கி விட்டுப் பெரிதாக ஏப்பமிட்டார்.

அது உண்டு களித்த ஏப்பமில்லை. பசி ஏப்பம். பல் துலக்கிட்டாப் போதுமா? வயத்துக்குள்ள ஏதாவது போகுமான்னு கெதியா இருக்கு.

செல்லக்கனியின் காபிக் கடையை நோக்கி கால்கள் நடை போட்டன. இந்த ராசம்மா பட்டியில அந்தக் காபிக் கடையை விட்டா

டேக் இட் ஊசி!

ஊசித் துவாரத்தில் நூலை நுழைப்பதே சிலருக்குக் கஷ்டமாக இருக்கும். ஆனால் தைவான் நாட்டைச் சேர்ந்த ஒருவர், ஊசித் துவாரத்தில் ஆறு சிற்பங்களைச் செதுக்கி சாதனை புரிந்துள்ளார்.



எள்ளுப் பொடியும் தேங்காய்ச் சட்னியும்

இவர் கணக்கு இருந்த பக்கங்களில் பெரிதாக பெருக்கல் குறி போட்டு, வரவு வைத்தது நிம்மதியைத் தந்தாலும் ஒன்றை மட்டும் அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

ஜான் சாலமன்



வேறு போக்கிடம் இல்லை. சும்மா சொல்லக்கூடாது. செல்லக்கனியின் கை மணமே பலகாரங்களுக்குத் தனி அந்தஸ்த்தை உண்டு பண்ணியிருந்தது. எல்லாப் பலகாரங்களும் வாய்க்கு ருசியாகத்தான் இருக்கும். வழக்கமான இட்லி வடை தவிர, ஸ்பெஷல் அயிட்டமாக இடியாப்பம், புட்டு, உளுந்தங் கஞ்சி என விதவிதமாகச் செய்வாள். நினைக்கும்போதே நாவில் நீர் சுரந்தது போத்தியப்பனுக்கு.

'கையில் காசுதான் இல்ல. காசு கொடுத்துச் சாப்பிட்டா தலை நிமிர்ந்து சாப்பிடலாம். கடன் சொல்லிகள் தலைகள் கவிழ்ந்து போய்தான் இருக்கும். கண்ணராவியை எங்கே கொண்டு தொலைக்க? தபால்காரர் இவரை கண்டாலே கையை ஆட்டி 'ஒண்ணுமில்ல', என்று சொல்வதை வழக்கமாகக் கேட்டு மனப்பாரம் அதிகமாகி விட்டது.

இன்றாவது பால்சாமி பணம் அனுப்பி இருப்பானா? அப்படி அனுப்பியிருந்தால் "இந்தாபிடி உன் காசை" என்று செல்லக்கனியின் கடைபாக்கியை கொடுத்து விட்டு கம்பீரமாக நடக்கலாம்.

பாவிப்பய தலையைக் கவிழ்ந்து நடக்க வைச்சுட்டானே!

செல்லக்கனி இவரைக் கண்டுவிட்டால் போதும், உடனே கூரையில் செருகி வைத்திருக்கும் கணக்கு நோட்டைத்தான் எடுப்பாள். இவர் கொடுக்க வேண்டிய தொகையை சப்தம் போட்டுச் சொல்லுவாள். கடையில் பலர் முன்னிலையில் அவரை அவமானப்படுத்துவதாகத் தோன்றும். பொறுமையின் எல்லையைக் கடைப்பிடிக்க நன்றாகவே பழகிக் கொண்டார் போத்தியப்பன்.

பசிக்கு ஏது கௌரவம்? நடையைத் துரிதப்படுத்தினார். இன்னைக்கு இடியாப்பமோ, புட்டோ மீந்திருந்தால் நலமாயிருக்கும். இனி விலைபோகாதுன்னு இருக்கும் சரக்குகள்தான், போத்தியப்பன் போன்று கடன் சொல்பவர்களுக்குக் கிடைக்கும்.

தூரத்தில் மாணிக்கம் வந்து கொண்டிருந்தார், இவர் அருகே வந்ததும் வழிமறிப்பது போல வந்து நின்று கொண்டார். நின்றதுமல்லாமல் பெரிதாக ஏப்பம் ஒன்று போட்டார். அவருக்கென்ன, பருத்தி ஏஜெண்ட்! வசமா எவன் தலையிலாவது மொளகா அரைச்சுக் காசு பார்த்திருப்பார். அதைக் கொண்டு போய் கடையில கொடுத்து வயிற்றை நிரப்பிவிட்டு வந்து ஏப்பமிடுகிறார். எரிச்சலாக வந்தது போத்தியப்பனுக்கு.

“ஓய், போத்தி. இன்னைக்கு இட்லிக்கு எள்ளுப் பொடியும் தேங்காய்ச் சட்னியும் சூப்பரா பண்ணியிருக்கா!'' என்றார் மாணிக்கம்.

எள்ளுப் பொடி, தேங்காய்ச் சட்டினி நினைப்பு இவரது பசியை அதிகமாக்கியது. 'சும்மா இருந்த நாக்கைச் சொட்டு போடவைச்சுட்டான். எதுக்கும் யோகம் வேணும். அது இருந்தா எனக்கு எள்ளுப் பொடி கிடைக்கும்' என்று எண்ணியவாறே செல்லக்கனியின் கடைமுன் வந்து நின்றபோது எல்லா இருக்கைகளும் முண்டாசு கட்டிய மனிதர்களால் நிறைந்திருந்தன. போத்தியப்பன் நின்று கொண்டிருந்தார். இவரை யாரும் கண்டு கொள்ளாததுதான் சங்கடத்தை ஏற்படுத்தியது.

குந்தியிருந்தவர்கள் பருத்தி விலையைப் பற்றியும் இரண்டாம் போகத்தின் அமோக விளைச்சலைப் பற்றியும் பேசினார்கள்.

போத்தியப்பனுக்கு அவர்கள் பேச்சில் கலந்து கொள்ள ஆசைதான். கண்டு கொள்ளணுமே? 'காசில்லாதவன் சொல்லும் கருத்தும் விழலுக்கு இறைத்த நீர் தானே' என்று சும்மா இருந்தார்.

செல்லக்கனி அடுப்பு முன் நின்று வேலை செய்ததால் உடல் முழுவதும் வியர்வை ஓடியது. சூடான இட்லிகளை வெளியே எடுத்து, இன்னொரு வட்டப் பாத்திரத்தில் போட்டு, பெரிய வாழை இலையால் மூடி வைத்தாள்.

போத்தியப்பனின் நாசி இட்லிப் பானையில் இருந்து வெளியேறிய ஆவியை மோப்பம் பிடித்தது, இலேசாகச் செருமி தாம் வந்திருப்பதை செல்லக்கனிக்கு உணர்த்துவதாக நினைத்தார்.

செல்லக்கனிக்கு அவர் `வந்து நின்று கொண்டிருப்பது தெரியும். இருந்தும் கண்டு கொள்ளாமல் இருந்தாள்.

கோலிவுட்டின் மிக இளவயது கதாநாயகிகள் ஸ்ரீதேவி, ஸ்ருதிகா இருவருக்குமிடையில் ஒரு நிஜப் போட்டி. 'ப்ரியமான தோழி' படத்தில் ஜோதிகாவை முந்தி விட்டதில் ஸ்ரீதேவிக்குப் பரம சந்தோஷம். சின்ன பாத்திரம் என்றாலும் நளதமயந்தியில் மாதவ



விட்டேனா

னோடு நடித்ததில் ஸ்ருதிகாவுக்குப் பரம திருப்தி. இப்போது இருவருக்குமே

பஸ்ஸின் ஹாரன் ஒலி கேட்டு காபிக் கடையின் இருக்கையை ஆக்கிரமித்திருந் தவர்கள் எழுந்து கொண்டார்கள்.

போத்தியப்பன் நின்று கொண் டிருந்தார். கடவுள் இவர்மீது இரக்கம் கொண்டு செல்லக்கனியின் பார்வையை இவர் பக்கம் திருப்ப வைத்தார். "என்ன சொல்லப் போறிய? இட்லி தா, பையன் பணம் வந்ததும் தந்துடுறேன்னு தினம் பாடுற பல்லவியைத்தானே பாடப் போறீங்க?" என்று கேட்டாள்.

போத்தியப்பன் மௌனமாக நின்று கொண்டிருந்தார்.

"இருங்க அப்படி!"

போத்தியப்பன் பெஞ்சில் அமர்ந்து ஆண்டவனுக்கு நன்றி சொல்லிக் கொண் டார்.

செல்லக்கனியின் பேரனுக்குப் பள்ளிக் கூடம் லீவு போலும். காபிக் கடையில் பாட்டிக்கு உதவியாக வேலை செய்து கொண்டிருந்தாள். இருப்பதிலேயே கொஞ் சம் கிழிசலான துண்டு வாழை இலையைப் போத்தியப்பன் முன் போட்டு விட்டுப் போனான். பிழைக்கத் தெரிந்தவன்!

செல்லக்கனி இட்லிகளை எடுத்து வைத்துவிட்டு, சில நிமிடங்கள் காணாமல் போனாள்.

கண்களில் ஒருவித ஆர்வம். எள்ளுப் பொடியையும் தேங்காய்ச் சட்னியையும் எதிர்பார்த்து நாக்கு காத்துக் கொண் டிருந்தது.

தூக்கு வாளியுடன் வெளிப்பட்ட செல்லக்கனி ரசத்துக்குச் சமமான சாம் பாரை ஊற்றிவிட்டுப் போனதும் ஏமாற்றம் தொண்டையை அடைத்தது.

சட்டினி எள்ளுப் பொடி கேட்கலாமா? வேண்டாம், ஏதாவது சொல்லப் போய் அவமானப்பட நேர்ந்தால்? எள்ளுப்பொடி ஆசைக்குத் துறவறம் கொடுத்துவிட்டு, இனிப்புக் குறைவான காபியைக் குடித்து விட்டு வெளியேறினார்.

நடுத் தெருவில் நின்றிருந்த தபால்காரர் இவரைக் கைதட்டி அழைத்ததும் சந்தோஷமாக இருந்தது.

மூனு மாசம் அனுப்பாத பணத்தை யெல்லாம் மொத்தமாகச் சேர்த்து அனுப்பி யிருந்தான் பால்சாமி. கை நடுங்க பணத்தை வாங்கிக் கொண்டார்.

'செல்லக்கனி பாக்கியை முதல்ல கொடுத்திடணும். அப்புறமா டவுனுக்குப் போய் முனியாண்டி விலாசுல பிரியா ணியை ஒரு கை பார்க்கணும்'. இவர் போய் நின்றபோது இரண்டு பேர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

செல்லக்கனி ஒன்றும் பேசவில்லை. இயந்திரம் போல பணத்தை வாங்கிக் கொண்டு இவர் கணக்கு இருந்த பக்கங் களில் பெரிதாக பெருக்கல் குறி போட்டு, வரவு வைத்தது நிம்மதியைத் தந்தாலும் ஒன்றை மட்டும் அவரால் ஜீரணிக்க முடிய வில்லை.

அங்கு சாப்பிட்டு கொண்டிருந்த இரண்டு பேருக்கு அவர்கள் போதும் போதும் என்று சொல்லியும் கேட்காமல், மேலும் மேலும் எள்ளுப் பொடியை யும் தேங்காய்ச் சட்னியையும் அள்ளி அள்ளி வைத்துக் கொண்டிருந்தாள் செல்லக்கனி. ●



• 'தித்திக்குதே' படத்தில் ஸ்ரீதேவி, ஸ்ருதிகா

பாரி!

'தித்திக்குதே'யில் சமமான வேடங்கள் என்பதால் நடிப்பில் புலிகளாகச் சீறியிருக்கிறார்களாம்!

- ஸ்ரீ

நாக்கு 'பூ'!


தைவான் நாட்டைச் சேர்ந்த ஒரு பெண், தமது நாக்கை இப்படிப் 'பூ' மற்றும் வினோத வடிவங்களில் மடக்கிக் காண்பிக்கிறார். அவர் தாம் இதைக் தமது நாயிடம் இருந்து கற்றுக் கொண்டாராம். (நாக்கு சுளுக்காமல் நீங்களும் முயலுங்களேன்!?)



"சவால்தானே வாழ்க்கை!"

நடமாடும் சினிமா மாதிரிதான் 'பார்த்திபன் கனவு' இயக்குனர் கரு. பழனியப்பனும்! சினிமாவைப் பற்றிப் பேச ஆரம்பித்தால், கரையும் நேரம் பற்றிக் கவலையில்லாமல் பேசிக் கொண்டேயிருக்கிறார்.

''நான் கனவுகளோடு வாழ்பவன். எனக்கு மட்டும் ஒவ்வொரு நிமிஷமும் கனவுகள் பூக்கும், வற்றாத நதி மாதிரி, தூங்காத காத்து மாதிரி. அந்த ஒவ்வொரு கனவையும் வாழ்ந்து பார்த்திடணுங்கறதுதான் என் ஆசை. அது நிறைவேறாதபட்சம் என் படத்துல ஒரு காட்சியாகவாவது அந்தக் கனவு நிற்கும். மணகல படர்ந்த ஒரு பகுதி கனவுதான் 'பார்த்திபன் கனவு' '' என்கிறார் பழனியப்பன்.



இந்தப் படத்தின் வெற்றிக்குப் பிறகு மாஸ்மூவி மேக்கர்ஸ் நிறுவனத்துக்கும் சத்யஜோதி பிலிம்ஸுக்கும் இரண்டு படங்களை இயக்கப் போகிறார் இந்த மதுரைக்காரர்.

''படிக்கும்போதும், பசங்களோட சுத்தும்போதுகூட சினிமா ஆசை வந்ததில்லை. மதுரை அமெரிக்கன் காலேஜில முதுகலை ஆங்கில இலக்கியம் முடிச்சுட்டு வெளிய வந்த பிறகுதான் வேலைங்கற பிரச்னை வந்தது. நண்பர்கள் ஒவ்வொரு துறையா போனப்ப, சினிமாவுக்கு ஏன் போகக் கூடாதுன்னு நினைச்சேன். அப்பவும்கூட சினிமாவ ஒரு வேலையாகத்தான் நினைச்சுப் பாத்தேன். அப்பாகிட்ட ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வாங்கிட்டு, சென்னைக்குப் பஸ் பிடிச்சேன்.

இங்க வந்ததும் இயக்குனர் பார்த்திபன் சார்ட்ட உதவி இயக்குனரா சேரலாம்னு அலுவலகம் போனேன். வாசல்ல ஒருத்தர் நின்னார். என் முகத்தைப் பார்த்ததும், பார்க்கக் கூடாததைப் பார்த்த மாதிரி அவர்

முகத்தைத் திருப்பிக்கிட்டார். விஷயத்தைச் சொன்னேன். நின்ன இடத்திலிருந்து அசையாம, பார்க்க முடியாதுன்னு அனுப்பிட்டார். அப்பதான் சென்னை மனிதர்களின் உள்ளம் புரிஞ்சுது. அப்பவே மனசுல தீர்மானிச்சேன். இவர் அவமானப் படுத்தின இந்த இடத்திலேயே பார்த்திபன் சார்ட்ட உதவி இயக்குனரா சேரணும்னு. என்னோட நண்பர் சுபா வெங்கட் மூலமா அதுக்கு அடுத்த நாள் பார்த்திபன் சாரைச் சந்திச்சேன். என்னைப் பற்றி விசாரிச்சார். 'சீன்' எழுதித் தரச் சொன்னார். எழுதினேன். 'சரி நீ உதவி இயக்குனரா சேர்ந்துக்கோ'ன்னார். சினிமாவைப் பற்றிய முதல் கனவுக்கு அங்கதான் பிள்ளையார் சுழி.



• 'பார்த்திபன் கனவு' படத்தில்





• கரு. பழனியப்பன்

'புள்ளைக்குட்டிக்காரன்' படத்துல வேலை பார்த்தேன். சினிமான்னா என்னன்னே தெரியாத நான், முதன்முதலா கேமராவையும், கிரேனையும் டெக்னீஷியன்கள் ஓடுற அவசரத்தையும் பார்த்து, சினிமா ஈஸியில்லைங்கறதைப் புரிஞ்சிக்கிட்டேன். இவ்வளவையும் தாண்டிதானே தமிழ் சினிமாவுல இத்தனை இயக்குனர்களும் டெக்னிஷியன்களும் வந்திருக்காங்கன்'னும் புரிஞ்சுது. தொடர்ந்து அவர்ட்ட இருந்தேன். அப்புறம் பார்த்திபன் சார் நடிக்கப் போய்ட்டார். எனக்கு வேலை இல்லை. எத்தனை நாளைக்குச் சும்மா இருக்கறது? டைரக்டர் தரணியோட பழக்கம் கிடைச்சது. அவரோடு 'எதிரும் புதிரும்' படத்துக்கு வேலை பார்த்தேன். படம் நின்னு போச்சு. டைரக்டர் எழில் பழக்கமானார். அவரோட வேலை பார்த்தேன். நான் வேலை பார்த்த மூன்று இயக்குனர்களும் என்னை உயரத்தில் வச்சுக் கொண்டாடினாங்க.

ஒரு கட்டத்துக்குப் பிறகு, என் மேல

எனக்கு நம்பிக்கை வந்தது. தனியா படம் பண்ணலாம்னு வெளியே வந்து கம்பெனிகளா அலைஞ்சேன். இதற்கிடையில நான் பட்ட கஷ்டங்களையெல்லாம், என் இலட்சியக் கனவுக்கான அனுபவங்களாகத் தான் பார்த்தேன். எந்த ஒரு விஷயமும் ஈஸியா கிடைச்சிடறதில்லையே?

இந்த நேரத்துல பார்த்திபன் சார், 'இவன்', எழில், 'ராஜா', தரணி 'தூள்' ஆரம்பிச்சாங்க. மூணு பேருமே என்னை வேலை பார்க்கச் சொன்னாங்க.

ஒருமுறை எடுத்த முடிவை மாத்தறதில்லைங்கறது என் பழக்கம். அதனால போகலை. அப்பதான் சத்யஜோதி பிலிம்ஸ்ல படம் பண்ண வாய்ப்பு வந்தது. என்னை ரசிகர்களும் நானும் அடையாளம் கண்டுகிட்ட படமா 'பார்த்திபன் கனவு' அமைஞ்சுது'' என்று மூச்சு விடுகிற பழனியப்பன் தமது தாடியைச் சொறிந்து கொண்டு தொடர்ந்தார்.

''சென்னை திருவல்லிக்கேணியில இருந்து ஏவி.எம். ஸ்டுடியோவுக்கு நடந்தே வந்தேன்; பாக்கெட்ல ஐந்து பைசா இல்லாம, யாராவது டீ வாங்கித் தரமாட்டாங்களா?'ன்னு எதிர்பார்த்துட்டிருப்பேங்'கற மாதிரி எனக்கு எந்த வரலாறும் இல்லை. அப்படியான கஷ்டம் எனக்கு வரலை. ஒரு ஐந்நூறு ரூபாய் மட்டும் எங்கிட்ட எப்போதும் இருக்கும். சினிமாவில ஒரு சின்ன அவநம்பிக்கை வந்தாக்கூட, ஊருக்குத் திரும்பிடணும்னுதான் பஸ் கட்டணத்துக்காக அந்தப் பணத்தை வச்சிருப்பேன். அப்படி எந்த ஒரு அவநம்பிக்கையும் வரலை. முப்பது வயசுக்குள்ள படம் பண்ணணும்னு தீர்மானிச்சேன். நான் போட்ட தீர்மானத்தை நானே சாதிச்சேன்.

"ஒரு பெரிய லட்சியப் படம் பண்ணணும்; இது மாதிரி படம் பண்ணணும், அதுமாதிரி பண்ணணும்னு எதுவும் எனக்கு இல்லை. ஏன்னா, இப்போதைய சூழல்ல படம் பண்றதே பெரிய லட்சியம்தான்! அதேபோல மக்களைச் சென்றடையற எல்லாப் படமும் என்னைப் பொறுத்தவரை நல்ல படம்தான். மக்களுக்காகத்தான் சினிமா பண்றோம். இயக்குனரும் நடிகரும் பார்க்கறதுக்கு இல்ல. அடுத்த படம் டிஸ்கஷன்ல உட்கார்ந்தாச்சு. மக்களை நிச்சயமா சென்றடையும். கரையில்தான் அலை. அலை கண்டு பயந்தா ஆழ்கடல் போக முடியாது. அலை மீது போய்ட்டிருக்கு என் படகு. நிச்சயம் ஆழ்கடல் போகும். போகணும். சவால்தானே வாழ்க்கை!"

- ஏக்ஜி



''தலைவர் எப்பவும் பைனாகுலர் இல்லாம வெளியே கிளம்புறதில்லையாமே...?''

''ஆமா, தொலைநோக்குப் பார்வை இல்லைன்னு ஒரு பத்திரிகையில எழுதிட்டாங்களாம்!''

- யமுனா ரெங்கநாதன்



''உங்க வயற்காட்டில் மரவள்ளிக் குச்சி நட்டு வைச்சிருக்கீங்களா... வாழைக் கன்று நட்டு வைச்சிருக்கீங்களா...?''

''பசங்க விளையாட ஸ்டம்ப் நட்டு வைச்சிருக்கேன்...''

- நாமக்கல் பாலு

5

அலுவலகத்துக்குப் புறப்படுகிற அவசரக் கணங்களுக்குள் கொஞ்சம் கவிதை ஒளிந்திருக்கிறது. நிதானமாகச் செய்கிறபோது வேலைகளில் அத்தனை கலையமாக அகப்படாத நேர்த்தி, எப்படியோ அவசரத்தில் வாய்த்து விடுகிறது. கிறுக்கல் எழுத்துகள், எழுதியவன் மேதையோ என எண்ணச் செய்துவிடுவதுபோல.

மாலு சுலோகங்களை உச்சரித்துக் கொண்டிருந்த சூட்டிலேயே சாதம் ஆகிவிட்டது. ரசம் பொங்கி விட்டது. குளியலறைத் துணிகள் பயந்து எழுந்து பக்கெட்டில் சங்கமமாயின. குழாய் நீர் சுரந்தது. வாஷிங் மெஷின் சப்தமிடத் தொடங்கியது. ஜக்குவின் லஞ்ச் பாக்ஸில் தக்காளி சாதம் ஆவி பொங்க அடைக்கலமானது. "தொட்டுக்கத் தனியா ப்ளாஸ்டிக் பையிலே சிப்ஸ் வெச்சிருக்கேன் ஜக்கூ..." குரலுடன் அவளும் விரைந்து கடந்து வாசலை அடைந்தாள்.

ஈசி சேரும் மாமனாரும் வராண்டாவில் இருந்தார்கள். கையில் விரிந்த ஹிண்டுவில், லாரிகள் வேலை நிறுத்தம் செய்திருந்தன. "போறது போ. இன்னிக்கு டிராஃபிக்கில் மாட்டாம டயத்துக்கு ஆபீஸ் போவே."

உலகின் ஒவ்வொரு அசைவையும் மகிழ்ச்சியையும் துக்கத்தையும், தன் வாழ்வின் அங்கமாக நோக்கும் பக்குவம் மிகப் பெரிது. கர்நாடகாவில் வாட்டாள் நாகராஜ் ஏதாவது கொஞ்சம் சூடாகப் பேசியதாக ஹிந்து நாளிதழ் சொல்லிவிட்டால், உடனே அவருக்குத் தன் உத்தியோக காலத்து சிநேகிதர் ஒருத்தரின் நினைவு வந்துவிடும். பெங்களூரில் மகள் வீட்டுக்குப் பத்து நாள் தங்கிவரப் போன சிநேகிதர். பிரச்னை ஏதுமங்கே வராது இருக்க வேண்டும். தமிழர் குடியிருப்புகள் தாக்கப்படாதிருக்க வேண்டும். தமது நண்பர் நல்லபடி திரும்பி வர வேண்டும். வரும்போது சந்தனத்தாலான சில பொருட்கள் வாங்கிவருவதாக அவர் சொல்லியிருக்கிறார். குளிரினால் போட்டுக் கொள்ள, வாகானதொரு ஸ்வெட்டரும்.


"மெட்ராஸ்ல ஏதுப்பா குளிர்?" என்று குமார் புன்னகையுடன் கேட்டால் பதில் வராது. ஆனால், நண்பரும் ஸ்வெட்டரும் பத்திரமாக வந்து சேர்ந்த பிறகு தினசரி மாலை வேளைகளில் ஏனோ அவருக்குக் குளிருவது போலிருக்கும்.

மாலுவுக்கு, குமாரின் அப்பா முதல் குழந்தை. அப்படி நினைக்க முடிவதால்தான் அவரது உலகத்துச் சாதாரணங்களைத் தனது விநோதங்களாக நினைக்க முடியாமலிருக்கிறது.

தம் பிடிச்ச கௌதம்!

பெங்களூரைச் சேர்ந்த கௌதம் வர்மா என்ற இளைஞர் தமது காதில் கயிற்றைக் கட்டி, அதனால் மாருதி காரை இழுத்து சாதனை புரிந்துள்ளார். அது மட்டும் அல்ல, முப்பத்தெட்டு நிமிடங்களில் ஐம்பத்தேழு தேங்காய்களை தமது பற்களால் உரித்து சாதனை புரிந்துள்ளார்!





மெல்லினம்

பா. ராகவன்

"கதவை சாத்திக்கோங்கப்பா. நான் வரேன்."

காற்றோடு தகவல் சொல்லி, சாலையில் பாய்ந்தாகிவிட்டது. முக்கால் மணி நேர தூரத்தில் அலுவலகம் இருக்கிறது. அது ஒரு அழகு சாதனங்கள் விற்பனை செய்கிற நிறுவனம். பளபளப்பான கண்ணாடிக் கதவுகளின் பின்னே இயங்குகிற பெண்களின் பிரத்தியேக உலகம். வகைவகையான வண்ணக் குழம்புகள், நகப் பூச்சுகள், முகப்பொலிவுக்கு, முடிப் பொலிவுக்கு, கைக்கடக்கமான கைப்பைகள், கண்ணாடிகள். கைக்குட்டைகள், கலையின் அதிகபட்ச சாத்தியங்களை உள்ளடக்கிய காலணிகள். பெண்களுக்கென்று தயாரிக்கும்போது அற்பப் பொருட்கள் கூட அமரத்துவமடைந்து விடுகின்றன. வெறும் காசுக்கு நிகரானதா அவற்றின் மதிப்பு?

"ஹலோ!"

தலை உயர்த்திப் பார்த்தாள் மாலு. 'அட, காஞ்சனா!'

"வா" என்றாள் புன்னகையுடன்.

"இங்கதான் இருக்கீங்களா?"

வேறெங்கே இருக்க முடியும்? சி.ஏ. பாதியில் இருக்கிறது. முடிந்தால் ஒரு புதிய எதிர்காலம் ஓரளவு ஒளிமயமாகத் தென்படக் கூடும். இங்கே விற்கிற பொருள்களில் சிலவற்றையாவது யோசிக்காமல் வாங்கவும் முடியும். ஜக்குவைத் தயங்காமல் சற்றே பெரிய பள்ளிக்கு அனுப்ப முடியும். மூன்று மாதங்களாக உபயோகிக்க முடியாமல் கிடக்கிற குமாரின் ஸ்கூட்டரைத் தூக்கிக் கடாசிவிட்டு, ஒரு நல்ல வண்டி வாங்க முடியும். வீட்டு டி.வி.க்கு எஸ்பேண்ட் போட முடியும். ஒரு வெற்றி கண்டுவிட்டால், அதன் வாசனையில் இன்னும் சில வெற்றிகளும் வந்துவிடக் கூடும். குமாருக்கு ஹிண்டுவில் கூட வேலை கிடைத்துவிடலாம். அல்லது சென்னையில் டைம்ஸ் ஆஃப் இந்தியா பதிப்பு என்கிற வதந்தி உண்மையாகி, அங்கே ஓரிடம் அமையக்கூடும். இரண்டு நல்ல சம்பளங்களில் ஜக்குவின் எதிர்காலத்தை இன்னும் வண்ண மயமாகக் கற்பனை செய்து, வங்கியில்

போட்டு வைக்கலாம். முதலீடு செய்யாத கனவுகளுக்கே வட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறது குழந்தை. வயதுக்கு மீறிய புத்திசாலித்தனத்தில் பலசமயம் பிரமிக்கச் செய்து விடுகிறான்.

"நம்பவே முடியலே காஞ்சனா... நேத்து கேக்கறான், அம்மா நான் டைரி எழுதப் போறேன், ஒண்ணு வாங்கித் தரியான்னான் பாரு... தூக்கி வாரிப் போட்டுடுத்து எனக்கு."

ஷாப்பிங் முடித்திருந்த காஞ்சனாவுக்கு உட்கார்ந்து பேச அவகாசம் இருந்தது. ஆனால் மாலு டியூட்டியில் அல்லவா இருக்கிறாள்?

'அதனால் பரவாயில்லை. வா, ஒரு காப்பி சாப்பிடலாம்' என்று எழுந்து, கிளம்பினாள் மாலு. இரண்டு வீடுகள் தள்ளி வசிக்கிறவள். ஓர் அவசர ஆத்திரத்துக்குக் கூடுதல் பால் பாக்கெட் வாங்கிச் சமாளிக்க எப்போதும் உதவுபவள். தீபாவளிக்கு இனிப்புகள், கிருஷ்ண ஜெயந்திக்குச் சீடை, என்று தட்டுகள் மாற்றிக் கொள்கிற நெருக்கத்துக்கு ஒரு காப்பி அவசியமே.

"இவளே, கொஞ்சம் பாத்துக்கோ. வந்துடறேன்" என்று வெளியே வந்து சாலையைக் கடந்து, எதிரே ஓட்டலுக்குள் நுழைந்து, ஓர் ஓரத்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்கள். கடவுளுக்கு நன்றி! வெளியே வந்தால் தான் சூழ்நிலையில் சூடு தெரிகிறது. பளபளப்பான அழகு சாதன நிறுவனத்தில் விற்கிற பொருட்களை வாங்க முடியாவிட்டாலும், அந்தச் சூழ்நிலையின் குளுமையிலாவது வாழ அனுமதித்திருக்கிறது வாழ்க்கை.

ஆயினும் சொல்வதற்கில்லை. சி.ஏ. முடித்துவிட்டால் ஏ.ஸி. ஓட்டலுக்கே காஞ்சனாவை அழைத்துப் போக முடியும்.

"சொல்லு" என்றாள் காஞ்சனா. "ஆனா ஒண்ணு மாலா. உங்க பையன் தான் என் பொண்ணுக்கு ரோல் மாடல். வீட்டுல எப்பப்பார் அவனைப் பத்தித்தான் பேசிக்கிட்டே இருக்கா. ஒரு நாளைக்கு நூறு ஜக்கு சொல்லாட்டி அவளுக்குத் தலை வெடிச்சிடும். உங்க வீட்டு நாய்... அதும்பேர் என்ன, ஆங்... வெங்கடாஜலபதி. ஹூம். என்ன ஒரு பேர் வெச்சிருக்கான் பாருங்க! அது கந்த சஷ்டி கவசம் கேசட் போட்டதும் கைகூப்பு தாமே? எப்பிடி கத்துக்குடுத்தான்?"

மாலு சிரித்தாள். இன்னது தான் செய்திருப்பான் என்று யூகிக்கவே இடம் கொடுக்காத ஜக்கு. பத்து நாட்களுக்கு முன்பு முளை விட்டிருந்த வேம்புக்குத் தயிர் சாதத்தை அவன் வைக்கும்போது அவள் பார்த்து விட்டாள்.

"என்னடா இது? வேப்பஞ்செடிக்குத் தயிர்சாதத்தை வெக்கறே?"

"எதுவுமே வெக்காம முளைக்கும்மா வேப்பமரம்... ஆனாலும் ஏதாவது நாம வெச்சாத்தானே அது நம்முது?" என்றான்.

"இவனைப் பார்த்துட்டு எங்க குட்டி ஒரு வேப்பங்கன்னை எடுத்துக்கிட்டு வந்து நட்டு, இந்தக்ஷணம் இதுக்கு ஒரு பாக்கெட் பால் ஊத்தினாத்தான் ஆச்சுன்னு அடம் பிடிக்கறா" சொல்லிவிட்டுத் தன்னை மறந்து சிரித்தாள் காஞ்சனா.

"குழந்தைங்க படிப்பு தவிரவும் மத்ததுல ஆர்வமா இருக்கிறது சந்தோஷம் தான் காஞ்சனா. ஆனா உலகத்துக்குப் பொருந்தாம போயிடாமப் பாத்துக்கணும்." என்றாள் மாலு.



"நம்ம ரெண்டு பேரோட ஜாதகத்தையும் ஜோசியர்கிட்டே கொடுத்து பார்க்கச் சொன்னேன்..."
"வெரிகுட்! என்ன சொன்னார் ரமேஷ்?"

"எங்கியாவது ஊருக்குப் போகணும்னு தொணப்பிக்கிட்டே இருக்கா குட்டி."

"கூட்டிண்டு போக வேண்டியது தானே?"

"அதான், வர சண்டே மகாபலிபுரம் போகலாம்னு இருக்கோம்."

"நைஸ் ஐடியா" என்றாள் மாலு.

ஜக்குவைக்கூட எங்காவது அழைத்துப் போகவேண்டும். மெரினாவையும், உயிரியல் பூங்காவையும் தவிர வேறு எதையும் அவன் பார்த்ததில்லை. சொல்லிக் கொள்ளும்படியான உறவினர்கள் யாரும் கொஞ்ச நேரம் பயணம் செய்து போகக் கூடிய தூரங்களில் இல்லை. அவளது அப்பா, அம்மா இருக்கும் கே.கே. நகருக்கு அரை மணியில் போய்விடலாம். அத்தைகள், மாமாக்கள், பெரியம்மாக்கள், சித்திகள் என்று படையாகத் திரளக் கூடிய உறவுகள் இல்லாது போனது துர்திருஷ்டமே. கொஞ்சம் திறந்த மனத்துடன் யோசித்தால், உலகம் முழுவதையும் உறவாக்கிக் கொண்டுவிட முடியும்தான். ஆனால்

அவசரத்துக்கு பால் பாக்கெட் கொடுத்து உதவுகிறவளுக்கு ஒரு கப் காப்பி, என்று எழுகிற சிந்தனையை ஏனோ தவிர்க்க முடியாமல் போய்விடுகிறது.

"நானும் யோசிச்சிக்கிட்டுத்தான் இருக்கேன் காஞ்சனா. எங்கியாவது ஒரு நாள் வெளில போகணும். குழந்தை பாவம் ஏங்கிப் போயிருக்கான். ரொம்ப நாளாச்சு நாங்க வீட்டை விட்டுக் கிளம்பியே."

"வாங்களேன், மகாபலிபுரத்துக்கு" என்றாள் காஞ்சனா.

ஞாயிற்றுக் கிழமை மகாபலிபுரம் என்றால் ஜக்கு ஒரு பறவையாகிவிடுவான். அதுவும் குட்டி உடன் வருகிறாள். இரண்டு குடும்பங்களும் ஒன்றாகப் போகின்றன என்றால் கேட்கவே வேண்டாம். ஆனால் அதிலும் சங்கடங்கள் இருக்கின்றன. பொருளாதாரச் சங்கடங்கள். டிக்கெட் வாங்குவதில் தொடங்குகிற இருப்பியல் சங்கடங்கள். வெளியே பேசிவிட முடியாத, மிகவும் அந்தரங்கமான நெருடல்களைத் தரக்கூடியவை அவை. ஆயினும் யோசிக்க வேண்டிய விஷயம்தான். குமாரிடம் கேட்டுப் பார்க்கலாம் என்று நினைத்துக் கொண்டாள்.



இரவு ஜக்கு தூங்கியபிறகு அவள் குமாரிடம் விஷயத்தைத் தெரிவித்தபோது, உண்மையிலேயே அது ஒரு நல்ல யோசனை என்று அவன் சொன்னான். "மகாபலிபுரம் பக்கத்துல தான் இருக்கு. சரித்திர பூமி. நீ சிவகாமியின் சபதம் படிச்சிருக்கியா?"

அவள் சிவகாமியின் சபதம் படித்திருக்கவில்லை. ஆனால் சில பழைய விஜயகுமார் படங்களில் மகாபலிபுரத்தைப் பார்த்திருக்கிறாள். கொளுத்துகிற வெயிலில் உச்சிப் பாறையில் நிகழும் க்ளைமேக்ஸ் சண்டைக் காட்சிகள். கடவுளே! மண்ணெங்கும் அழகு கொட்டிக் கிடக்கிற இடத்தில் எப்படி இவர்களால் அடிதடிக் காட்சிகளை அந்தரங்க சுத்தியுடன் படம்பிடிக்க முடிகிறது? கைக்கெட்டும் தூரத்தில் இருப்பதாலேயே கலையின் சான்னித்தியம் ஒரு பொருட்டில்லாமலாகிவிடுமா என்ன? நகம் கடித்தபடி சண்டைக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே யோசிப்பாள். அது ஞாபகத்துக்கு வந்துவிட்டதில், மெல்லிய முறுவலொன்று அவளை மீறிப் பூத்து உதிர்ந்தது.

"அப்ப போலாமா?" நிச்சயப்படுத்திக் கொள்ளும் விதமாக மீண்டும் கேட்டான்.

"போலாமே. என்ன பிரச்னை? வீட்டை அப்பா பார்த்துப்பார். நாம போயிட்டு வரலாம். என்ன ஒரு முந்நூறு ரூபா செலவு. பாதிக்கு மேலயே நாம செலவு பண்ற துன்னாலும் இருநூறு தாண்டாது. பரவாயில்லை. போகலாம்" என்று தீர்மானமாகச் சொன்னான் அவன். "எதுக்கும் கொஞ்சம் நிறையவே புளியோதரை கலந்து எடுத்துண்டுடு."

"அப்ப சரி" என்று உறங்கிப் போனாள் மாலு.

விடிந்ததும் ஜக்குவிடம் விஷயத்தைச் சொல்லி, அவனது குதூகலத்தை அள்ளி விழுங்கத் தயாராக இருந்தாள் அவள். ஆனால் குட்டி குடும்பத்துடன் ஒன்றாக மகாபலிபுரம் போகிறோம் என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னபோதும், அவனது முகத்தில் மகிழ்ச்சியின் முழுமை தென்படாதது அவளுக்கு ஆச்சர்யமாயிருந்தது.

"ஏண்டா, என்னமோ மாதிரி இருக்கே காலங்கார்த்தால?"

"ஒண்ணுமில்லம்மா" என்றான் ஜக்கு.

"உனக்கு சந்தோஷம்தானே, மகாபலிபுரம் போறது?"

"ஆமாம்மா."

"என்ன நீ? ஆமான்னு சாதாரணமா சொல்றே? பயங்கர ஹேப்பி இல்லியா உனக்கு?" அவனது பாஷையிலேயே உற்சாகப்படுத்தும் விதமாகக் கேட்டாள்.

"ஹேப்பிதான்."

"ம்ஹூம். சரியில்லை! என்ன ஆச்சு உனக்கு? குட்டியோட சண்டையா?"

"இல்லியே?.." என்றான் அவன்.

"பின்னே? ஏன் சுரத்தே காணோம்?"

"ஒண்ணுமில்லே" என்று விறுவிறுவென வாசலுக்குப் போனான் ஜக்கு.

ஏதோ இருக்கிறது என்று மாலுவுக்கு உறுதியாகத் தோன்றியது.

(தொடரும்)



முகிழ்த்தல்...

யதார்த்தம்
எப்போதெல்லாம்
மொழியோடு
பூரணமாய்ப் புணர்கிறதோ...

பூவின் மலர்ச்சி
எப்போது
பதங்களால்
படியெடுக்கப்படுமோ...


வார்த்தைகளுக்கு
வாளின் கூர்மை
என்றைக்கு
வாய்க்கப் பெறுமோ...

கண்ணீரின் அர்த்தம்
என்றைக்கு
வரிகளுக்கு
வசியப்படுகிறதோ...

தாலாட்டிலுள்ள உயிரோட்டம்
என்றைக்கு
தாள்களில்
வடிக்கப் பெறுகிறதோ...

அப்போதெல்லாம்
ஒரு மொழி
கவிதையாகி விடுகிறது.

-சி.பாவல்



நாக்கும் ஒண்ணு; வாக்கும் ஒண்ணு!

"**சா**க்கடையைச் சுத்தம் பண்ணணும்னு இறங்கினா, நாலு கொசு கடிக்கத்தான் செய்யும். நாமதான் தட்டி விட்டுட்டு நம்ம வேலையைப் பார்க்கணும்" - பஞ்ச் டயலாக் நம்பர் ஒன்!

"நாக்கும் ஒண்ணு; வாக்கும் ஒண்ணு. மதுரைக்காரன் வார்த்தை மாறிப் பேச மாட்டான்" - பஞ்ச் டயலாக் நம்பர் டூ!

'தென்னவன்' - படப்பிடிப்பில் விஜயகாந்தின் கணீர்க்குரல் கேட்டது.

"என்ன ஸார்... படம் முழுக்க அரசியல் நெடி வீசுதே! முஷ்டி மடக்கி கோதாவில் இறங்கியாச்சா?" என்று கேட்டால்...

"நான் என்ன பேசினாலும் அதுக்கு நீங்களா காது, மூக்கு, பூவு, பொட்டு வைச்சு அனுப்பிடறீங்க... அப்புறம் என்கிட்டேயே வந்து கேட்கறீங்க. நான் என் செய்யட்டும்?" என்று சலித்துக் கொள்கிறார்.

"இது அரசியல் உள் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட படமா? பளிச்சுனு சொல்லுங்க!"

"இல்லை. இது மனத்தைத் தொடும் கருத்துள்ள படம். நாலு மாசமா கதை கேட்டு, கடைசியில் அமைஞ்ச படம்" என்றவர் ரொம்ப எச்சரிக்கையுடன் கதையைப் பற்றி இரண்டு வரி சொன்னார்.

விஜயகாந்த் இதில் 'ஐபிஎஸ்' ஆகவும் நடிக்கிறார். 'ஐஏஎஸ்' ஆகவும் நடிக்கிறார். இடைத் தேர்தல் சமயத்தில் நடக்கும் ஒரு பிரச்னையில் முதலமைச்சருடன் மோத... கடைசியில் நீதி வெல்கிறது. தர்மம் நிலைக்கிறது.

"'தென்னவன்'லே உங்க ரசிகர் மன்றக் கொடியை அடிக்கடி காட்டறீங்களாமே?"

"ஏன் காட்டக் கூடாதா? என்னோட மன்றக் கொடியை பாப்புலரைஸ் பண்ண, நான் யாரைக் கேட்கணும்? வட்டிக்கு வாங்கி, கைக் காசைப் போட்டு படம் எடுக்கறேன். அதுலே என் மன்றத்துக் கொடியைக் காட்டுவதன் நோக்கம் என்னவா இருந்தா என்ன?"

"'சண்டியர்'னு வைச்சா பிரச்னை வருது. 'தென்னவன்'னு வைச்சா எதிர்ப்புக் கிளம்பாதா?"

"இந்தத் தலைப்பை, இரண்டு வருஷத்துக்கு முன்பே பதிவு செஞ்சு வைச்சுட்டேன். நான் 'சவுத்'தானே? அப்புறம் என்னத்தை அரசியல் சாயம் பூச முடியும்? படம் ரொம்பப் பிரமாதமா வந்திருக்கு. விவேக் காமெடி, யுவன் ஷங்கர் இசை, ராக்கி ராஜேஷ் ஸ்டண்ட், நந்தகுமார் இயக்கம்னு ரொம்ப ரிச்சா இருக்கு" என்று சந்தோஷப்பட்டுக் கொண்டார் கேப்டன்.

- பாரதி



கோடம்பாக்கத்தில் புது முகங்கள் பற்றிய செய்திகளைப் போட்ட, பத்திரிகைகளுக்குக் கோட்டையில் வாய்ப்பு வந்திருக்கிறது. தேங்க்ஸ் டு ஜெ! கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் அரசு ஊழியர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டு, அவர்களது வேலை ஊஞ்சலாடும் நிலையில், தமிழக அரசு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருந்தோரை ஸீனியாரிட்டி அடிப்படையில் நான்காயிரம் ரூபாய் தொகுப்புச் சம்பளத்தில் நியமனம் (பதினைந்தாயிரம் பேர்) செய்திருக்கிறது. சென்னை கோட்டையிலும், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலும் சேர்த்து இரண்டாயிரம் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தினசரி நாற்காலியைத் தேய்த்துவிட்டுப் போகிறார்களே தவிர, இவர்களுக்கென்று ஏதும் பணி ஒதுக்கப்படவில்லை. "இவர்கள் நீடிப்பார்களா, அப்படியே நீடித்தாலும், சம்பள விகிதங்கள் என்ன?" என்ற கேள்வியெல்லாம் எழுகிறது. இந்த புதுப் பணியாளர்கள் மிகவும் உஷாராக, ஆளுங்கட்சி சார்பு தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஆகியவற்றைத் தவிர வேறெதற்கும் பேட்டி கொடுக்கத் தயங்குகிறார்கள். தேனி, பெரியகுளம், பகுதியைச் சேர்ந்த மகாலிங்கம், வெங்கடேஷ் பிரபு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து விட்டு பதினைந்து ஆண்டுகளாக, நிரந்தர அரசுப் பணிக்காகக் காத்துக் கொண்டிருப்பவர். உடல்





• வெங்கடேஷ் பிரபு

ஊனமுற்றவர். இவருக்கு இப்போது அதிர்ஷ்டம் (?) அடித்திருக்கிறது. இன்னமும் பணி ஒதுக்கப்படவில்லை.

"என்ன வெங்கடேஷ் பிரபு.. வேலை நீடிக்குமா?"

"நீடிக்கணும் ஸார். நீடிக்க வேண்டும். முதல்வர் கருணை காட்டுவார் என்று நம்புவோம்"

"நிரந்தரமாகக் கொடுத்தால் எந்தவித கோரிக்கையும் வைக்காமல் இதே சம்பளத்தில் ஓய்வு பெறும் வரை வேலை செய்வீர்களா?"

"ஸார்... நம்மளை வம்பில் மாட்டி விடாதீங்க!"

"முதல்ல ரொம்பத் தடுமாற்றமா இருக்குமே?"

"நான் தற்காலிகப் பணியாளராகச் சில அலுவலகங்களில் வேலை செய்திருப்பதால் எனக்கொன்றும் பிரச்னை இருக்காது என்று நினைக்கிறேன். மற்ற புதியவர்கள்கூட, சில நாட்கள் பயிற்சியில் பிக்-அப் செய்து கொள்ளலாம்."

"டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்கள் உங்களைப் பார்த்து வயிற்றெரிச்சல் படக் கூடுமே!"

"அது மனித இயல்புதானே! ஆனால் அவர்களது இந்த நிலைக்கு நாங்கள் காரணமல்லவே! மேலும், இப்போது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பலர் டிஸ்மிஸ் செய்யப்பட்ட ஊழியர்களின், மனைவி, மகன் மகள் தான். முதல்வர் தாயுள்ளத்தோடு அவர்கள் நிலையையும் பரிசீலனை செய்வார்கள்"

வெங்கடேஷ் பிரபு எம்.எஸ்சி. (கணிதம்) தேறியவர். மனைவி, இரண்டு பெண் குழந்தைகள். "ஊரில் எங்கள் நிலத்தை ஒருவர் கபளீகரம் செய்துவிட்டார். அதை மீட்டுத் தர முடியுமா?" என்று பரிதாபமாகக் கேட்கிறார் பிரபு.

வயிற்றெரிச்சலாப் போச்சே!

டிஸ்மிஸ் செய்யப்பட்ட ஒரு ஸீனியர் பெண் ஊழியரைச் சந்தித்தோம். "இருக்கிற சலுகையைப் பறிக்காதீர்கன்னுதான் சொல்றோம். எங்களுக்கும் பொது மக்களுக்கும் இடையில் மோதலை உண்டு பண்ணப் பார்க்கிறது தமிழக அரசு. நாங்களும் சமூகத்தில் ஓர் அங்கம்தானே?

"எங்கள் யூனியன் தலைவர்கள் 'அரசு எது வரையில் செல்லும்?' என்பதைக் கணிக்கத் தவறிவிட்டார்கள். நாங்கள் எதிர்பார்த்த அளவு அரசியல் கட்சிகளும் எங்களை ஆதரிக்கவில்லை. புது ஊழியர்கள் எடுப்பது என்பது ஒரு ஸ்டண்ட்தான். நான்காம் பிரிவினரைத் தவிர, மற்ற எல்லோரையும் சர்வீஸ் கமிஷன்தான் பரீட்சை வைத்து செலக்ட் செய்ய வேண்டும். எனவே, புதியவர்கள் நீடிப்பது சந்தேகமே. முட்டி, மோதி, தட்டுத் தடுமாறி முதல்வர் தயவிலோ, நீதிமன்ற உத்தரவுப்படியோ மீண்டும் வேலையில் சேர்ந்தாலும், இந்தக் கொடிய அனுபவம் வடுவாக நிலைத்து விடும்" என்றார் அவர்.

சில குடும்பங்களில் மாமியார்கள், டிஸ்மிஸ் ஆன பெண் ஊழியர்களை, "வேலை போச்சோ, துரத்திவிடுவேன்" என்று மிரட்டுகிறார்களாம்!

- கௌசி

படம் : ராஜன்



காட்சி: 48 (தொடர்ச்சி)

பாத்திரங்கள்: செல்வம், கீதா, கண்ணன், கபிலா.

கீதா, செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்க, அனைவரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

கண்ணன்: 'அரசியல் லாபம்; ஆட்சியாளர்களோடு இசைந்து போ; இயன்றவரை சொத்து சேர்; ஈதல் விலக்கு; உனக்காக யோசி; ஊரைக் கெடுத்து வாழ்; எத்தரே மேலோர்; ஏமாற்றிப் பழகு; ஐயம் கொள் நண்பர்களிடம்; இப்படிப் போகும், ஆத்திச்சூடி, திடும்னு இப்படித் திரும்பிடுச்சு. கல்லூரி நடத்திக் கொள்ளை அடி; சாராயம் காய்ச்சினால் சட்டமன்றம் போகலாம்; எங்கக் கல்லூரி முதலாளிகளில் ஒருத்தர் சாராயம் விற்று, அரசியல்வாதி ஆனவர். அவர், தன்னைப் பத்திதான் எழுதப் பட்டதுன்னு, வரதராசனை வெளியேத்தச் சொல்லிட்டார். மாணவர்கள் 'ஸ்டிரைக்' பண்ணோம்.

கீதா: ஸ்டிரைக் ஜெயிச்சுதா?

செல்வம்: மாணவர்கள் லட்சியம் தோற்காது. பெரும்பாலும் தோற்காது. என் கேள்வி, அந்தச் சாராய வியாபாரி திருந்தினாரா? தன் வாழ்க்கையை மாற்றிக்கிட்டாரா?

கண்ணன்: இல்லை. ஒரு கவிஞர், எழுதிய ஒரு கவிதை, நினைவுக்கு வருது. கருத்து இதுதான். எங்களூரில் ஒருவர், நகரசபை உறுப்பினர் ஆனார் எம்.எல்.ஏ ஆனார். எம்.பி ஆனார். மந்திரியும் ஆனார். கடைசிவரை மனிதராகவே இல்லை. அது மாதிரி.

செல்வம்: என் கேள்வி இதுதான். யாரையும் திருத்துதா, நம்ம அறிவுப் பிரச்சாரம்? வள்ளுவர் முதல் வள்ளலார் வரைக்குமான எத்தனை பெரியவர்கள் நமக்குச் சொன்னார்கள்? நாம் மாறினோமா? முன்னேறினோமா? மனசளவில், இந்த இலக்கியம், கலைகள் ஏதாச்சும் சலனத்தை நமக்கு ஏற்படுத்தியிருக்கா? படிப்பு, மனுஷனை உருவாக்கி இருக்கா? படித்தவன் யோக்யதை எப்படி; படிக்காதவன், படிச்சவனைக் காட்டிலும் யோக்யன் என்றால், படிப்பு என்ன பண்ணியது, படிச்சவனுக்கு? இதெல்லாம்



பிரபஞ்சன்

பூச்சி காட்டும் பூச்!

ஆஸ்திரேலியாவில் உள்ள மிருகக் காட்சி சாலை ஒன்றில் உள்ள இந்த கரப்பான் பூச்சி உலகிலேயே மிகப் பெரிய கரப்பான் பூச்சி. மூன்றே கால் அங்குல நீளம்!

இந்த இதழ் முழுக்க இடம் பெற்ற வெளிநாட்டுத் துணுக்குகளை எழுதியவர்: வில்லவன்கோதை

ஜீவநதி

என்னைத் துன்புறுத்தது கீதா.


கீதா: படிப்பு, படிச்சவனை, உத்தியோகஸ்தனை உருவாக்கியது. மேல இருக்கிறவன் கீழே இருக்கறவனை நசுக்க உத்தியோகம் உதவுது. மனம் அடங்கலை. நிறைய வசதி தேவைப்படுது. அதுக்கு நிறையப் பணம் வேண்டி இருக்கு. லஞ்சம் உருவாகுது. ஒரு அரசு உத்தியோகஸ்தர், எங்க சொந்தக்காரர். அவர் ஒரு நியாயம் சொன்னார். திடீர்னு, மாரடைப்பு வந்தா, அப்போலோ போகணும். அதுக்கு லட்சம் வேணும். அதுக்காகப் பணம் வேணுமென்னார்.

கண்ணன்: அப்போ, அரசாங்க ஆஸ்பத்திரி?

கீதா: அரசாங்க ஆஸ்பத்திரி மேல அரசை நடத்தறவங்களுக்கே நம்பிக்கை இல்லையே? மந்திரிங்க, மக்கள் செலவில, அமெரிக்கா போவாங்களாம். மக்கள், அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் போகணுமாம். இன்னிக்கு எஸ்.பி.யோட பேசும்போது, எனக்குத் தோன்றியது, நம்ம பள்ளிக்கூடப் பிரச்னைக்கு நீதிமன்றத்துக்குப் போகணும்னு முடிவு பண்ணி இருக்கேன். நீதிமன்றம் சொல்லட்டும், நான் சட்டபூர்வமான காரியம் செய்றேனா, இல்லையான்னு...

கண்ணன்: இனிமேல், ஊரைக் கோர்ட்டுதான் வழி நடத்தும் போல.

கீதா: கண்ணன், கீழ போயி, காபி போட்டுக் கொண்டு வாயேன். செல்வமும் களைப்பா



16

வந்திருக்கார். *(கண்ணன் கீழே இறங்கிப் போகிறான்.)* ஆனா, செல்வம் சார். நாம் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. எவ்வளவு தான் எல்லாம் மோசமாப் போனாலும், இன்னும் கிரிமினல்கள் எங்கோ ஒருத்தராத்தானே இருக்காங்க.

கீதா: இருக்கட்டும். அந்த எண்ணிக்கை குறையும். நம்பிக்கை வேணும், செல்வம்.

செல்வம்: நம்பிக்கை இருக்கு, கீதா. இல்லாமே, இந்தக் காரியங்களைச் செய்வேனா? பிரச்னை என்னன்னா, எல்லோரும் நடக்கிற வழியில நாம் நடக்கலை. புதுசா, பாதையையும் போட்டு, நாம் நடக்க வேண்டி இருக்கு. நமக்கு ஏற்படற சங்கடங்கள், அதனால்தான்.

காட்சி 49

மாலை/தெரு

பாத்திரங்கள்: வேதகிரி, சுசீலா

கோயிலில் இருந்து திரும்பிக் கொண்டிருக்கிறாள் சுசீலா. எதிரில் வருகிறார், காத்திருந்து வந்து சந்திக்கிறார் வேதகிரி. இடது கைப் பக்கமாக, நடைபாதை வழியாக நடந்து வரும் சுசீலாவைக் கண்டு, எதிர்ச்சாரியில் இருந்த அவர், பாதையின் குறுக்காக நடந்து வருகிறார்.

வேதகிரி: சுசீலா... சுசீலாம்மா... *(திரும்புகிறாள். ஆச்சரியம் அடைகிறாள்.)*

சுசீலா: மாமா, வாங்க. எப்போ வந்தீங்க?

வேதகிரி: இந்த ஊருக்கு மதியம் வந்தேன். கொடுக்கல் வாங்கல் விவகாரம் ஒண்ணு. சாட்சி சொல்லணும்னு கேட்டுக்கிட்டாங்க. வந்தேன். வெள்ளிக்கிழமை சாயங்காலம் கோவிலுக்கு வருவேன்னு தெரியும். உன்னைப் பார்க்கணும்போல இருந்துச்சு, குழந்தை.

சுசீலா: என்ன மாமா, இது. வீட்டுக்கு வரப் படாதா?

வேதகிரி: எப்படி, எப்படி வர்றது? எந்த முகத்தை வச்சுக்கிட்டு உங்க வீட்டுப் படியேர்றது? உங்க அம்மாவுக்கு நான் என்ன பதில் சொல்றது?

சுசீலா: அதனால என்ன மாமா?

வேதகிரி: அதனால என்னவா? என் பையன் யோக்கியன், மகா நல்லவர், அவனுக்குப் பெண் கொடுங்கன்னு கேட்டு நான் தானே உங்க வீட்டுக்கு வந்தவன். அந்தக் குற்ற உணர்ச்சி. அதனால, இப்படித் தெருவில பார்க்க வேண்டி இருக்கு, என் மருமகளை.

சுசீலா: எனக்கு உங்களைப் புரிஞ்சுக்க முடியாது, மாமா. உங்க பிள்ளை செய்த தவறுக்கு நீங்க என்ன பண்ணுவீங்க?

வேதகிரி: யாரோ செய்த தவறு. வீணாகி இருக்கிறது உன் வாழ்க்கைதானே?

சுசீலா: இல்ல மாமா. நான் அப்படி நினைக்கலை, மாமா. கல்யாணம், உங்க பிள்ளை, கொஞ்ச கால தாம்பத்யம். இதோட என் வாழ்க்கை தீர்ந்துட்டதா நான் நினைக்கலை, மாமா. இது மட்டும்தானா வாழ்க்கைன்னு தோணிப் போச்சு.

வேதகிரி: இன்னும் என் மகனை நம்பிட்டு இருக்காதே. அவன், வேற பெண் பார்க்கத் தொடங்கி இருக்கான். அதுக்கு அவன் அம்மாவும் உடந்தையா இருக்கா. காஞ்சிபுரத்திலேந்து ஒரு ஆள், என்கிட்டயே வந்து பேசினான். நான் விரட்டி விட்டுட்டேன். உன் பக்கத்திலேந்து ஏதாவது செய்யணும் நீ.

சுசீலா: என்ன பண்ணலாம், சொல்லுங்க.

''நம்ம தலைவர் 'நம்பவே முடியலை... நம்பவே முடியலை'ன்னு சொல்லிக்கிட்டு இருக்கிறாரே, ஏன்...?''

''விசாரணைக் கமிஷனில், அவர் 'நிரபராதி'ன்னு சொல்லிட்டாங்களாம்...''

– நாமக்கல் பாலு

வேதகிரி: வா. உன் புருஷன் வீடு என் வீடுதானே? அந்த உரிமையில சட்டமா வந்து உக்காரு. என்ன பண்ணிடுவான், பார்ப்போம்...

சுசீலா: இது எனக்கு அவமானம், மாமா... *(கோயில் தெப்பக்குளம் வழியாக வந்து படியில் அமர்கிறார்கள்.)*

வேதகிரி: என்ன அவமானம்?

சுசீலா: என்னை மனசால நேசிக்காதவனைப் புருஷனா நினைக்கிறது... அவன் வீட்டுக்கு வர்றது. அவன் வீட்டுல தங்கறது. அவன் சாப்பாட்டைச் சாப்பிடறது. அவன் செய்யற அவமானங்களை ஏத்துக்கிறது. எதுக்கு? என்ன அவசியம்?

வேதகிரி: உன் ஸ்தானத்தை நீ எடுத்துக்க வேண்டாமா?

சுசீலா: எது ஸ்தானம்? அப்படி ஒண்ணு இருக்கா? இரண்டு பேரும், அன்பாலே சேர்ந்து இருக்க வேண்டிய ஒரு இடத்துல, தாசில்தார் ஆபீஸ் ரிக்கார்டை எடுத்துக்கிட்டுப் போய் உரிமை கொண்டாடறதா?

அவருக்கு நான் வேண்டி இருக்கலை. அப்புறம், என்னத்துக்கு இதெல்லாம்? எனக்கும் இனிமே, அவருக்கு மனைவியா வாழ முடியும்னு தோணலை, மாமா... தானா கனியறதுதானே வாழ்க்கை? ரசாயன மருந்து போட்டா கனிய வைக்க முடியும்?

வேதகிரி: அவன் வேற கல்யாணம் பண்ணிக்கப் போறாம்மா.

சுசீலா: ரொம்ப நல்லது. அவர் பண்ணிக்கிட்டா. அதையே காரணமாக் காட்டி, நான் அவரிட்ட இருந்து விலகிக்க முடியும் இல்லையா?

வேதகிரி: விலகிக்கலாம். ஆனால் உனக்கு நியாயமா கிடைக்க வேண்டிய சொத்துக்களை அப்புறம் அடையறதுல சிக்கல் வரும்.

சுசீலா: எனக்கு சொத்து தேவையில்லை,



மாமா. அவர்கிட்ட இருந்து வாங்குகிற சொத்து, பிச்சைக்குச் சமம். எனக்கு அது வேணாம். அவரையே வேண்டாம் என்கிற போது, அவர் சொத்து மட்டும், எனக்கு எதுக்கு?

வேதகிரி: இல்லேம்மா, என் மகனா இருக்கட்டும். சுத்த அயோக்கியன், அவன், ஏதாவது ஒரு வகையில நட்டம் அடையற மாதிரி இருந்தாதானே சரி?

சுசீலா: *(சிரிக்கிறாள்)* உங்க நியாய மனசு, இப்படிச் சொல்றது. எனக்குப் பகை, கோபம் எதுவும் இல்லை, மாமா. நான் இப்ப சந்தோஷமா இருக்கேன். இப்படியே இருந்துட்றதுதான் எனக்கு நல்லது. பிறத்தியார் துன்பத்துக்குக் காரணமா நான் இருக்க முடியாது.

வேதகிரி: அவன், 'பிறத்தியார்'னு சொல்ற அளவுக்கு அந்நியனாயிட்டானா?

சுசீலா: ஆமாம், மாமா.

வேதகிரி: ரொம்பச் சரி. இருந்தாலும்... *(அவர் தெப்பக்குளத்தை வெறிக்கிறார், ஏராளமான சுழல் அலைகள், குளத்தில் ஏற்பட்டபடி இருக்கின்றன.)* இழப்பு, இழப்புதானேம்மா, உனக்கு?

சுசீலா: நான் அப்படி நினைக்கலை, மாமா. *(இலேசாக இருட்டத் தொடங்குகிறது)*

வேதகிரி: நீ புறப்படும்மா...

சுசீலா: வீட்டுக்கு வாங்க, மாமா. வந்து சாப்பிட்டு, இரவு தங்கி இருந்துட்டு, நாளைக்குப் போகலாம்.

வேதகிரி: அதுக்குத் தயாரா வரலைம்மா. இன்னொரு தடவை வர்றேன். வா, உன் தெருமுனை வரைக்கும்கூட வர்றேன். *(இருவரும் நடக்கிறார்கள்)* எப்படி இருக்காம்மா, அந்தப் பையன்? மாடியில வாடகைக்கு இருக்கானே?

சுசீலா: நல்லா இருக்கான். உங்களைப் பார்த்தா ரொம்ப சந்தோஷப் படுவான். ரொம்ப நல்ல மாதிரிப் பையன். இந்தச் சின்ன வயசுல, என்ன உபகார சிந்தனை, மத்தவங்களுக்கு உதவற குணம்? இந்த வயசுக்கு உரிய காரியம் எதுவுமே இல்லை மாமா, அவனுக்கு.

வேதகிரி: சில பிள்ளைகள், இப்படி நல்ல மாதிரியா அமைஞ்சிடும். இதைத்தான் பிராப்தம்னு சொல்றது. தர்மன் பிறக்கிறதும், துரியோதனன் பிறக்கிறதும், பெற்றோர் செய்த புண்ணிய பலன்னு சொல்வாங்க.

சுசீலா: தர்மன், துரியோதனன்னு தெளிவா ரெண்டு வாரிசு இருக்கா, மாமா? தர்மம், அதர்மம்னு பெரிசா, கோடு கிழிக்கிற மாதிரி பிரிவு இருக்கிறதா தெரியலை. தர்ம, அதர்ம அம்சங்களிலே அறுபது சதம் எந்தப் பக்கம் இருக்கோ, அப்படி இருக்காங்க, ஜனங்க, அப்படித்தானே இருக்க முடியும். நூறு சதம் தர்மன், நூறு சதம் துரியோதனன் இல்லை. தர்மத்துக்குப் பொறாமை குணம் இருக்கு. தலைமை ஸ்தானத்துல ஆசை இருக்கு. துரியோதனுக்குக் கொடை குணம் இருக்கு. சிநேகிதனை நம்பற குணம் இருக்கு. அசலான வீரம் இருக்கு. இப்படிக் கலந்து கலந்துதானே குணம் இருக்கு.

(தொடரும்)

ஷ்...ஷ்...ஷ்...!

மறந்து விடுவோமா இந்தப் புது முகத்தை? எங்கேயோ பார்த்த முகம் போலல்லவா இருக்கிறது? நமக்குப் பழகிய முகமான கஜோலின் தங்கைதான் புதுமுகம் தனிஷா! நூதன், தனுஜா, கஜோல் வழியில் இப்போது தனிஷா! 'ஷ்ஷ்ஷ்...' அதுதான் அவர் அறிமுகமாக இருக்கும் த்ரில்லர்... அக்காவும் நடிப்பு டிப்ஸ் கொடுக்கும் விஷயத்தில் 'ஷ்ஷ்...' என்கிறாராம். 'இயல்பாக இரு... அது போதும்' என்று சொல்லி விட்டாராம். இவருக்கு ஷூட்டிங்போது ஆக்ஸிடெண்ட்டாகி பயங்கரமாக அடிபட்டதில், அம்மா தனுஜாவும் டென்ஷனாக இருக்கிறாராம்; நடிப்பு பற்றி எதுவுமே பேசுவதில்லையாம். இப்படி எல்லாரும் 'ஷ்ஷ்ஷ்...' என்றிருந்தால் 'ஷ்ஷ்ஷின்' கதி?

கதியற்றவர்கள் என்று நாம் நினைப்பவர்கள்கூட சில சமயம் பிறருக்கு நற்கதி அளிக்க முடியும் என்பதற்கு, கமலா சண்டோய் கரே சான்று; கமலா என்பது வீட்டு வேலைகள் செய்து வயிற்றைக் கழுவிக் கொண்டிருந்த ஒரு சாதாரணப் பெண்மணியின் பெயர். இவர், மும்பையிலுள்ள காமா ஹாஸ்பிடலுக்கு தன் வாழ்நாளின் சேமிப்புத் தொகையான ரூ.7400ஐக் கொடுத்திருக்கிறார் நன்கொடையாக. பத்து வருடங்களுக்கு முன்பு இவர் கருப்பை புற்று நோயுடன் இந்த ஆசுபத்திரிக்கு வந்தபோது, சீதா தில்வானி என்ற டாக்டர் இவருக்கு ஆபரேஷன் செய்து, மறு வாழ்வு கொடுத்தாராம். அந்த டாக்டருக்கு இவர் முகம் கூட மறந்துவிட்டது. ஆனால் தமக்கு வாழ்வளித்தவரை மறக்காமல், தாம் இறந்தபிறகு தம் சேமிப்பை இந்த மருத்துவமனைக்கே வழங்கிவிடச் சொல்லியிருக்கிறார் கமலா, தாம் வேலை செய்த வீட்டு முதலாளியிடம்! அவரும் அப்படியே செய்ய, நெகிழ்ந்து விட்டார் டாக்டர் தில்வானி. 'பணக்காரர்கள் வாரி வழங்கும் லட்சங்களைக் காட்டிலும், இந்த வேலைக்காரியின் நன்கொடை அதி உத்தமமானது; விலை மதிப்பற்றது. அதில் ஆபரேஷன் தியேட்டருக்குரிய உபகரணங்களை வாங்கியிருக்கிறேன்' என்கிறார் அகமும் முகமும் மலர.

• தனிஷா



முகம் மலரக் காணப்படும் மற்றொரு நபர்... நம்பினால் நம்புங்கள்... நம்பாவிட்டால் போங்கள்... நம்ம ஸல்லுதான்; அதாங்க ஸல்மான்கான். சேதுவின் இந்திப் பதிப்பான 'தேரே நாம்'மின் நாயகன் இவர்தான். 'ஒருவிதத்தில் இது என் வாழ்வின் உண்மைக் கதையுடன் ஒத்திருக்கிறது; எல்லாம் முடிந்தபின்தான்,

காதலி தன் காதலனின் அருமை பெருமைகளைத் தெரிந்து கொள்கிறாள்' என்கிறார் ஐஸ்வர்யாவை நினைத்துக் கொண்டு. ஆனால் மலர்ச்சிக்குக் காரணம் காட்ரினா கைஃப்! 'பாஜிராவ் மஸ்தானி'யில் இவருடைய கதாநாயகி! இப்போது நிஜவாழ்விலும் கதாநாயகியாக வம்பளக்கப்படுபவர். இருவரும் அதை மறுத்தாலும், சல்லு அமெரிக்க டூரிலிருந்து திரும்பியபோது, அர்த்தராத்திரியில், ஏர்போர்ட்டில் அவரை வரவேற்க கேட்டி காத்திருந்தாரே...' காத்துக் கிடப்பதில் சுகமுண்டுதான்... ஆனால் எத்தனை காலம் வரை? "நான் நிச்சயம் திருமணம் செய்து கொள்வேன்; அப்பாவாவேன்; ஆனால் எப்போ என்பதுதான் நிச்சயமில்லை" என்கிறாரே கான்?



▪ விவேக்



▪ ஐஸ்வர்யா



▪ சல்மான்கான்

நிச்சயமில்லைதான்... யாருக்கு என்ன நடக்கும் என்று. விவேக் ஓபராய்க்கு விபத்து ஏற்பட்டு, அதன் இயக்குநர் மணிரத்னத்துக்கு நெஞ்சு வலி வந்து, படப்பிடிப்பு ரத்தாகி... ஐஸ்வர்யா தீவிரமாகப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறாராமே! கடவுள் ஐஸாக உருகி, 'மணி'யான படம் தயாராக உதவட்டும்.

- ஜெய்ஸ்ரீ ராஜ்

நடக்குமென்பார்; நடக்கும்!



மேஷம் : எவ்வளவு தான் பர்ஸைப் பத்திரப்படுத்தினாலும் இந்த வாரம் செலவு எகிறும். இருந்தாலும் பலவழிகள்ல பணம் வந்து பாக்கெட்டை நிரப்பும். குடும்பத்துல மகிழ்ச்சி நிலவும். இயந்திர வகை, இண்டஸ்ட்ரீஸ், கமிஷன், காண்ட்ராக்ட்ஸ் இந்த வகையில எதிர்பாராத லாபம் வரும். புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அலுவலகத்தில் உயரதிகாரிகள் பாராட்டு உண்டு. புதிய முயற்சிகள்ல வெற்றி உண்டு.

ரிஷபம் : இந்த வாரம் தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். மனசுல தன்னம்பிக்கையும், தெளிவான சிந்தனையும் பிறக்கும். இதுவரை இருந்து வந்த குழப்பம், பிரச்னைகள் இப்ப மாயமாகும். சிலருக்குப் புதிய பொறுப்பு, பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பிருக்கு.பேச்சில் நிதானம் அவசியம். முன்ன பின்ன தெரியாதவங்ககிட்ட அதிகமா வாய்விட வேண்டாம். கொடுக்கல் வாங்கல் சுமுகமா இருக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டு உண்டு.

மிதுனம் : இதுவரை தாமதமாகிவந்த காரியங்கள் அனுகூலம் பெறும். பண நடமாட்டம் தாராளமா இருக்கும். எதிர்ப்புகள் விலகும். வாரத்தின் பின் பகுதியில எதிர்பாராத பயணம் உண்டு. புதிய முயற்சிகள் கைகூடும். வெளியூர் மற்றும் வெளிநாடு போறவங்களுக்கு இது நல்ல நேரம். கடன் தொல்லை மறையும். சினிமா, நாடகம், ஓவியம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும்.

கடகம் : இந்த வாரம் எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு. ஒரு சில பிரச்னைகள் வந்து இம்சை பண்ணலாம். பொறுமையாக இருப்பது நல்லது. மேலதிகாரிகளுடன் அனுசரித்துப் போவது நன்மை தரும். புதிய வேலை முயற்சிகள்ல இப்ப இறங்க வேண்டாம். கொடுக்கல் வாங்கல் கைகொடுக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் இருப்பவங்க கொஞ்சம் தள்ளிப் போடறது நல்லது. குடும்பத்தில் குதூகலம் பிறக்கும். இதுவரை பிரிந்து இருந்தவங்க இப்ப ஒண்ணு சேர வாய்ப்பிருக்கு. வீடு, மனை, வாங்க இது நல்ல நேரம். பெண்களுக்கு இது அதிர்ஷ்ட வாரம்.

சிம்மம் : இந்த வாரம் எதிர்பாராத தனலாபம் உண்டு. மனசுல தன்னம்பிக்கை பிறக்கும். புதிய வேலை முயற்சிகள்ல இருப்பவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு உண்டு. சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவை உண்டாகும். வேலை சம்பந்தமாக சிலர் வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. தொழிலில் இதுவரை இருந்து வந்த குழப்ப நிலை இப்ப மாறும். வரவேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்குப் புதிய பொருள் சேர்க்கை, ஜாலி டூர், விருந்து உபசாரம் என்று மகிழ்ச்சி பொங்கும் வாரம்.

கன்னி : இந்த வாரம் திட்டமிட்டபடி காரியங்களை முடிப்பீங்க. எல்லோருடைய ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும். வேலை விஷயமா சிலர் வெளியூர் போக வாய்ப்பிருக்கு. பண வசதி தேவைக்கேற்ப கிடைக்கும். சுயமா தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. இதுவரை வராமலிருந்த பணம் வந்து சேரும். தாமதமாகிவந்த சுப காரியங்கள் இப்ப நிறைவேற வாய்ப்பிருக்கு. பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அழகு சாதனம்,

ஜூலை 23 முதல் 29 வரை

ரிஷப ராசிக்காரரான அஜீத்துக்கு புகழ், பாராட்டு கிடைக்குமாமே!

அலங்காரப் பொருட்கள், பொன், வெள்ளி, நவரத்தினம் ஆகியவை நல்ல லாபம் கொடுக்கும். சட்டம், இராணுவம், காவல் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு உண்டு.

துலாம் : இந்த வாரம் எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு. பெயர், புகழ் கூடும். முக்கிய மானவர்களின் ஆதரவும், உதவியும் கிடைக்கும். அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலை நிலவும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். சுய தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். கடன் தொல்லை மறையும். குரு குடும்பஸ்தானத்தைப் பார்க்கிறதால குடும்பத்தில் ஒற்றுமை அமைதி நிலவும். சொத்து சம்பந்தமான வழக்கு விவகாரங்கள்ல நன்மை உண்டு.

விருச்சிகம் : குருபலம் நிறைந்து இருக்கறதால, குடும்பத்துல ஒற்றுமை, அமைதி நிலவும். பொன், பொருள், ஆடை, ஆபரணம்னு நிறைய வாங்கி மகிழ வாய்ப்பிருக்கு. கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு தேடி வரும். சிலர் புதிய வீடு, மனை வாகனம் வாங்கலாம். பெண்களுக்கு இது அதிர்ஷ்டமான வாரம். அலுவலகத்தில் புகழ், பாராட்டு உண்டு. கொடுக்கல் வாங்கல்ல சுமுகமான நிலை ஏற்படும். கமிஷன், காண்ட்ராக்ட்ஸ் போக்குவரத்து சாதனம், இண்டஸ்ட்ரீஸ் ஆகிய துறைகள்ல உள்ளவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.

தனுசு : எந்தக் காரியத்தையும் திட்டமிட்டபடி செயல்பட்டு முடிப்பீங்க. எதிர்பார்த்த நல்ல செய்தி, நிதி உதவி உங்களைத் தேடி வரும். உத்தியோகத்தில் இதுவரையிருந்த பிரச்னைகள், எதிர்ப்புகள் மறையும். தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அவங்களால நன்மை உண்டு. சினிமா, நாடகம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்க வெற்றி நடைபோடுவாங்க. மருத்துவம், கெமிக்கல்ஸ், உலோகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.

மகரம் : மறைமுக நேர்முக எதிர்ப்புகள் மறையும். எதிரிகள் அடங்கிப் போவாங்க. குடும்பத்துல கணவன் மனைவி உறவு சுமுகமா இருக்கும். இதுவரை இருந்துவந்த கருத்து வேறுபாடுகள், மோதல்போக்கு விலகும். மாணவர்களுக்கு முன்னேற்றம் உண்டு. சுயமாகத் தொழில் பண்றவங்களுக்கு பொருளாதார மேன்மை கிடைக்கும். கொடுக்கல் வாங்கல் கை கொடுக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவ முன் வருவாங்க.

கும்பம் : உங்களை ரொம்ப டென்ஷனாக்கிக் கொண்டிருந்த தடைகள், தாமதங்கள், பிரச்னைகள் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி, குதூகலத்துக்குக் குறைச்சலில்லை. கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு உண்டாகும். வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு. இரும்பு, உலோக வகை, இண்டஸ்ட்ரீஸ், காண்ட்ராக்ட்ஸ், எலக்ட்ரானிக்ஸ், தோல் பொருட்கள் ஆகிய இனங்கள் ஆதாயம் தரும். அலுவலகத்தில் சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். வேலை விஷயமா வெளியூர் போக வாய்ப்பிருக்கு.

மீனம் : இந்த வாரம் பண வசதி தாராளமா கிடைக்கும். மனசுல தன்னம்பிக்கை, துணிச்சல் கூடும். முக்கியமானவங்க தொடர்பு ஏற்படும். அவங்களால நன்மையுண்டு. வராமல் இழுத்தடித்துக் கொண்டிருந்த பணம் இப்ப வந்து சேரும். கடன் தொல்லை குறையும். சினிமா, நாடகம், நாட்டியம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம். எழுத்து, பத்திரிகை, கெமிக்கல்ஸ் ஆதாயம் தரும்.

அக்னிசர்மா பக்கம்

எந்த நூற்றாண்டிலும் இந்து மதம்

என்று தொடங்கியது என்று நாள், கிழமை, ஆண்டுக் கணக்குகளால் அறுதியிட்டுச் சொல்ல முடியாமல் இருக்கக் கூடியது இந்து மதம், நவீனம் என்று சொல்லப்படக்கூடிய பலவற்றைத் தன்னுள் ஏற்கெனவே கொண்டது. சொல்லப் போனால், பழைமைக்குப் பழைமையாய், புதுமைக்குப் புதுமையாய் விளங்குவது.

யஜுர் வேதத்தில் ஒரு ரிஷியைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. மறுநாள் தான் நடத்தப் போகும் யாகத்துக்காகப் பொருட்களைச் சேமித்துக் கொண்டிருக்கிறார். அக்னி மூட்டத் தேவைப்படும் சமித்துக் குச்சிகளைக் கட்டுகட்டாகக் கட்டி வைக்கிறார். அப்படிக் கணக்குப் போடும்போது, எண்களைக் குறிப்பிடுகிறார். தசம் (பத்து), சதம் (நூறு), சஹஸ்ரம் (ஆயிரம்) என்று தொடங்கி அயுக்தம் (பத்தாயிரம்), நியுக்தம் (லட்சம்), பிரயுக்தம் (10 லட்சம்), கோடி (கோடி), அத்யுதம் (10 கோடி), நியர்புதம் (100 கோடி), ஸமுத்ரம் (1000 கோடி), மத்யம் (10000 கோடி), பரந்தம் (லட்சம் கோடி) என்று அடுக்குகிறார். ஒன்று எழுதி அதற்குப் பின் எத்தனை பூஜ்யங்களை எழுதினால் என்ன சொல்ல வேண்டும் என்று புரியாமல் தடுமாறும் இன்றைய காலகட்டத்தில்கூட இது வியக்க வைக்கிறது.

உடல்நலம் பற்றிய ஆயுர்வேதம் முதல் பல வேறு அறிவியல் சாஸ்திரங்கள் வரை, வேதங்களின் உப அங்கங்களாகவே இருந்துள்ளன. பரத்வாஜரின் வைமானிக சாஸ்திரம் பல விமானங்களைப் (இவற்றுள் சில, இந்தக் கால ராக்கெட்டுகள் மாதிரிக் கூடத் தோன்றுகின்றன) பற்றிப் பேசுகிறது.

அறிவியலும் ஆன்மிகமும் விரவிக் கிடக்கிறது என்பதோடு மட்டும் இதை விட்டு விட முடியாது; விட்டு விடவும் கூடாது. அறிவியல் செய்திகள், அன்றாட வழிமுறைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், நெறிமுறைகள், இப்படி பலவும் பொதிந்து கிடக்கும் இந்து தர்மத்தில், மிக முக்கியமாய் இலங்கும் ஆதாரம் என்ன? ''மானுட இனத்தின் மேம்பாடு!''

சமய நெறிமுறைகளே சமுதாய மேம்பாட்டுக்காக, என்பதில் வேதகால ரிஷிகள் முதல் சுவாமி விவேகானந்தர் வரை, எல்லோருமே, உறுதி காட்டி வந்திருக்கிறார்கள்.

சந்நியாஸி ஆவதற்கு முன்னால், பிரம்மசர்ய விரதத்தின்போதே, ''பவதி பிக்ஷாந்தேஹி'' என்று செல்கிறார் சின்ன பாலகனாய் இருந்த சங்கரர். ஏழ்மையில் வாடி வதங்கி, இல்லாமையில் சுருண்டு கிடந்த ஒரு பெண்மணி, தம் இல்லத்தில் இருந்த ஒரேயொரு நெல்லிக்கனியை அவருக்கு அளித்தாள். அந்தப் பெண்ணின் நல்ல மனதுக்கு இளகி, மஹாலட்சுமி மாதாவை எண்ணி 'கனகதாரா ஸ்தோத்திரம்' பாடினார். இந்த நிகழ்ச்சி நமக்குத் தெரியும். ஆனால், உடனே அகமகிழ்ந்து பொன்மழையைப் பெய்துவிடவில்லை, பங்கயச்செல்வி. தன் மீது ஸ்தோத்திரம் பாடிய சங்கரக் குழந்தையின் முன் பிரத்யக்ஷமானாள் அந்தத் தாய். 'என்ன வேண்டும்?' என்று கேட்டாள். ''நெல்லிக்கனி கொடுத்த ஏழைப் பெண்ணுக்கு ஐஸ்வர்யம் கொடு தாயே!'' என்று கேட்டும் விட்டார் சங்கரர். மஹாலட்சுமி தயங்கினாள். ''இந்தப் பெண்மணியும் அவளுடைய குடும்பத்தாரும், அவரவர்கள் செய்த வினைக்கு அநுபவிக்கிறார்கள். ஐஸ்வர்யம் பெறும்படி இப்போதைக்கு அவர்களின் விதிப்பயனும் வினைப்பயனும் இல்லை.'' சாட்சாத் செல்வ நாயகியே சொன்ன விடை. சங்கரர் விடுவாரா? ''பரவாயில்லை அம்மா, இப்போது இந்தப் பெண் கொடுத்த நெல்லிக்

டாக்டர் சுதா சேஷய்யன்



கனி, முன்னர் செய்த தீவினைகளையெல்லாம் துடைத்து விடாதா?'' என்று வாதிட்டார். தற்போது செய்த நன்மையைச் சுட்டிக் காட்டி சங்கரர் வாதிட, இறுதியில், தன்னலமற்ற அந்த வாதத்துக்கு மகிழ்ந்த மஹாலட்சுமி தங்கமழையைப் பெய்வித்தாள்.

ஆதி சங்கர பகவத் பாதரின் மகிமையைக் காட்டுகிற சம்பவம் இது. அதேசமயம், வேறு சில மேன்மைகளையும் இதுவே விளக்குகிறது. இதில் ஒன்று, வாழ்க்கையின் பயனே வேண்டியவர்க்கு உதவுதல் என்பதாகும். அதனினும் இன்னொன்று, மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்த மஹனீயர்களும் கடவுளர்களும் பாடுபட்டிருக்கிறார்கள் என்பதாகும்.

சாதாரணமாக எல்லோரும் 'அடுத்தொரு பிறவி வேண்டாம்' என்றுதான் ஆண்டவனிடம் யாசிப்பது வழக்கம். ஆனால் மனிதப் பிறவி வேண்டும் என்று கேட்டவர்களும் உண்டு. இறைவனது திருத்தாண்டவத்தைக் காணக் காண, என்றும் மனிதப் பிறவி வேண்டும் என்றார் ஒருவர். குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும், பனித்த சடையும், பவளம் போல் மேனியும், அதனில் பொலிந்த பால் நிறத் திருநீறும், எடுத்தாடும் திருப்பாதமும் காணுதற்கு மனித்த பிறவி வேண்டும் எனக் கேட்டார். நாவுக்கரச நாயனார் இப்படிக் கேட்க, ஆழ்வாரோ ஏறத்தாழ இது போன்றே தன் ஆசையை உரைத்தார். பச்சை மாமலை போல் மேனியும், பவள வாயும் கமலச் செங்கண்ணும் கொண்ட அச்சுதனை, அமரர் ஏறானவனை, ஆயர்தம் கொழுந்தைக் கண்ணுறும் இன்பம் வேண்டும், அதனினும் இந்திரலோகம் ஆளும் சுவையும் வேண்டாம் என்றார். தெரிந்து புரிந்து உணர்ந்து புலன்களையெல்லாம் முனைப்பாக்கி, சித்தத்தைத் தூய்மையாக்கி, ஆண்டவன்பால் செலுத்தும் பேறு மானுடப் பிறவியின் பேறு. எனவே, மானுடப் பிறவி மகத்தானது என்றார்கள் மஹனியர்கள்.

அந்த மானுடப் பிறவியின் இன்னும் பெரிய மகத்துவம், சமுதாயமாகும் கூட்டு வாழ்க்கை. ஒருவருக்கொருவர் ஒட்டாய் உறவாய், வாழும் வாழ்க்கை.

எனவேதான், இறைவன் பால் செலுத்தும் பக்தி சமுதாயப் பணியில் செழிக்க வேண்டும் என்றும் அந்த மஹனீயர்கள் எண்ணினார்கள்.

மஹனீயர்கள் பலரின் அநுபவமொழிகளே இந்து தர்மத்தின் வழிமுறைகளாயின. சட்ட திட்டங்கள் உடைப்பதற்கல்ல; சட்ட திட்டங்கள் ஆக்கபூர்வ அணுகுமுறைக்கு என்பதை உணர்ந்து கொண்ட இந்துமதம், சமுதாய நோக்கோடு சட்டதிட்டங்களைப் போட்டது; சில சமயம், சட்டதிட்டங்களைத் திருத்தியும் ஏற்றுக் கொண்டது.

பராசர முனிவரின் மகன் வியாஸர். இவருக்குத் தாய் சத்யவதி வைத்த பெயர் 'கிருஷ்ணா' என்பதேயாகும். கறுப்பாக இருந்ததால் 'கிருஷ்ணா'; தீவில் பிறந்ததனால் 'த்வைபாயனர்' இரண்டும் சேர்த்து 'கிருஷ்ண த்வைபாயனர்'. வேதங்களை நான்காக வகுத்துத் தொகுத்துக் கொடுத்ததனால், வேத வியாஸர் என்று பெயர் பெற்றார். வேதங்களைத் தொகுத்த அவரே, ஸ்ரீமத் மஹாபாரதத்தையும் இயற்றினார். பின்னர் ஸ்ரீமத் பாகவதத்தையும் இயற்றினார். புராணங்களையும் தொகுத்தார்.

வேதங்களையே தொகுத்த அவர், ஏன் கதைகளையும் இயற்ற வேண்டும்?

வேதங்கள் நீதிகளை நேரடியாகச் சொல்லக் கூடியவை; கடினமாகச் சொல்லக் கூடியவை. பண்பட்ட மனங்களுக்கும் பக்குவப்பட்ட உள்ளங்களுக்கும் அவை புரியும். ஆனால், சராசரி மனங்களுக்கு...? சூழ்நிலைக் கைதிகளாய் வாழும் ஜீவன்களுக்கு...? அதனால்தான், மஹாபாரதமும் பாகவதமும் இயற்றினார் வியாஸர்.

சனாதன தர்மம் என்றால் என்ன?

வாழ்க்கை முறையில், அறிவியல் பூர்வமான அணுகுமுறையையும் கொண்டது சனாதன தர்மம். 'காலம் நிலையற்றது' என்று அறிவியல் கூறும். இதையே எதுவும் அறியாதவள் என்று நினைக்கப்படுகிற பாட்டி இப்படிச் சொல்வாள்: ''நமக்கு ஒரு வருஷமா... தேவர்களுக்கு ஒரு மாசம்... அதுதான் பகவானுக்கு ஒரு நாள்'' பாட்டி சொல்லும்போது, இது கிண்டலுக்குரியதாகத் தெரியும். யோசித்துப் பார்த்தால், 'காலம் நிலையற்றது; ஒப்புமைவு கொண்டது' (Time is not absolute - it is relative) என்ற கோட்பாட்டை மிக எளிமையாகச் சொன்ன முறை என்பது



புரியும்.

அறிவியல் பூர்வமான அணுகுமுறை என்பது அறிவியலையும், வேதியல், இயற்பியல், உயிரியல் என்பது போன்ற செய்திகளையும் தெரிந்து வைத்திருப்பது மட்டுமல்ல. அறிவியல்தனமாகச் சிந்திப்பதும், அறிவியல் பூர்வமாக யோசிப்பதும் தான், உண்மையான அறிவியல். அறிவியல்தனத்திற்கு என்ன செய்ய வேண்டும்? நிறையக் கேள்விகள் கேட்க வேண்டும். ஏன்? என்ன? எதற்கு? என்று தேட வேண்டும். வேதாந்தம் சொல்லுவதும் இதே தேடலைத்தான்!

சின்னச் சின்ன சடங்குகளில் தொடங்கி பெரிய பெரிய கோட்பாடுகள் வரை, பலவற்றிலும் அறிவியலையும் ஆன்மிகத்தையும் பின்னிப் பிணைத்துக் கொடுக்கிறது சனாதன தர்மம்.

இந்து மதத்தின் அணுகுமுறையும் இதுவே. பல வடிவங்களில் கடவுளர்கள்; பலவிதச் சடங்குகள்; பலவித வழிபாடுகள். இவை ஒன்றுக்கொன்று முரண்பாடானவை அல்ல. Taste differs என்று அன்றாட வாழ்க்கைக்குச் சொல்வதையே ஆன்மிக வாழ்க்கையிலும் வைத்து, 'எல்லாவற்றையும் மதிக்க வேண்டும்' என்றும் வலியுறுத்தியது சனாதன தர்மம்.

அண்டபகிரண்டத்தில் அனைத்துமே ஆண்டவனின் வெளிப்பாடுகள். அப்படியானால், உயர்வென்றும் தாழ்வென்றும் உண்டோ?

எல்லையற்ற இறைமையை அடைகிற முயற்சியில் தர்மத்தைக் கைக்கொண்டு இயங்கும் முறைமையே 'வாழ்க்கை' என்பதாகும். எல்லாம் இறைமை என்று உணர்வதே 'ஞானம்' என்பதும் ஆகும். இறைமைக்கு 'வாலறிவன்' என்று பெயர் கொடுத்தார் வள்ளுவர். அந்த வாலறிவனை உணர்வதே அறிவு; அதுவே ஞானம்.

இந்த நூற்றாண்டில் இந்து மதம் என்று தலைப்புத் தந்தவுடன் பலரும் கேட்ட (கேட்க நினைத்த) கேள்வி: நூறு வருஷமா? அப்படின்னா 1900ல் ஆரம்பமா? இல்லை 2000ல் தொடக்கமா?

அநாதியாய், ஆதியந்தமற்றதாய் இயங்கும் சனாதன தர்மத்தை நூற்றாண்டுக் குவளைக்குள் நுழைத்து விட முடியுமா? வேத வியாஸரையும், விவேகானந்தரையும், சங்கர பகவத் பாதரையும், ராமானுஜரையும் இதில் பாதி, அதில் பாதி என்று கூறு போட்டு விட முடியுமா?

எந்த நூற்றாண்டுக்கும் பொருத்தமான இந்து தர்மத்தின் கொள்கைகளைத் தொட்டுப் பார்க்கும் முயற்சியே இது!

''சம்பவாமி யுகே யுகே'' என்பார் கிருஷ்ண பரமாத்மா. 'தர்மத்தை நிலை நிறுத்த அவ்வப்போது, யுக யுகத்திற்கும், கால காலத்திற்கும் வருவேன்' என்பார். தர்மத்தை நிலை நிறுத்தவும், வலுப்படுத்தவும் வந்த அவதாரங்கள், மஹனீயர்கள். தர்மத்தைச் செயலாக்க ஏற்பட்ட கொள்கைகள்.

இந்து மதத்தைப் பொறுத்தவரை நிறைய கதைகள் உண்டு; நிறைய கதாபாத்திரங்கள் உண்டு. தர்மத்தை, நீதியை, நியாயத்தைச் செயல்படுத்த வந்த சம்பவங்களே இவை!

எந்தக் காலத்திற்கும் எந்த இடத்திற்கும் பொருத்தமான கொள்கைகளை, அந்தந்தச் சூழலுக்கேற்ப தந்துள்ள கதைகளே இவை!


எந்த நூற்றாண்டுக்கும் பொருந்தும் இந்து மதத்தின் கொள்கைகள், மானுடத்தை இணைக்கட்டும். மானுட மகத்துவம் உயர வகை செய்யும் ஆதிப் பரம்பொருளுக்கும், ஆசார்ய பரம்பரைக்கும் அனந்தகோடி நமஸ்காரங்கள்! எந்தரோ மஹானுபாவுலு, அந்தரிகி வந்தனமு!

(முற்றும்)



ஜில்லு மல்லு

—கதிர்


எனனடா, துருப்புடிச்சிடப் போகுதுன்னு துடைச்சிக் கிட்டிருக்கியா?
சரி... இரும்படிக்கிற இடத்துலே ஈக்கு என்ன வேலை?
உன் மியூசிக்கப் பத்திதானே சொல்றே?
ஏய்... ஷங்கரோட 'பாய்ஸ்' படத்தைத் தொடர்ந்து சேகரின் 'கேர்ல்ஸ்' அப்படின்னு ஒரு படம் பண்றாங்க. அதுல நான்தான் மியூசிக் டைரக்டர்.
சேகரின் 'கேர்ல்ஸ்' - டைட்டிலே ஒரு மாதிரியா இருக்கே.
அது ஒரு க்ரைம் கலந்த காமெடி, செண்டிமெண்டல், பேமிலி லவ் ஸ்டோரி...
பேசாமல் கமர்ஷியல் படம்னு சொல்லிட்டுப் போயேன்.
இந்தப் படம் மட்டும் ரிலீஸ் ஆகட்டும். இந்தத் திரை இசை உலகமே மூக்கு மேலே விரலை வைக்கப் போகுது.
மூக்கு மேலே விரலை வைக்கப் போகுதோ... இல்லே காது மேலே கையை வைக்கப் போகுதோ......
இப்ப நீ வாய் மேலே விரலை வை!
விஸிடி பிரிண்ட்டு, ஆஹா, சூப்பர்!

வீட்டின் அழகு கதவில் தெரியும் !

Now Flat Buyers insist on

MAYURAM

TIMBER DOORS



because



Contact:

MAYURAM TIMBER & GENERAL TRADING CORPN.

H.O.: 83, G.S.T.Road, Chennai - 45. ☎:236 8297/238 1281.

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Chennai - 600 017. ☎:2434 5207

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka

